
சிவகங்கை - தமிழ்நாடு -
623 560
MEERA
மீரா
முகவரிகள்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

495

# முகவரிகள்

மீரா

அன்னம்
மனை எண்: 1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் - 613 007.

முகவரிகள் / © மீரா / முதல் பதிப்பு: ஆகஸ்டு 2004 / வெளியீடு: **அன்னம்**, மனை எண்: 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் - 7/ அச்சாக்கம்: ஹேமமாலா சிண்டிகேட், சிவகாசி / **விலை ரூ. 50/-**

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Mugavarigal |
| Subject | : | Essays |
| Author | : | Meera |
| Language | : | Tamil |
| Edition | : | First Edn. August 2004 |
| Size of the Book | : | Crown 1x8 |
| Printing Point | : | 10.5 Pt. |
| Paper | : | 11.6 Cream wove |
| Number of Pages | : | 144 |
| Number of Copies | : | 1000 |
| Printers | : | Hemamala Syndicate, Sivakasi |
| Publishers | : | **ANNAM**<br>Plot No: 1, Nirmala Nagar<br>Thanjavur - 613 007. |
| Price | : | **Rs.50/-** |

# வாயில்களை வைத்தே ஒரு வசந்த மண்டபம்

**நா**ன் முதல்முறையாக தாஜ்மகாலைப் பார்க்கச் சென்ற போது தாஜ்மகால் நம் பார்வையில் பட்டுவிடாதபடி ஒரு பெரிய நுழைவாயில் கட்டப்பட்டிருப்பது கண்டு வெறுப்படைந்தேன்: "இடையில் இது ஏன் குறுக்கே?" வாயிலின் உள் நுழைந்து போனவுடன் திடீரென்று நீலவானில் ஒரு வெள்ளைக் கனவாய் மலைபோல் எழுந்து நின்ற தாஜ்மகாலின் காட்சி என்னை பிரமிக்க வைத்தது.

தொலைவிலிருந்தே தாஜ்மகாலைப் பார்த்துக்கொண்டு போயிருந்தால் இந்த பிரமிப்பு எனக்கு சாத்தியப் பட்டிருக்காது. நுழைவாயில் தேவைதான் என்று எனக்கு நானே முணுமுணுத்துக்கொண்டேன்.

தாஜ்மகாலுக்கு இது சரிதான். ஆனால் இன்று எருக்கஞ் செடிகள் மண்டிப்போய், மேடாகிப்போன சிவகங்கை அரண்மனைக்கு ஒரு நுழைவாயில் தேவைதானா? தேவைதான். பாசி படிந்து போனாலும், இன்றும் நிமிர்ந்து நிற்கும் நெடிதுயர்ந்த அந்த வாயிலைப் பார்க்கிற போது தான், ஒரு காலத்தில் கொடி கட்டி அரசோச்சிய வீரர்களின் வாழ்க்கை நம் கண்முன் விரிகிறது. வாயிலின் தேவை புரிகிறது.

முன்னுரை என்பது ஒரு நூலுக்கு மிகவும் தேவை என்று எண்ணியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள். அதனால்தான்

'பாயிரம் இன்றேல் பனுவல் இல்லை' என்று சொல்லும் அளவுக்குப் போய் இருக்கிறார்கள்.

முன்னுரைகளைப் பற்றிப் பேசுகிறபோது ரசூல் கம்சுதோவ் எனும் சோவியத் நாட்டு அலார் மொழிக் கவிஞர் ஓர் உதாரணம் காட்டுகிறார்:

அவரது தாகெஸ்தான் நாட்டுக் குதிரை வீரர்கள், என்ன தான் அவசர வேலையாக இருந்தாலும், தன் வீட்டு வாசலிலேயே குதிரைமீது தாவி ஏறுவது இல்லையாம். குதிரையின் கடிவாளத்தைக் கையில் பிடித்தபடியே தன் வீட்டையும், வீதியையும், கிராமத்தையும் கடந்து செல்கிறவரை, நடந்தே போகிறார்கள். வீட்டில் எதை யேனும் விட்டுவிட்டோமா, வழியில் என்னென்ன இடர்கள் வருமோ என்றெல்லாம் சிந்தித்தபடியே நடந்து சென்று, பின்னரே தங்கள் குதிரைமீது தாவி ஏறி, குதிரை யின் குளம்படிப் புழுதியில் மறைந்து போவார்களாம். சிந்தனையோடு கூடிய இந்த நடை போன்றதுதான் ஒரு நூலைத் தொடங்கும் முன் இருக்கும் முன்னுரை என்று பேசுகிறார் ரசூல் கம்சுதோவ்.

ஆனால் இதே முன்னுரையின் பணி, ழீன் ழெனே எழுதிய பிரெஞ்சு புத்தகத்தைப் பொறுத்தமட்டிலும் வேறாக இருக்கிறது. சிறைத்தண்டனை பெற்ற ழீன் ழெனே எனும் குற்றவாளி, சிறையில் தன் கைக்கு எட்டிய பழுப்புக் காகிதப்பைகளின் மீது குற்றவாளிகளும், தன் இன போகிகளும், ஆண் விபசாரிகளும் நிறைந்த தன் உலகைப் பற்றி உண்மையோடு எழுதி வைத்தான். கீழ்த்தரமான குப்பை என்று பொதுமக்களால் தள்ளப்பட்டு விடக்கூடிய இந்த நூலுக்கு, பிரெஞ்சு தத்துவ மேதை ழீன் பால் சார்த்தர் சுமார் 50 பக்கங்களில் ஒரு முன்னுரை எழுதினார். இந்த

முன்னுரையினாலேயே. அழுக்கு மனிதன் என்று உதாசீனப்படுத்தப்படக்கூடிய ழீன் ழெனே, 'புனிதத் தன்மையுடைய ழெனே' என்று உலகப் புகழ் பெற்றான். இங்கு முன்னுரை யின் பணி வேறாகிறது.

இன்றைய தமிழ் எழுத்துலகில் ஒரு 'கிரியா ஊக்கியாக' சலியாது இயங்கி வரும் கவிஞர் மீரா பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு நூல்களுக்குத் தான் கொடுத்த முன்னுரைகளை மட்டுமே தொகுத்து ஒரு நூலாக்கி இருக்கிறார். வாயில்களை மட்டுமே வைத்து ஒரு வசந்த மண்டபத்தை உருவாக்கியிருக்கிறார்.

முன்னுரையின் பணி நூலுக்கு நூல் மாறுபடுகிறது என்பதை நன்கு உணர்ந்தவர் என்பதனாலேயே அவரது முன்னுரைகள் தம் நடையில், செய்தியில், நையாண்டியில் கூட நூலுக்கு நூல் மாறுபடுகின்றன. அவை பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டவை என்பதும் இதற்கொரு காரணமாகலாம்.

அகராதியானாலும், நாவல் ஆனாலும், ஒவ்வொரு நூலின் நுழைவாயிலிலும், சிரித்த முகத்துடன் தோன்றி, வாசகர்களுடன் நகைச்சுவையோடு உரையாடி, அவர்கள் தோள்மேல் கைபோட்டு நூலுக்குள் அழைத்துச் செல்கிறார்.

கவிதை வானில் மட்டுமே சிறகடித்துக் கொண்டிருந்த தோழர் மீராவை, உரைநடைச் சமவெளியில் இறக்கிய பெருமை இம்முன்னுரைகளைச் சாரும். நல்ல போக்கு களை எங்கே கண்டாலும், எவரிடத்தில் கண்டாலும்

அவற்றை உடனுக்குடன் பாராட்டி ஊக்குவிக்கும் பரந்த மனமும், செயல்பாடும் கொண்ட மீராவின் ஆளுமையை, அவரது கவிதைகளைக் காட்டிலும், இம்முன்னுரைகள் நன்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

''இவன் என்ன கிழித்து விட்டான்?'' ''அவன் என்ன எழுதிவிட்டான்?'' ''நான் கம்பனைச் சாகடித்தேன்'', ''பாரதிதாசன் காலை ஒடித்தேன்'', என்று பேசித் திரியும் தமிழ்க் கவிஞர்களின் உலகில் மீரா ஓர் அபூர்வப் பறவை என்பதை இம்முன்னுரைகள் மெய்ப்பிக்கின்றன. தன்னைக்கூட தாழ்த்திக்கொண்டு மற்றவர்களை உயர்த்தும் பாராட்டும் பண்பு தமிழுலகில் அரிது; புதிது.

எந்த நூலுக்கு முன்னுரை எழுதினாலும், தன்னுடைய கருத்துக்களைக் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல், நூலாசிரியரின் கருத்துக்களோடு அன்புப்போர் தொடுக்கும் மீராவின் நடை நளினம் தமிழுக்கு நல்வரவு.

களவு நூலும், காவல் நூலும் கற்றுத்தேர்ந்த மதுரைக் காஞ்சிக் காவலர்களைப்போல், யாப்பதிகாரத்தை அதிகாரம் செய்ததுடன், புதுக்கவிதைப் புதையலும் எடுத்த மீரா, கவிதை நூல்களுக்குக் கொடுத்த முன்னுரைகள் நல்ல வாக்குமூலங்கள்.

இங்கே இந்நூலில், மீரா என்னும் பேராசிரியத்தனம் அற்ற ஒரு பேராசிரியரின் நகைச்சுவை உணர்வு மிக்க, நட்பின் அன்பு கனிந்த, ஒரு திறந்த மனம் பிரசன்னமாகிறது. அவரது ஆளுமை நம் அந்தராத்மாவில் இடம்பிடிக்கிறது.

**இந்திரன்**

# சில வரிகள்

இந்த நூலில் உள்ள 'தலைமுறைகள்', தமிழ் நாவல் நூற்றாண்டை ஒட்டி வெளிவந்துள்ள 'தமிழ் நாவல்-ஐம்பது பார்வை' என்னும் கட்டுரைத் தொகுப்பிலும் 'அடுத்த வீடு' 'தீபம்' இதழிலும் வெளிவந்தவை. மற்றவை அனைத்தும் பல சந்தர்ப்பங்களில் பல நூல்களுக்கு என்னால் எழுதப் பெற்ற முன்னுரைகளே... முகவரிகளே!

கடிதத்துக்கு முகவரி எப்படியோ அப்படி ஒரு நூலுக்கு முன்னுரை அவசியம்.

அவசியம் என்பதை உணரமுடிகிறதே ஒழிய, 'ஒரு வாரத்தில் முன்னுரை வேண்டும்' என்று கேட்கும் ஆர்வமுள்ள நண்பர்களின் அவசரத்தை என்னால் உணர முடியவில்லை; உதவ முடிவதில்லை.

எப்படியோ என்னிடம் முன்னுரை வாங்கியவர்கள் பாக்கியவான்கள்.

இந்த நூலுக்கு நானே ஒரு மகத்தான முன்னுரை எழுத வேண்டும்... பெர்னாட்சா ஆகவேண்டும் என்று ஆசைப் பட்டேன். அது பலிக்கவில்லை.

முன்னுரைக்காக இந்த நூல் இன்னும் தவம் கிடப்பது நியாயமல்ல என்று 'அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்' ஆசிரியர் திரு.இந்திரன் ஓடோடி வந்து அருள் பாலித்துள்ளார்.

அவர் என் பெயர்க்காரர்; அதனால் தான் இத்தனைப் பரிவும் பாசமும் பாராட்டும்!

நான் அவருக்கு ஏதாவது செய்யவேண்டும்.

இன்று முதல் அவர் ஏகபோகமாய் 'இந்திரன்' என்ற பெயரை ஆண்டு அனுபவிக்கட்டும். இனி 'இந்திரன் 1' என்று நான் குறுக்கே வரமாட்டேன். இது சத்தியம்.

**மீரா**

**காணிக்கை**

தேசப்பற்றும்
பொதுப் பணிகளில் சோர்வற்ற உள்ளமும்
அரசியலில் கண்ணியமும்
கலை இலக்கியங்களில் ஆழ்ந்த ஈடுபாடும்
உடைய அபூர்வ மனிதர்

சிவகங்கைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

**திரு. உடையப்பா சுப்பிரமணியன் அவர்களுக்கு**

கவிதை நூல்

✡

# மௌன்த்தின் நாவுகள்

✡

அபி

இது மௌனத்தின் நாவுதான். இதுவே சிலருக்குப் பிரபஞ்சத்தின் ரகசியத்தை வெளிப்படுத்தும் பிரணவ நாதமாகவும் இருக்கலாம்.

இது ஒற்றையடிப் பாதைதான். இதுவே உண்மையான இலக்கிய அன்பர்கள் உலாவரும் ராஜபாட்டையாகவும் இருக்கலாம்.

இது இன்னொன்றைப் போல இல்லை. இதைப்போல இன்னொன்றைப் படைப்பது கூட அத்தனை எளிதில்லை.

இது இதுவாகவே இருக்கிறது.

எலியட்டும் எஸ்ரா பவுண்டும் புதுக்கவிதையில் புலிகள் என்றே வைத்துக் கொள்வோம். அதற்காக அந்தப் புலி களைப் பார்த்து இங்கே சிலர் சூடு போட்டுக்கொண்டால் போதுமா?

அபி அபியாகவே இருக்கிறார்; இதில்தான் இவர் பெருமை அடங்கியிருக்கிறது.

''கனவுகளின் ஆழத்தில்
கற்பனையின் வேர்பாய்ச்சிக்
கவிப்பூக்கள் பூக்கின்றேன்''

என்று தன்னைக் காட்டிக்கொள்ளும் இவரிடம் கவிதை யின் மொத்த வனப்பையும் தரிசிக்க முடிகிறது.

இங்கே யுகமுகடுகளுக்கே சென்று நிமிஷ நுரைகளோடு நேரங்கள் சரிவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஓர் அதிசயக் கவிஞரைப் பார்க்க முடிகிறது. இங்கே தன்னையே எரித்து வெளிச்சம் உண்டாக்கித் தன் காதலியைத் தேடும் ஓர் அபூர்வக் காதலனைச் சந்திக்க முடிகிறது. இங்கே இமைக் கத்திரியால் துண்டிக்கப்படும் நித்திரையையும் தானே ஊர்ந்து கொண்டிருக்கும் ஒற்றையடிப் பாதையையும் தன் அடர்த்திக்குத் தானே திகைக்கும் இருளையும் காற்றை நிறுத்திச் சோதனை போடும் இரவையும் காலுக்குரிய முகத்தைக் கற்பனை செய்துகொள்ளும் கால்பந்தையும் காணமுடிகிறது.

'அனுபவ கனம் மிகுந்த' இந்தக் கவிதைகளின் அழகை அனுபவிக்க வேண்டுமானால் ஒன்றின் மேல் ஒன்றாகப் படிந்த கற்பனைகளை விரித்து விரித்து உள்ளே உள்ளே புக வேண்டும். ஒன்றின்மேல் ஒன்றாக (overlapping) என்றால்

ஏதோ வெங்காயம் போல அல்ல - உரித்துப் போட்டால் மிஞ்சுவது எதுவுமில்லை என்று கூறிவிட.

இவை மொட்டுக்கள்; இதழ்களை விரித்துவிட்டுப் பார்த்தால் மகரந்தம் பொன்னிறமாகத் துலங்குமே, அந்த மொட்டுக்கள்! விதைகளை உள்ளடக்கிய அழகான மொட்டுக்கள்.

**அ**ழகின் உச்சி படிமம் என்றால் அதை முறைப்படி தொட்ட பெருமை இவருக்குரியது. இராமன் கை வில் போலவும் இராவணன் கை யாழ் போலவும் இவரிடம் படிமம் சொன்னபடியெல்லாம் கேட்கிறது.

இவர் பலவந்தப்படுத்துவதுமில்லை; அதனால் அது முரண்டு பிடிப்பதுமில்லை.

ஒரு காலத்தில் ஜாய்ஸ்கில்மர் (Joyce Kilmer) 'மரங்கள்' பற்றிப் பாடிய பன்னிரண்டு வரிக் கவிதை பலராலும் பாராட்டப் பெற்றது. பிறகு அதே கவிதை அவ்வளவு உயர்ந்த கவிதை இல்லை என்று தரமான இலக்கிய விமர்சகர்களால் தள்ளி வைக்கப்பட்டது. என்ன காரணம்?

- தன் பசி கொண்ட வேரால் பூமியின் மார்பில் பால் குடிக்கிறது.
- இலைக் கரங்களால் கடவுளைக் கும்பிடுகிறது.
- தன் கிளைகளில் குருவிக் கூட்டைச் சூடிக் கொண்டிருக்கிறது.
- பனி படிந்துள்ள நெஞ்சுடன் மழையோடு சேர்ந்து வாழ்கிறது.

இவையே 'மரங்கள்' தொடர்பாகக் கில்மர் தீட்டும் சித்திரங்கள் மரம் ஒரு மனிதப் பிறவியோடு (human being) ஒப்பிடப்படுகிறது. கவிதை முழுவதும் அமைந்த அடிப்படை ஒப்புமை (fundamental comparison) இதுதான். (இதைத் தவிர வேறு எதுவும் ஒப்பிடப்படவும் இல்லை) இந்த ஒப்பீடு முழுமையாக - முன்பின் பொருத்தமாக இல்லாமல் கவிதை சிதைகிறது; படிமம் கலைகிறது. முதலில் பூமித்தாயிடம் பால் குடிக்கும் குழந்தையாகவும் அடுத்து இலைக் கரங்களால் ஆண்டவனை வழிபடும் அடியவனாகவும் பின்னர் தலையில் தங்கவில்லை (குருவிக்கூடு) அணிந்த ஒரு மங்கையாகவும் இறுதியாக இயற்கையோடு ஒன்றி வாழும் ஒரு புனிதமான கிறித்துவத் துறவுப் பெண் (nun)ணாகவும் ஒரே மரம் உருவகப் படுத்தப்படும்போது குழப்பம் ஏற்படுகிறது. மனித உடலும் யானைத் தலையுமாக உள்ள உருவம்போல் நாலாவிதமான இந்தக் கலவை நம்மை மயங்க வைக்கிறது. ஏதேனும் ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி அந்த ஒன்றின் ஒவ்வோர் அம்சத்தையும் நுட்பமாகக் காட்டியிருந்தால் இக்கவிதை இன்னும் சிறந்து விளங்கியிருக்கலாம்.

இங்கே அபியின் 'நீலாம்பரி'யைப் பாருங்கள். அது படிமத்தின் சூக்குமத்தை நன்றாகப் புரிந்துகொண்டதன் வெளிப்பாடு. கவிதையின் பிற்பகுதி உறக்கத்தின் பின் விளைவுகளைப் பற்றிப் பேசுகிறது. முற்பகுதியோ உறக்கத்தை ஒரு பறவையாக உருவகப்படுத்துகிறது. இந்த உருவகம் மூளியாக இல்லாமல் முழுமை பெற்று விளங்குகிறது:

''பகல் வெளியில் எங்கோ
பறந்து போயிருந்த உறக்கம்
இதோ

படபடத்து
விழிக்கூட்டுக்குத் திரும்புகிறது.''

இதேபோல் பின்னால் ஆடுவதும் சிறகு பரப்புவதும் குஞ்சுகளுக்கு இரை ஊட்டுவதுமான பறவை இயல்புகள் உறக்கத்தோடு பொருத்திச் சொல்லப்பட்டுள்ளன. இந்தப் படிம அழகை ஏந்திவரும் உறக்கம் நம் அடிமனத்தை விழிக்க வைத்துவிடுகிறது. அபி 'நீலாம்பரி' என்று பெயரிட்டிருந்தாலுங்கூட இக்கவிதை நம் உணர்வு களுக்குப் பூபாளமாக அமைந்து விடுகிறது.

ஜாடியில் உள்ள பூவைப்போல் அல்லாமல் கொடியில் உள்ள பூவைப்போல் அபியின் கவிதைகளில் படிமம் இயற்கையாய் இருக்கிறது. 'யார் வருவீர்', 'ராப்பிச்சைக் காரன்' போன்ற கவிதைகள் இதற்குச் சான்றுகள்.

மன்மதன், தேவன், காமன் என்றெல்லாம் வழிவழியாக வருணிக்கப்பட்டதை மாற்றி ராப்பிச்சைக்காரனாக்கி யிருப்பது துணிச்சல்தான்.

''தங்கள் ஆன்மாக்களின் பசியை
அலட்சியம் செய்துவிட்டு
உனக்குப் படைக்கிறார்கள்''

என்று காமத்தைப் போ, போ என விரட்டும் கவிஞர்

''உனக்குத் தர் மமிடாவிடில்
உலகம் தழைப்பதேது?''

என்று எதார்த்தவாதிகள் 'பரிவோடு' சொல்வதையும் குறிப்பிடுகிறார்.

காமத்தின் 'ஜெக்கில்' ஆகிய காதலையும் ''இதயத்தை ஒரு தூரிகையாகச் செய்து'' அருமையாகத் தீட்டிக் காட்டுகிறார் அபி:

''இந்த வினாடிகளின் ஏக்கத்துக்காகவே
இத்தனை வருஷங்களைத்
தாண்டி வந்தேன்''

இந்த வரிகளை நம் பார்வை வருடும்போது-

"Unless that affinity (Love) is created in a moment it will not be created in years or even generations" என்ற கிப்ரானிய இசையைக் கேட்க முடிகிறது.

வினாடியுகம் - முரண்பாடான சொற்களால் ஆன தலைப்பு. அபி இந்த முரண்பாடான சொற்களுக்கு எவ்வளவு அற்புதமாய் உறவை உண்டாக்கிவிட்டார் - ஐன்ஸ்டீனின் சார்பியல் கோட்பாடு (Relativity theory) போல. அந்த அறிவியல் தத்துவத்தை விளக்குமாறு ஒருவன் கேட்ட போது ஐன்ஸ்டீன் வேடிக்கையாகச் சொன்னாராம்:

''ஒரு மணிநேரம் நீ அடுப்பின் மீது அமர்ந்திரு. நான் ஒரு மணிநேரம் என் அன்புக் காதலியுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். உனக்கு ஒரு யுகமாகத் தெரியும்; எனக்கோ அது ஒரு வினாடியாகத் தெரியும். இதுதான் அந்தத் தத்துவம்.''

அப்படித்தான் வினாடிக்குள் யுகத்தை அடிக்கிக் காட்டுகிறார் அபி.

**அ**பி காதலை மட்டும் காதலிக்கவில்லை. சொல்லப் போனால் இருட்டு, மௌனம், கண்ணீர், மரணம் இவற்றையே அளவுக்கும் அதிகமாகக் காதலிக்கிறார். அதனால்தானோ என்னவோ முன்பொருமுறை இவற்றையெல்லாம் லெபனான் தேசத்துத் தேவதாருக் காட்டிலே காதலித்து அடங்கிய அந்த கிப்ரானையும் காதலிக்கிறார்.

கவிஞரின் கவிஞர் கிப்ரான். அவர் மதவாதிகளின் கொள்ளிக் கண்களுக்கு ஆளானதையும் ஆசார முட்கள் அவர் பாதங்களைக் குத்திக் கிழித்ததையும் வேதனை யோடு வெளிப்படுத்துகிறார் அபி:

''நீ நிற்கும் சிலுவையின்
நிழலில் கூட
ஆணிகள்''

ஏசுவுக்குக்கூட மேனியில் மட்டும்தான் ஆணி அடித் தார்கள். கிப்ரானுக்கோ அவர் நிழல்மீதுகூட ஆணி அறையும் அளவுக்கு ஆத்திரம் அடைகிறார்கள். இவர் களுக்காக ஏன் பாடவேண்டும்? எனவேதான்

''உன் வேர்களை அரிக்கும்
பூமியை நோக்கி
உன் விழுதுகளை
ஏன் அனுப்புகிறாய்?''

என்று கேட்கிறார் அபி.

**பா**ர்மகள் மடியில் பலபாறை அடுக்குகளுக்கு அடியில் உறைந்திருக்கும் பாசில்கள் (fossils) போல் அபியின் கவிதைகளில் படிந்துள்ள அடுக்கடுக்கான கற்பனை களுக்கு அடியில் உள்ளார்ந்த மனிதாபிமானம் இருக்கக் காணலாம். தான் சிறகுகள் முறிந்து மழையாய்க் கண்ணீர் சிந்த நேர்ந்தபோதும் 'நசுக்கப்படுவோர் கண்ணீரை இடிகளாய் மாற்றிய' கிப்ரானைப் போலவே தான் இனந் தெரியாத சோகச் சுழலுள் சிக்கி இருந்தாலுங்கூட ஏழை எளியோரைக் கரை சேர்க்கும் உன்னதமான எண்ணங் கொண்டவர் அபி.

'தேடித்தேடி' என்ற கவிதையில் இரவு எதை எதையோ தேடிப் போவதாகச் சித்தரிக்கிறார். எதைத் தேடுகிறது என்று கேள்விக்குமேல் கேள்வி எழுப்புகிறார்:

''முதலாளிகளின்
செவிச்சேற்றில் புதைந்து
செத்துப்போன
அழுகுரல்களை இது
தேடுகின்றதோ?''

என்பதும் அக்கேள்விகளுள் ஒன்று. இது முதலாளித் துவத்தின் முகமூடியைக் கிழித்துக் காட்டவில்லையா?

''இங்கே ஒரு புயல் பிறந்தால்
இதன் வளங்களைச்
சுட்டெரிக்கும் சுயநலக்காரரின்
சுவடுகள் அழியும்
பிறக்கவேண்டுமே.''

'பிறக்கவேண்டுமே' என்பதில் உள்ள ஏக்கத்தொனி நம்மை எழ வைக்கிறது.

இவரால்தான் ஆரவாரமில்லாமல் புரட்சிக்குப் படை திரட்ட முடியும்.

❒

*1974*

பயண நூல்

✡

# ஒரு சோவியத் நண்பனின் இந்தியச் சுற்றுலா

✡

நெல்லை எஸ். வேலாயுதம்

*ஆயகலைகள் அறுபத்து நான்கில் பயணக்கலை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் அறுபத்தைந்தாவது கலையாக்க வேண்டும்; கலைமகளின் தலையில் மகுடமாகச் சூட்டவேண்டும்.*

*பயணக்கலையின் மேன்மையைப் பறை சாற்றத்தானே சிவபெருமானின் இளங்குமரன் மயிலேறி உலகெல்லாம் ஒரு சுற்றுச் சுற்றி வந்தான்!*

இன்று ரயில் ஏறி-அதுவும் மெயில் ஏறி வேகமாக உலகம் சுற்றும் வசதி இருக்கிறது. இருந்தும் நம்மில் எத்தனை பேர் உலகம் சுற்றும் வாலிபர்களாகிறோம்?

உலகம் கிடக்கட்டும்... சொந்த நாட்டையாவது-இல்லை, சொந்த ஊரையாவது ஒழுங்காகச் சுற்றிப் பார்க்கிறோமா?

அவ்வப்போது வகுப்புக்குத் தாமதமாக வரும் மாணவனை வாசலில் நிறுத்தி ''என்னப்பா, ஊரெல்லாம் சுற்றிவிட்டு வருகிறாயா?'' என்று ஆவலோடு கேட்டிருக்கிறேன். ''ஆமாம், தெப்பக்குளம், காந்தி பூங்கா, பழைய அரண் மனை... எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று ஒரு மாணவனாவது பதில் சொல்ல வேண்டுமே! ''இல்லை ஐயா, தண்ணீர் வரவில்லை; குளிக்க நேரமாகி விட்டது. விறகு எரியவில்லை. சமைக்க நேரமாகி விட்டது'' என்று கூறினால் எனக்கு எப்படி இருக்கும்?

என் மாணவர்களில் சிலர் டாக்டர் ஆகலாம்; பொறியாளர் ஆகலாம்; துணைவேந்தர் ஆகலாம்; சினிமா டைரக்டர் ஆகலாம். அமைச்சராகவும் ஆகலாம். ஆனாலும் என்ன? என் இருபதாண்டு ஆசிரியப் பணியில் தன்னை 'ஓர் ஊர் சுற்றி' என்று அறிமுகப்படுத்திக் கொள்ளும் ஒரு மாண வனை - எதிர்காலத்தில் சுற்றுலா வாரியத் தலைவராகும் ஒரு மாணவனை என்னால் உருவாக்க முடியவில்லையே!

**எ**ன் கவலையைப் போக்கும் விதத்தில் ஒரு மாதம் தம் இஸ்கஸ் நண்பர்களுடன் இந்தியச் சுற்றுப்பணயம் மேற் கொண்டிருக்கிறார் தோழர் நெல்லை. எஸ்.வேலாயுதம்.

சுற்றுப்பயணம் வெற்றுப் பயணம் அல்ல, ஒரு வெற்றிப் பயணம் என்று உறுதிப்படுத்தும் வகையில் தம் பயண

அனுபவங்களை மூன்று நோட்டுப் புத்தகங்களில் எழுதி என்னிடம் காட்டினார். ''படித்துவிட்டு ஒரு முன்னுரை எழுதித் தாருங்கள்'' என்றார்.

''என்ன தோழரே, நீங்கள் இந்தியா முழுவதும் பார்த்து விட்டு எழுதியிருக்கிறீர்கள்; நான் மட்டும் படித்துவிட்டு எழுதுவதா? நியாயமில்லை. குறைந்தபட்சம் டில்லிக் காவது என்னைக் கூட்டிக்கொண்டு போங்கள். அப்போது தான் முன்னுரை எழுத முடியும்'' என்றேன்.

தோழர் சளைத்தவரா என்ன, உடனே ''இந்திய ஜி.டி.ஆர். நட்புறவு மாநாட்டுக்குப் போவோம்'' என்று என்னையும் இன்னும் சில நண்பர்களையும் டில்லிக்கு இழுத்துச் சென்றுவிட்டார்.

அப்புறம்... முன்னுரை எழுத வேண்டியது தானே?

(எச்சரிக்கை, முன்னுரையில் இடையிடையில் என் அனுபவமும் வரும்)

**தோ**ழரைப் பற்றி ஒரு சுவையான தகவல்...

சட்டமன்றத் தேர்தல் நேரம். ஒரு முற்போக்கு அரசியல் கட்சியைச் சார்ந்த ஓர் அம்மையார் மதுரையில் பல இடங்களில் பேசுகிறார். அவர் ஆங்கிலப் பேச்சைத் தமிழாக்கம் செய்யத் தோழர் வேலாயுதம் அருகில் நிற்கிறார்.

ஆட்சியில் அமர்ந்திருப்பவர்களின் அத்துமீறல்கள் பற்றி அந்த அம்மையார் வருணிக்கிறார். காவல் நிலையத்தில் ஒரு பெண் கணவன் முன்னிலையில் மானபங்கப்படுத்தப்

பட்ட கொடுமையை விவரித்து ''கற்புக்கரசியர் பிறந்த நாட்டிலா இந்த இழிநிலை'' என்று கேட்கிறார்.

மொழிபெயர்க்க வந்த தோழர், ''காலனோடு போராடிக் கணவன் உயிரை மீட்ட கற்புக்கரசி சாவித்திரி பிறந்த நாட்டிலா இந்த இழிநிலை? காவலனோடு வழக்காடி கணவனுக்காக நியாயம் கேட்ட கற்புக்கரசி கண்ணகி பிறந்த நாட்டிலா இந்த இழிநிலை?'' என்று 'கற்புக்கரசியர்' பெயர்களை அடுக்கி உணர்ச்சியைத் தூண்டுகிறார்.

மொழிபெயர்ப்பு வெற்றிகரமாக அமைவது கூட்டத்தி னரின் முகத்தில் தெரிகிறது. அம்மையாருக்கும் புரிகிறது. அடுத்துப் பேசிய கூட்டங்களில் அம்மையாரே வெறுமனே ''கற்புக்கரசியர் பிறந்த நாட்டிலா இந்த இழிநிலை'', என்று கேட்காமல் 'காலனோடு போராடி... காவலனோடு போராடி....'' என்று ஆங்கிலத்தில் ஆவேசத்தோடு கேட்க ஆரம்பிக்கிறார்.

மொழிபெயர்க்கப் போய் பேச வந்த அம்மையாரையே மொழிபெயர்க்க வைத்த பெருமை தோழருக்குரியது.

**தோ**ழர் வேலாயுதம் ஒரு மொழிபெயர்ப்பாளர், ஒரு இடதுசாரி சிந்தனையாளர், ஒரு முற்போக்கு எழுத்தாளர் என்பது முன்னமே எனக்குத் தெரிந்த விவரம். 'ஒரு சிறந்த ஊர்சுற்றி' என்பது இப்போது இந்த நூல் மூலம் தெரியும் புதிய செய்தி.

ஏதோ போனோம் வந்தோம் என்றில்லாமல் முப்பது நாட்களையும் முழுதும் பயனுள்ள வகையில் செலவு செய்துள்ளார் தோழர். அங்கங்கே கண்ணில் நிறுத்தித் தாம்

கண்ட காட்சிகளையெல்லாம் நம் நெஞ்சில் நிறுத்தி விடுகிறார்.

மனித உழைப்பின் மாபெரும் அடையாளச் சின்னமாக நிற்கும் பக்ராநங்கலைப் பார்த்ததும் உரத்த குரலில் 'மனிதன் மனிதன் மனிதன்' என்று கூவுகிறார், மார்க்சிம் கார்க்கியாக மாறுகிறார். நாம் அங்கே பறந்து போக வேண்டும் என்று துடிக்கிறோம். பிறகுதான் சிறகில்லையே, என்ன செய்வது என்று சிந்திக்கிறோம்.

தாஜ்மகாலின் தனியழகில் மனம் சொக்கி நிற்கும்போது கூட 'இந்தக் காதல் மாளிகைக்காக எத்தனை பேர் ரத்தம் சொரிந்தனரோ? என்று கேட்கிறார்; குருஷேவ் ஆகிறார்.

காஷ்மீரத்து இயற்கை அழகில் மட்டுமின்றி உழைக்கும் மக்களின் உடல் அழகிலும் தோழர் கிறங்கி விடுகிறார்.

> 'ஆண்கள் அனைவரும் மன்மதனின் மறுபதிப்புக்கள்.
> பெண்கள் அனைவரும் ஊர்வசிகள்.'

தோழர், காளிதாசனைப்போல் கம்பனைப்போல் கவிஞராகப் பார்க்கிறார்.

காஷ்மீரத்தில் இயற்கை வளத்துக்குப் பஞ்சமில்லை; மனித உழைப்புக்கும் குறைவில்லை. எனினும் உழைப்புக்கும் அங்கே உரிய விலை இல்லை.

> **''உழைப்புக்குந் தகுந்த ஊதியம் கிடைக்குமா என்று**
> **மட்டும் கேட்டுவிடாதீர்கள் இது பாரத புண்ய பூமி.''**

என்று கூறும்போது இக்பாலைப்போல் பாரதியைப் போல் புரட்சிக் கவிஞராகப் பார்க்கிறார்.

'இந்த இரண்டு படங்களுக்கிடையில் ஆறு வித்தியாசங்கள் உள்ளன' என்று வாசகர்களின் கண்டுபிடிப்புத் திறனுக்கு ஒரு வாரப்பத்திரிகை ஊக்கமளிக்கிறது.

வடக்கு-தெற்கு என்று பேசப்படும் இந்தப் பெரிய தேசத்தில் ஆயிரக்கணக்கான வித்தியாசங்கள் இருந்தாலும்-அவற்றைக் கண்டுபிடிப்பதும் அவ்வளவு கடினமான காரியமல்ல என்றாலும்-அடிப்படையில் வலிமைமிக்க ஓர் ஒற்றுமை உணர்வு ஊடுருவி நிற்கவே செய்கிறது.

நம்முடைய அரசியல்வாதிகளைக் காட்டிலும் நம் இதிகாசங்களும் காவியங்களும் கோட்டைகளும் கோயில்களும் அந்த ஒற்றுமைக்கு அதிகம் உதவி வருகின்றன.

இராமன், இலட்சுமணன், சீதை, கிருஷ்ணன், லட்சுமி, பார்வதி - இப்படி இந்த தேசமெங்கும் கோவில்கள், சிலைகள்.

தோழர் நிறைய கோவில்களைப் பார்த்திருக்கிறார். ஹரித்துவாரத்தில் ஒரு கோவில். ஒரு இராமர் சிலையில் ஆயிரம் இராமர்கள் தோன்றும் வண்ணம் கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ள நேர்த்தியைக் கண்டு தோழர் மெய் மறக்கிறார்.

''நாத்திகனுக்குக் கூட கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்துமளவுக்குக் கட்டப்பட்டுள்ள அற்புதக் கண்ணாடி மாளிகை. அதிசயம்! ஆனந்தம்!''

என்று பரவசப்படுகிறார். தோழர் எங்களையெல்லாம் விட்டுவிட்டுக் கட்சி மாறிவிடுவாரோ-பக்த ராமதாஸ் ஆகிவிடுவாரோ என்று பயப்படுகிறேன்.

கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!

அக்பரின் கோட்டையைச் சுற்றிப் பார்த்தபோது கோட்டையின் சுற்றுச்சுவர்களைக் காட்டிலும் வாயில் நெடிதாய் உயரமாய் இருப்பதற்கு ஒரு வழிகாட்டி, காரணம் சொன்னார்.

போர்டிகோவில் செல்வச் சீமான்களின் கார் தயாராக இருப்பதைப் போல் அந்தக் காலத்தில் அந்தப்புர வாசலில் அரசனின் யானை தயாராக இருக்குமாம். அதில் ஏறி அமர்ந்து வரும் அரசனின் தலையை இடித்துவிடக் கூடாதே, அதற்காகத்தான் கோட்டைவாயில்களை உயரமாக அமைத்தார்களாம்.

இதேபோல் காசி விசுவநாதர் ஆலயத்துக்குச் செல்லும் வழிகள் எல்லாம் ஒடுங்கிய சந்துகளாக இருப்பதற்குத் தோழர் காரணம் கற்பிக்கிறார்.

> **''இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் உத்தரப் பிரதேசத்தின் வாரணாசிப் பகுதியில் இந்து முஸ்லீம் கலவரங்கள் பெருமளவுக்கு நடந்தன. முஸ்லீம் களின் தாக்குதலுக்குப் பயந்து கோவிலுக்குள் எந்த வாகனமும் நுழைய முடியாதபடி ஒடுங்கிய சந்துக்குள் ஆலயத்தை நிர்மாணித்தார்கள். ஒருவர் பின் ஒருவ ராகத்தான் இந்த சந்துகளைக் கடந்து கோவிலுக்குள் நுழைய முடியும்.''**

ஒரு வரலாற்று ஆசிரியருக்கே உரிய கூர்ந்தபார்வை. இந்தப் பார்வை பெரிய பெரிய கோட்டை கொத்தளங்கள் உட்பட அக்பரின் இளம் துருக்கிய மனைவியின் குளியல் அறை வரை புகுந்து பாய்கிறது.

(நல்லவேளை.... அக்பர் சமாதியாகிவிட்டார்.)

இந்தப் பார்வை அங்காடியில் விற்கும் மசாலாப் பண்டங் களைக்கூட விடவில்லை.

''நமது ஊரில் மாங்காயை அறுத்து மசாலா போட்டுத் தருவதுபோல் இங்கு முள்ளங்கியை நறுக்கி மசாலா போட்டுத் தருகிறார்கள்.''

என்கிறார்.

உண்மைதான். டில்லியில் எங்கும் எதிலும் மசாலா.

வீதியில் ஓரிடத்தில் மசாலா தடவிய வெள்ளரிக்காயை வாங்கித் தின்றுவிட்டுப் பக்கத்தில் ஒரு கடையில் தொங்கிய ஒரு தமிழ்ப் பத்திரிகையை எடுக்கப் போனேன். கடைக்காரர் தடுத்தார். உள்ளே வேறொரு பிரதியைத் தேடிக் கொண்டிருந்தார். என்னுடன் வந்திருந்த பிறைக் கலைஞர் பிரபா ''என்ன புரபசர், பத்திரிகையில் மசாலா தடவுகிறாரா'' என்று குறும்பாகக் கேட்டார். நான் சொன்னேன். அதற்கு அவசியமில்லை. பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைகளில் உள்ளே இருப்பது அதுதானே.''

அளந்துகொண்டு போகிறேனோ?

ஆனாலும் அவசியம் ஒன்றை அளந்தாக வேண்டும் புகழ்ந்தாக வேண்டும்.

அதுதான் அழகு!

சீருடை அணிந்த நர்சரிப் பள்ளிச் சிறுமியர்களின் சின்னச் சின்ன அழகு, டைரி வடிவத்தில் எழுதப்பட்டுள்ள இந்த நூலின் பல பக்கங்களில் ஒளி வீசுகிறது.

அந்த அழகு உண்மை அழகு; உண்மையைத் தேடும் அழகு; ஆமாம்... உண்மையே அழகு.

அந்த அழகுக்கு இன்னொரு பெயர் சோவியத் ஆதர்சம்!

தோழரின் இந்த நூல் அந்த அழகைத் தேடுகிறது. பொக்காரோ உருக்காலை, சூரத்கட் விவசாயப் பண்ணை, ராஞ்சி கன இயந்திரத் தொழிற்சாலை - இதேபோல் இன்னும் பல இடங்களில் அதைக் கண்டு வணங்குகிறது; வாழ்த்துகிறது. பொக்காரோ உருக்காலையை உருவாக்கிய சோவியத் சிற்பிகளுள் ஒருவர் பேசுகிறார்.

''இன்னும் ஓராண்டு காலத்தில் இந்தத் தொழிற்சாலையில் எனது வேலை முற்றுப்பெறும். அடுத்து இன்னொரு நட்பு நாட்டிற்குச் சென்று அங்கும் இதே போன்றதொரு தொழிற்சாலையைத் துவங்கப் பணியாற்றுவேன்.''

எவ்வளவு தூய நட்பு! எவ்வளவு உயர்ந்த உள்ளம்!

இதேபோல் பாலைவனாய்க் கிடந்த ராஜஸ்தான் மாநிலத்து சூரத் கட் பகுதியில் பசுமைப் புரட்சி ஏற்படுத்த சோவியத் நண்பர்கள் எவ்வளவோ செய்திருக்கிறார்கள்!

''இந்தியச் சகோதரர்களுக்கு ருஷ்ய மக்கள் வழங்கிய இயந்திரங்களின் எண்ணிக்கை எத்தனை! பல்வேறு விதமான டிராக்டர்கள் 6; உழவு இயந்திரங்கள் 75; தானியம் மற்றும் உரம் தூவும் இயந்திரங்கள் 50; விதைவிதைக்கும் இயந்திரங்கள் 80; நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள் 500; கப்ளர்கள் 42; ரோலர்கள் 30; உமி நீக்கும் இயந்திரங்கள் 50; கம்பைனர்கள் 60....''

நான் நிறுத்தி விடுகிறேன்... புள்ளி விவரம் நிற்காதுபோல் தெரிகிறது. ஹோமரின் காப்பியத்தில் போருக்குப் புறப்பட்ட கப்பல்களின் பெயர்கள் அடுக்கப்படுவதைப் போல் இங்கே சோவியத் மக்கள் உதவிய கருவிகளின் எண்ணிக்கை குறிக்கப்படுகிறது.

பூமிக்கடியில் ஓடும் நீரைப்போல் இந்த நூல் முழுவதும் சோவியத் ஆதர்சம் அடிநாதமாய் ஒலிக்கிறது.

டாக்டர் ஜி.யு.போப் தம் கல்லறையில் 'ஒரு தமிழ் மாணவன்' என்று எழுதச் சொன்னாராமே.'... இனி இந்தியாவில் எண்ணற்ற சகோதரர்கள் தங்கள் கல்லறை களில் 'ஒரு சோவியத் நண்பன்' என்று எழுதச் சொல்ல லாம். அந்த அளவுக்கு ஒவ்வொருவர் இதயத்தையும் சோவியத் ஆதர்சம் ஆட்கொண்டு வருகிறது. வாழ்க!

தம்முடன் வந்த இஸ்கஸ் நண்பர்களுடன் தோழர் வேலாயுதம் டில்லியில் - சோவியத் கலாச்சார மாளிகையில் 'ருஷ்யாவில் சுற்றுலா' என்ற திரைப்படம் பார்த்ததைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

> ''இந்தப் படத்தைப் பார்த்து முடிந்ததும் ருஷ்ய நாட்டுக்குச் சென்று வந்தது போன்ற ஒரு உணர்வு ஏற்படுகிறது. சோவியத் யூனியனுக்குச் சென்று இல்லாமையையும் கல்லாமையையும் ஒழித்த அந்தப் புனித பூமியை முழுமையாகச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் மேலோங்குகிறது.''

தோழரின் ஆவல் அதிவிரைவில் நிறைவேற வேண்டும். அடுத்து 'ஒரு சோவியத் நண்பனின் சோவியத் சுற்றுலா' என்ற நூல் வெளிவர வேண்டும். அதற்கும் நான்தான் முன்னுரை எழுதவேண்டும். அதாவது....

தோழருக்கு என் நோக்கம் புரிந்தால் சரி.

❑

***15.7.1980***

கவிதை நூல்

✡

# ஒட்டுப்புல்

✡

க. பஞ்சு

*அன்புள்ள பஞ்சு,*

*இன்றுதான் நேரம் கிடைத்திருக்கிறது!*

*அதிகாலையும் சந்தடியற்ற சூழ்நிலையும் உங்கள் கவிதைகளை அனுபவித்துப் படிப்பதற்கு உதவுகின்றன.*

*உங்கள் வயதைப் போலவே உங்கள் கவிதைகளின் எண்ணிக்கையும் குறைவானவைதான்.*

*எனினும் ஒரு மர்மக்கதைப் புத்தகத்தைப் போல் ஒரே மூச்சில் படிக்கக் கூடியவை அல்ல.*

சில வரிகளில் சில வார்த்தைகளில் நான் மயங்கி நிற்கும் கணங்களும் அதிர்ச்சியுற்று நினைவுகளை அலைய விட்டுக் காத்திருக்கும் வினாடிகளும் அதிகம்.

என் சோகம் என் கண்ணீர்
எனக்கே சொந்தம்

என்று முன்பொரு நாளில் எழுதியதை எண்ணிப் பார்க்கிறேன்.

இப்போது உங்கள் சோகத்துக்கு முன்னால் என் சோகம் எம்மாத்திரம் என்று தோன்றுகிறது.

பாலைக்கும் பாலைவனத்துக்கும் இடையில் உள்ள வித்தியாசம் புரிகிறது.

உள்ளத்தில் படும் காயத்துக்கும் ஆன்மாவில் படும் காயத்துக்கும் இடையில் இருக்கும் வேறுபாடு தெரிகிறது.

ஆன்மாவில் காயம்பட்டு விட்ட
அவனைத் தொந்தரவு செய்யாதீர்கள்

என்று உங்கள் குரல் வேதனையில் நடுங்கும்போதும் ஒடுங்கும்போதும் யார் என்ன சமாதானம் சொல்ல முடியும்?

'ஈடு செய்ய முடியாத இழப்பு' என்று எந்த மரணத்துக்கும் வாசிக்கப்படும் வாய்பாட்டை எப்படி உங்கள் மனைவி யின் மறைவுக்கும் ஒப்பிக்க முடியும்?

நிலைத்த நெடும் பாலைவனம் (Deserts of vast eternity) என்று மரணத்தைப் பற்றி மார்வெல் தீட்டிய ஓர் உயிர்த் துடிப்புள்ள சொற் சித்திரம் நினைவுக்கு வருகிறது.

மரணம் கொடியது.

மரணம் நெடியது.

மரணம் நிலையானது.

மார்வெல் ஒரு சின்னஞ்சிறு வரியில் மரணத்தின் அசுரத் தோற்றத்தையும் அநியாயமான வேகத்தையும் அற்புத மாகக் கண்முன் நிறுத்திக் காட்டுகிறான்.

ஆணாகப் பிறந்த நானும்
கருக்கலையும் வேதனை அனுபவிப்பதை
உன்னால் உணர முடிகிறதா?

என்ற உங்கள் வரிகளைப் படிக்கும்போது மரணத்தின் கொடூரத் தாக்குதலுக்கு ஆளான உள்ளம் எப்படி நொறுங்கியிருக்கும் என்பதை என்னால் உணர முடிகிறது.

பிரசவ வேதனை பெரிய வேதனைதான்.

அந்த வேதனைக்குப்பின் ஒரு குழந்தையின் குதூகலச் சிரிப்பு மறைந்திருக்கிறதே!

ஆனால் 'கருக்கலையும் வேதனை...

உங்கள் கருக்கலையும் வேதனைக்குக் காரணத்தை அறியும் போது என் வேதனை அதிகமாகிறது.

பல வழிகளில் நீயும்
ஒரு பல்கலைக் கழகம் தான்
ஆம்...
சமுதாயத்திலிருந்து நீயும்
என்னைப் பிரித்து விட்டாய்.

என்று உங்கள் தனிமைத்துயரம் வாழ்க்கையோடு ஒட்டாத இன்றைய கல்வி முறையை வம்புக்கு இழுக்கிறது. இந்த

வரிகளில் வெளிப்படும் விரக்தியோடு கூடிய நகைச்சுவை (Grim Humour) என்னைக் கவர்கிறது.

சமுதாயத்திலிருந்து நீயும்
என்னைப் பிரித்து விட்டாய்

என்று சொல்வதை வைத்து சமுதாயத்திலிருந்து நீங்கள் அந்நியமாகி விட்டதாய் அவசரப்பட்டு முடிவு கட்ட முடியாது.

உங்கள் சொந்த வாழ்வின் அவலம் மட்டுமன்றிச் சமூக அவலத்தையும் உங்கள் தோள்கள் சுமக்கின்றன என்பதைப் பல கவிதைகளில் என்னால் கண்டுகொள்ள முடிகிறது.

மனைவியை இழந்துவிட்டால் வாழ்க்கை வெறிச்சோடிப் போகத்தான் செய்யும். ஆனால் தன்னையே பார்த்துப் பரிதாபப்பட்டுக் கொள்ளாமல், சொந்த உணர்ச்சி களிலேயே கரைந்து போகாமல் சாவைச் சபிப்பதிலேயே பொழுதைப் போக்காமல் சமுதாயக் கொடுமைகளைச் சாடுவதற்கு முன்வந்திருப்பது ஒரு நல்ல முன்னுதாரணம் தான்.

நினைவுகளையே
ஆடையாக உடுத்திக் கொண்டு
எத்தனை நாள்தான் நான்
பிறந்த மேனியாக அலைவதுவோ?

என்று நீங்கள் ஆடையில்லாது திரியும் ஆயிரமாயிரம் ஏழைகளின் தரித்திர வாழ்வை இணைத்து ஒடுக்கப்பட்ட மக்களோடு உங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டிருக் கிறீர்கள்.

இப்படி எழுதுவது எனக்குப் பிடிக்கிறது.

காதலில் கம்யூனிஸமா என்று இதை எதிர்ப்பவர்கள் எதிரெதிர் வரிசையில் இருக்கிறார்கள்.

காதலுக்கும் கம்யூனிஸத்துக்கும் மோதலோ முரண்பாடோ இல்லை என்பதை இரண்டையும் உண்மையாக நேசிப்பவர்கள் உணர்வார்கள்.

'ஜென்னியின் கணவா' என்று தாங்கள் ஒரு கவிதைக்குத் தலைப்பு வைத்திருப்பதே காதல் உணர்வையும் சமூக உணர்வையும் ஒன்றாய் இணைக்க வேண்டும் என்ற உங்கள் நோக்கத்தைக் காட்டுகிறது.

அந்த ஜென்னியின் கணவனைப் போலவே - மார்க்ஸைப் போலவே நீங்களும் ஒரு தீவிரமான காதலர்தான்.

உங்கள் துணைவியின் பிரிவுக்குப் பிறகு, உங்கள் காதல் சமுதாயக் காதலாகப் பரிணமிப்பதைக் கண்டு மகிழ்கிறேன்.

நீங்கள் உங்கள் மனைவியோடு வாழ்ந்த காலமோ மாதக் கணக்கில்; நீங்கள் வாழவேண்டிய காலமோ வருடக் கணக்கில்.

'இழப்பதற்கு ஒன்றுமில்லை' என்ற பிறகு இனியும் நீங்கள் உங்களை எதிர்த்துக்கொள்ள வேண்டாமல்லவா? ஒரு வேண்டுகோள்......

'ஒரு வேண்டுகோள்' என்று நீங்கள் எழுதிய கவிதையிலிருந்துதான்......

> உங்கள் அக்கினிக்கு
> மார்க்ஸ் மார்க் நெய்யை
> ஊற்றுங்கள்.

❐

***22.3.1977***

நாவல்

✡

# ஒரு குடும்பத்தின் கதை

✡

ஷெட்ரின். தமிழில் நா.தர்மராஜன்

**மா**பெரும் அக்டோபர் புரட்சி ருசிய மண்ணில் மட்டுமல்லாமல் உலகத்தின் மற்ற பாகங்களிலும் மகத்தான மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அரசியல் பொருளாதார சமூக வாழ்வோடு நின்றுவிடாமல் கல்வி, விஞ்ஞானம், கலை, இலக்கியம் போன்ற சகல துறைகளிலும் புதிய ஒளியைப் பாய்ச்சியிருக்கிறது.

புரட்சியில் மலர்ந்த சோவியத் கலைஞர்கள் காலங்காலமாக ஒதுக்கப்பட்ட உழைக்கும் மனிதனை உலகின் பார்வையில் நிறுத்தினார்கள்.

புதிய சகாப்தம், புதிய மனிதன், புதிய வாழ்க்கை நெறி இவையே அவர்களின் கலை இலக்கிய நோக்கங்கள்.

சோஷலிசம், சுதந்திரம், சமாதானம், முன்னேற்றம் இவையே அவர்கள் ஆன்மாவை வசீகரித்த உன்னதத் தத்துவங்கள்.

மனித நேயத்திலும் புரட்சியிலும் வேர்கொண்ட சோவியத் இலக்கியத்தை சர்வதேசத் தகுதிக்குரியதாக்கியவர்கள் கார்க்கி, ஷோலகோவ், எரன்பர்க், மாயகோவ்ஸ்கி எவ்துஷெங்கோ... இன்னும்... இன்னும்...

இவர்கள் அக்டோபர் புரட்சியின் அருமைப் புதல்வர்கள். இவர்கள் வானத்தில் இருந்து வந்த தேவர்கள் அல்லர். மண்ணின் மனிதர்கள்.

இவர்களுக்குப் புதிய உலகத்தைத் தரிசிக்கத் தயாராக சாளரத்தைத் திறந்து வைத்தவர்கள் புரட்சிக்கு முன்பு வாழ்ந்த ஒப்பற்ற மேதைகள்... புஷ்கின், கோகோல், டால்ஸ்டாய், டாஸ்டாவ்ஸ்கி, செகோவ், ஷெட்ரின் போன்ற எழுத்துச் சிற்பிகள்...

**ஷெ**ட்ரின் (1826-1889) புரட்சிக்கு முந்திய ருசியாவின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். மிக்கெய்ல் சால்டிகோவ் என்ற இயற்பெயருடைய ஷெட்ரின் ஒரு நிலச் சுவான்தார் குடும்பத்தில் பிறந்தவர்; பண்ணை அடிமைகளின் பராமரிப்பில் வளர்ந்தவர்.

இளமையிலிருந்தே நிலப்பிரபுக்களின் நீசத்தனத்தையும் கோணல் குணத்தையும் நேருக்கு நேர் கண்டுகொள்ளும் வாய்ப்பிருந்ததால், ஷெட்ரின் தம் எழுத்துக்களில்

அவர்களைச் சரியாக அடையாளம் காட்ட முடிந்தது. சொத்துக்காக மனித உறவுகளை ஏலம் போடும் அவர்களின் இழிந்த பண்பை எள்ளி நகைக்க முடிந்தது. அவர்களை மையமாக வைத்து அங்கதம் (Satire) எனப்படும் கூர்மையான கிண்டலையும் நகைச்சுவையையும் கையாண்டு ருசிய இலக்கியத்தில் புதிய பாணியை உருவாக்க முடிந்தது.

1840க்குப் பிறகு ருசியாவில் தொழிற்புரட்சி வேகமாகப் பரவியது. அதன் விளைவாகப் பண்ணையடிமை முறை ஒழிந்து, முதலாளித்துவம் தோன்றியது. ருசிய சமூகத்திலும் தனிநபர்களது மனோபாவங்களிலும் இதனால் ஏற்பட்ட மாற்றங்களை ஷெட்ரின் தம் எழுத்துக்களில் பிரதிபலித்தார். ருசிய மக்களோடு ஒன்றிக் கலந்து, அவர்களது வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தின் வரலாற்று ரீதியான முக்கியத்துவத்தை எதார்த்த முறையில், கலையழகோடு வர்ணித்தார். பழமைக்கும் புதுமைக்கும் இடையே உருவான சிக்கல்களை ஆராய்ந்தார். எனவேதான் கார்க்கி ''ஷெட்ரின் உதவியில்லாமல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ருசியாவின் வரலாற்றைப் புரிந்து கொள்ள முடியாது' என்று குறிப்பிட்டார். ஷெட்ரின் பண்ணையடிமை முறைக்கும் சார் சக்கரவர்த்தியின் கொடுங்கோன்மைக்கும் எதிராகக் கிளர்ந்து எழுதினார். அவரது எழுத்து ருசிய மக்களிடம் உறைந்து போயிருந்த அச்சத்தை அகற்றி அவர்களைப் புரட்சிகரமாகச் சிந்திக்கத் தூண்டியது. போராடும் மக்களுக்கு அது வீர வாளாக உதவியது.

''அவருடைய ஒவ்வொரு புத்தகமும் அந்தப் பழைய மாளிகையின் ஒரு பகுதியை உடைத்து நொறுக்கியது... அவருடைய பலமான தாக்குதலை எதுவும் தாங்க முடியவில்லை'' என்று ஒரு விமர்சகர் எழுதுகிறார்.

ஷெட்ரின் எழுத்துக்களுக்கு மக்களிடம் இருந்த செல்வாக்கைக் கண்டு அரசாங்கம் ஆத்திரமடைந்தது. எட்டு ஆண்டுகள் அவரை நாடு கடத்தியது. எனினும் ஷெட்ரின் தளர்ந்துவிடவில்லை; தைரியமாக முன்னேறினார். கார்க்கி சொல்வதுபோல் ''ஷெட்ரின் வாழ்க்கையை விட்டு இம்மிகூட விலகவில்லை. அதன் முகத்தை உற்றுப் பார்த்தார். எல்லாவற்றையும் பார்த்துச் சிரித்தார். அது கசப்பான சிரிப்பு: ஆனால் என்ன நடக்கப் போகிறது என்பதைத் தெரிந்துகொண்ட சிரிப்பு.''

கல்கி 'ஹாம்லெட்' நாடகம் பற்றி எழுதும்போது அதை இயற்றிய சேக்ஸ்பியரைக் 'குட்டி எமன்' என்று வருணித்தார். எமனிடம் அகப்பட்டுக் கொண்டு ஒரு வேளை தப்பினாலும் தப்பலாம். சேக்ஸ்பியரின் நாடகத்தில் அகப்பட்டுக் கொண்ட எந்தக் கதாபாத்திரமும் தப்ப முடியாது, என்றும் நயமாகக் குறிப்பிட்டார். உண்மை தான். 'ஹாம்லெட்' நாடகம் முழுவதும் கொலையும் தற்கொலையும்தான்; நாடகமேடை முழுவதும் ஒரே பிணவாடைதான்.

கல்கி, சேக்ஸ்பியருக்குச் சூட்டிய பட்டப் பெயர் ஷெட்ரினுக்கும் பொருந்தும். கொலோவா குடும்பத்தைப் பற்றிய இந்த நாவல் முடியும்போது ஷெட்ரின் யாரையும் விட்டு வைக்கவில்லை. அரினாவின் மூத்த மகன் ஸ்டெப்பான் சாவில் தொடங்கும் கதை, அந்தக் குடும்பமே சுடுகாடான பிறகுதான் முடிகிறது. நாவலின் கடைசி அத்தியாயத்தில் தனிமை இருளில் தங்களைப் புதைத்துகொண்டிருப்பவர்கள் 'வஞ்சகன்' போர்பிரியும் 'சிறைப் பறவை அன்னின்காவும் தான் - மாமனும் மருமகளும்தான்.

*அன்னின்கா தனது முன்னாள் நாடக மேடை வாழ்க்கை யையும் இந்நாள் எஸ்டேட் வீட்டு வாழ்க்கையையும் மாறி மாறி நினைத்துப் பொருமுகிறாள்.*

> ''செல்வமும் செல்வாக்குமாக வாழ்ந்த குடும்பம் என்ன ஆயிற்று? பாட்டனார் செத்தார். பாட்டி செத்தாள். அவளுக்கு முன்பே மாமன்மார் இருவர் செத்தனர். தாயார் தங்களை அனாதையாக விட்டுச் செத்தாள். வொலோ டெங்காவும் பெடங்காவும் செத்தனர். கடைசியில் லூபின்காவும் செத்தாள். அந்தக் குடும்பத்தில் எஞ்சியிருப்பது கிழட்டுப் போர்பிரியும் அவளும்தானா? அவர்களிருவரும் தான் இன்னும் எவ்வளவு காலத்திற்கு உயிரோடிருக்கப் போகிறார்கள்? சீ! சீ! இது என்ன வீடா, அல்லது சுடுகாடா?''

*அன்னின்கா நினைப்பதுபோல் அது சுடுகாடுதான். ஒவ்வொரு வினாடியும் கொலோவா குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தங்களுக்குக் குழிபறித்துக் கொண்டிருந் திருக்கிறார்கள். 'உதவாக்கரை' போர்பிரி தனக்கு மட்டு மல்லாமல் கொஞ்சம் தாராள மனத்தோடு மற்றவர் களுக்கும் குழிபறிக்க உதவியிருக்கிறான்.*

*அசட்டுக்கற்பனையும் வெட்டிப்பேச்சும் அவனுக்கே உரிய அலாதியான குணங்கள். கருமித்தனமும் சோம்பேறித் தனமும் அவனுக்குக் கிடைத்த சீதனங்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் கோவிலுக்குப் போவான்... ... மற்ற நாட்களில் ''நூற்றுப் பன்னிரெண்டு ரூபிளையும் பத்து ரூபிளையும் கூட்டி... ...'' என்று கணக்குப் போடுவான்.*

*எப்போதாவது நேரமிருந்தால் யாரைப் பற்றியாவது மொட்டைக் கடிதம் எழுதிப் போடுவான்.*

போர்பிரி எதிர்மறைக் குணங்களின் இருப்பிடமான ஷைலக்கின் வார்ப்பாகவே தென்படுகிறான்.

ஷெட்ரின் போர்பிரியின் விகாரமான ஓவியத்தை அனுபவித்து, அழகாகத் தீட்டியிருக்கிறார்.

மரணப்படுக்கையில் கிடக்கும் தம்பியின் தங்கப் பொத்தான்களைத் தேடும் அளவுக்குக் கூர்மையானவை அவன் கண்கள்......

பிள்ளைகள் பேசினாலும் ஒட்டுக் கேட்கும் பெருமைக் குரியவை அவன் காதுகள்.,. ...

வயதான தாய்க்கு ஒரு கோச் வண்டியைக்கூட விட்டுக் கொடுக்க விருப்பமில்லாத பெரிய உள்ளம் அவன் உள்ளம். எனினும் அவனைப்போல் வேறு யாராலும் தாய்ப் பாசத்தைத் தம்பட்டம் அடித்துக் காட்ட முடியாது... ...

> ''நீதான் தாய்க்கோழி. நாங்கள் கோழிக்குஞ்சுகள், க்ளக்–க்ளக்–க்ளக் என்று சத்தம் போடுவோம்......''

போர்பிரி யாருக்கும் ஒருவேளைச் சாப்பாடு போடுகிறானோ இல்லையோ, எப்போதும் சத்தம் போட மட்டும் தயங்கமாட்டான்.

கோதுமை கடனாகக் கேட்டு வரும் ஒரு ஏழைக் குடியானவனைத் தன் கொத்தடிமையாக வைத்துக்கொள்ள அந்த வெறும் சத்தத்தையே அள்ளி வீசுகிறான்......

> ''முதலில் கடவுளுக்குப் பயப்படணும். அப்புறம் நமக்கு மேலே இருப்பவர்களை, சார் சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்ட நிலச்சுவான்தாரர்களை மதிக்கணும்...''

வெறும் சத்தத்தையே ஒரு கலையாகப் பயின்ற போர்பிரி மறையும்போது அவனுக்காக அழுது புலம்பிச் சத்தமிட ஒருவருமில்லை... பாவம்......

கொலோவா குடும்பத்தின் வீழ்ச்சிக்கு போர்பிரியே முழுப் பொறுப்பு ஏற்கவேண்டும் என்று சொல்வது நியாய மில்லை. அவனைப் பெற்றெடுத்த தாய் - அந்தக் குடும்பத் தாய் - அரினாவும் ஓரளவுக்குக் காரணம்தான். போர்பிரி வேரில் கோடாரி போட்டிருக்கிறான். அரினா விழுது களைக் கை வைத்திருக்கிறாள். வித்தியாசம் அவ்வளவு தான்.

தன் நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்தி ஒன்றைப் பத்தாய்ப் பெருக்கியதாய் ஆரம்பத்தில் அரினா எவ்வளவு பெருமைப்படுகிறாள்.

கணவனைப் பற்றியோ பிள்ளைகளைப் பற்றியோ அவள் கவலைப்படாமல் எஸ்டேட்டைப் பெரிதாக்குவதிலே கவனம் செலுத்துகிறாள். அது அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடத்தில் இடைவெளியையும் பெரிதாக்கு கிறது என்பதைக் காணத் தவறுகிறாள். அன்பைத் தேடிய இளம் உள்ளங்களை அவள் ஆதரவோடு தழுவத் தவறுகிறாள்... கடைசியில் அவள் சீரழிவதைத் தன் கண்ணால் கண்டு கலங்குகிறாள்.

அரினா கொடுமைக்காரத் தாய் இல்லைதான். அதற்காக அவள் ஒரு நல்ல தாய் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? கார்க்கியும் ஒரு தாயைப் படைத்தார். அந்தத் தாய் எங்கே? இந்த அரினா எங்கே!

பெற்றெடுத்த மகனை மட்டும் நேசித்து வரும் ஒரு பாட்டாளி வர்க்கத் தாய், கொஞ்ச நாட்களில் அந்தப்

பாட்டாளி வர்க்கத்தையே எப்படி நேசிக்கிறாள்? வீட்டுக்குள் அடங்கியிருந்த அவள் அன்புள்ளம் தேசத்தை நோக்கி எப்படி விரிந்து பாய்கிறது?

ஷெட்ரினின் தாய் நிலப்பிரபுத்துவக் குடும்பத்தின் சீரழிந்த சித்திரம். கார்க்கியின் தாய் பாட்டாளி வர்க்கத்தின் உன்னதப் படப்பிடிப்பு.

ஒரு வகையில் ஷெட்ரினின் மோசமான தாய்தான் கார்க்கி யின் முன்னுதாரணமான தாய் தோன்றக் காரணமோ?

**மு**தற் பதிப்பில் 'ஜுடாஸ்' என்றும் மறுபதிப்பில் 'கொலோவோ குடும்பம்' என்றும் ருசிய மூலத்தில் வெளியிடப்பெற்ற இந்த நாவல் இப்போது தமிழில் 'ஒரு குடும்பத்தின் கதை' ஆகியிருக்கிறது.

கதையின் தலைப்பைப் போலவே தமிழாக்கமும் உயிர்த் துடிப்போடு அமைந்துள்ளது.

பேராசிரியர் தர்மராஜன் கார்க்கியின் 'இத்தாலியக் கதைகள்' 'தென் ஆப்பிரிக்கக் கதைகள்' போன்ற அற்புத நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்த பெருமைக் குரியவர்.

பள்ளிப் பருவத்திலிருந்தே சித்தாந்தப் பிடிப்பும் உலகளாவிய பார்வையும் சிறுமை கண்டு சீறும் உள்ளமும் போராடும் துணிவும் கொண்டவர்.

வகுப்பறைக்குள்ளே குறுக்கிக் கொள்ளாமல் சமூக வாழ்விலும் வளத்திலும் தன்னை ஒப்படைத்தவர். இந்த

இயல்பான குணம்தான் இவரைத் தமிழ்நாட்டின் உயர் கல்வி மட்டத்தில் இன்று வீறு கொண்டுள்ள ஆசிரியர் இயக்கத்துக்குத் தலைவராக்கியிருக்கிறது. ஆசிரியர்களைப் பண்ணை அடிமைகளாய் நினைத்த ஒரு தனியார் கல்லூரி நிர்வாகத்தை எதிர்த்துப் போராட வைத்திருக்கிறது. அரசு அக்கல்லூரியை ஏற்கவைத்த மாபெரும் சரித்திரச் சாதனைக்குரிய நாயகனாக்கியிருக்கிறது.

ஓ.... இவரே ஒரு நாவலுக்குரிய நாயகர்தான்.

ஷெட்ரின், கார்க்கி, ஷோலகோவ்... என்று மற்றவர்களின் கதையை இவர் எழுதட்டும்.

நான்....

இவர் கதையை எழுதுகிறேன்.

❑

*ஜனவரி ,1977*

கவிதை நூல்

✡

# பாதச் சதங்கைகள்

✡

வ. சுப்பிரமணியன்

**யு**கந்தோறும் கண்ணபெருமான் அவதரிக்கிறானோ இல்லையோ, நாள்தோறும் தேவதாஸ் அவதரித்துக் கொண்டிருக்கிறான்...

'சரத்பாபுவின் தேவதாஸ் இன்னும் மடியவில்லை' என்கிறார், சுப்பிரமணியன்... உண்மைதான்... காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் ஒவ்வொருவனும் தன்னைத் தேவதாஸாகக் கற்பனை செய்து கொள்கிறான். சோகத்திலும் ஒரு சுகம் காண்கிறான்... காதலியைப் பார்வதியாகப் பாவிக்கிறான்; முள்ளிலும் ஒரு ரோஜாவை வருடுகிறான்.

*சொர்க்கம் என்று நினைத்துக் காதலில் கட்டுண்ட நெஞ்சுக்குக் கிடைக்கும் பரிசோ நரகம்... நரகம்... ஏகாந்த நரகம்...*

*சூரிய சந்திரனைப் போன்ற விழிகளையோ, தாமரை போன்ற முகத்தையோ மையிருட்டுப் போன்ற கூந்தலையோ கண்கள் பார்த்துப் பார்த்துப் பரவசமடையலாம்... அவற்றையெல்லாம் விட்டுவிட்டுக் கண்கள் காலமெல்லாம் காண விரும்பியதோ பாதங்களைத்தான்... பிரகாசமான அவள் பாத விளக்குகளைத்தான்... அதற்கும் கூட வழியில்லையே...!*

'கண்ணுக்குத் தெரிந்த உன்
பாத விளக்குகள் அணைந்தபின்
நீ விட்டுச் சென்ற சதங்கை ஒலிகள்
மட்டுமே என் காதுகளுக்கு
மிச்சம்'

*அந்த அளவுக்குக் காதுகளுக்காவது ஏதோ கொஞ்சம்...*

*'மிச்சம்' என்னும் ஒரு சின்னஞ்சிறு சொல்லில் காடெல்லாம் விறகாக்கும் ஒரு பெருநெருப்பல்லவா பரவுகிறது.*

***கா**தல் சக்தி வாய்ந்தது. கை கூடினால், காற்றில் ஏறி விண்ணையும் சாடச் செய்யும்... இல்லையென்றால் விரக்தியின் விளிம்புக்கே ஓடச் செய்யும்.*

'நான் ஒரு வழியைத்
தேடிக் கொண்டிருக்கிறேன்
என்னிடமிருந்து
வெளியேறுகின்ற வழி'

*என்று தப்பி ஓடும் தருணம் நாடச் செய்யும்.*

காதற் கடலுக்குள் கைகோத்து நிற்கும்போது ஆனந்தம்; துணையைப் பிரியும்போதோ அச்சம். கடற்கரையில் நின்றால்கூட கால்களே காணாமற் போய்விடுவதைப் போன்ற ஒரு பிரமை.

'ஒரு தடவை கடற்கரையில்
கால் பதித்துப் பார்த்து நின்றேன்
ஒரு அலை பதித்துப்போன
காலைக் கழுவிக் கொண்டு போனது
மீண்டும் கால் பதித்துப் பார்க்க
எனக்கு ஆசைதான்
ஆனால் அப்போது எனக்குக்
கால்களே இருக்கவில்லை'

கால்கள் மட்டுமல்ல, உலகமே இல்லை என்றாகி விடுகிறது. இயற்கையே செயற்கையாகிவிடுகிறது. எல்லாம் சூன்யமாகிவிடுகிறது. ஒவ்வொரு இரவும் காதலன் அழுகைக்காகவே வருகிறது. புதைப்பதும் எரிப்பதுமே கண்ணுக்குத் தெரிகிறது. தற்கொலையும் கொலையுமே தத்துவமாகிறது. குருட்டுப் பிச்சைக்காரன் கைத்தடியை அசையவிட்டுப் போவதைப் பார்த்து ''அடப்பாவி இந்த வாழ்க்கையை இவன் எவ்வளவு கொடூரமாக நேசித்துத் தொலைக்கிறான்'' என்று ஏளனம் செய்யத் தோன்றுகிறது. 'தேனான உயிரை விட்டுச் சாவதாமோ' என்ற கவி வாக்கு பொய்யாய்த் தென்படு கிறது.

உலகம் எவ்வளவு பெரிது. அந்த உலகத்தில் ஒரு தனி மனிதன்... அவனது உள்ளம்... அல்லது ஆன்மா உலகத்தைக் காட்டிலும் பெரிதா... பெருமையுடையதா..? இந்தக் கேள்விகளுக்குக் கவிஞரிடமிருந்து எதிரான பதிலே வரக்கூடும்.

தனக்கு ஏற்பட்ட தோல்வியில் இந்த உலகத்தையே தலைகீழாகப் பார்ப்பது ஒரு விநோதம் அல்லவா! ஒரு வேடிக்கை அல்லவா...!

அகலிகைக்கல் ஏதோ ஒரு காலடி பட்டதும் சிலிர்த்துப் போய் 'நீதானே இராமன்' என்று கேட்க, 'இல்லை இராவணன்' என்று பதில் வருகிறதாம்.

போர்க்களத்தில் சித்தம் தடுமாறிய அருச்சுனனுக்கு 'பரவாயில்லை சரணாகதி அடைந்துவிடு' என்று கண்ணன் கீதோபதேசம் செய்கிறானாம்.

கோவலனுக்குக் கடிதம் கொண்டுபோய் ஏமாற்றத்தோடு திரும்பும் கோசிகனையே மாதவி கோவலனாக்கிக் கொள்ள ஆசைப்படுகிறாளாம்.

தனக்கு ஏற்பட்ட தோல்வியில் இந்த உலகத்தையே இப்படிக் கேவலமாகப் பார்ப்பது ஒரு குரூரம் அல்லவா? ஒரு கொடூரம் அல்லவா?

---

**ம**ன உளைச்சலின் உச்சியில் நின்று என்னைக் கொன்று விடுங்கள் என்று கதறுகிறார் கவிஞர். காரணம் கேட்டால் 'நான் கொல்வதற்கு ஒருவரும் இல்லை, பிறகு நான் எதற்கு இருக்க வேண்டும்' என்கிறார்.

'நான் சுடுவதற்கு
யாருமே உயிரோடு இல்லை.
அத்தனை பேர்களும் ஏற்கெனவே
செத்துப் போனவர்கள்
யாருமே உயிரோடு இல்லை
கிழடாகிச் செத்துப்போன
சவங்கள் மத்தியில் நான்

வாழ ஆசைப்படவில்லை
என்னைக் கொன்று விடுங்கள்'

என்கிறார்.

தோல்வி, நம்பிக்கை, வறட்சி, ஆத்திரம், மிரட்சி, பிரமை, வெறுமை, தற்கொலைத்தாகம், அந்நியப்பட்டு நிற்கும் அவலம் - இவை ஏறத்தாழ எல்லாக் கவிதைகளிலும் குடி கொண்டுள்ளன.

இந்தக் கவிதைகளை ஆழமாக விமர்சிக்கலாம்; அது புண்பட்ட உள்ளத்தை மேலும் புண்படுத்துவதாகாதா?

ஒரு நோயாளியின் நெற்றியை ஆதரவுடன் வருடும் ஒரு தாதியைப் போல் - ஓர் ஆதரவற்ற குழந்தையை அன்புடன் தூக்கும் ஒரு தாயைப் போல் இந்தக் கவிதைகளை வரவேற்போம்.

'நிஜங்கள் எனக்குப்
பயங்களாகின்றன..

என்கிறார் கவிஞர்.

'தூங்கிக் கொண்டிருக்கவே என்னை
அனுமதியுங்கள்'

என்கிறார்.

கவிஞருக்கு ஒரு பதில்... நான் அப்படி அனுமதிக்க மாட்டேன்.

எழுக கவிஞரே, எழுக!

❑

டிசம்பர், 1982

கவிதை நூல்

✡

# அம்மா அம்மா

✡

தமிழ்நாடன்

*தன் வீடு, தன் குடும்பம் என்று சிந்திக்கும் உள்ளம் கடுகு உள்ளம்.*

*தன் நாடு, தன் மக்கள் என்று எண்ணும் உள்ளம் கடல் உள்ளம்.*

*அந்தக் கடல் உள்ளத்திற்கு இன்னொரு பெயர் தேசியம். தேசியம் பெரியது; அதைவிடப் பெரியது - பெருமை மிக்கது - சர்வதேசியம்.*

*உண்மையான தேசியம் சர்வதேசியத்திற்கு எதிரானதல்ல. ஓரளவு இணையானது.*

சர்வதேசியம் நம் இலட்சிய எல்லை.

தேசியம் அந்த எல்லைக்கு வழிகாட்டும் கம்பம்; வழி அடைக்கும் கல் அல்ல.

ஏகாதிபத்தியமும், முதலாளித்துவமும் அந்த வழிகாட்டும் கம்பத்தையே வெட்டி வீழ்த்தி வழி மறிக்க அவ்வப்போது முயன்று பார்க்கின்றன. வேண்டுமென்றே வெறியேற்றிச் சின்னச் சின்ன தேசிய இனங்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்கின்றன.

சில சமயங்களில் அந்த வெறிக்கு அறிவாற்றல் படைத்த கவிஞர்களும் இலக்கிய மேதைகளும் கூடப் பலியாகிப் போகிறார்கள்.

இங்கே பலியானவர்களைப் பற்றிய பட்டியலை வாசிப்பதைக் காட்டிலும் வெற்றி பெற்றவர்களின் வீரப் பெயர்களை நினைத்துப் பார்ப்பதே மேல்.

தேசிய கவியான பாரதி சர்வதேசியவாதியாகவும் ஓங்கி உயர்ந்து நின்றதை நினைத்துப் பார்க்கும்போது நெஞ்சம் நிமிர்கிறது.

இந்திய விடுதலையை எவ்வளவு வேகத்தோடு பாடினானோ அந்த வேகத்திற்குச் சற்றும் குறையாமல் ருசியப் புரட்சியையும் பாரதியால் பாட முடிந்ததற்குக் காரணம் -

'சீனமும் அரேபியாவும் எங்கள் தேசமே
இந்துஸ்தானமும் எங்கள் தேசமே
உலகெல்லாம் எங்கள் தேசமே'

என்று மகாகவி இக்பாலால் இசைக்க முடிந்ததற்குக் காரணம்

காரணம் அவர்களது சர்வதேசியக் கண்ணோட்டம்தான்; நாட்டம்தான்.

'யாதும்ஊரே யாவரும் கேளிர்'

'பெரிதே உலகம் பேணுநர் பலரே'

என்ற பழந்தமிழ்க் கவிதைகள் உட்பட பல நாட்டுக் கவிதைகளிலும் கட்டுரைகளிலும் சர்வதேசியம் கருக் கொண்டிருந்தாலும் மார்க்ஸின் வருகைக்குப் பிறகே அது ஒரு கோட்பாடாக - விஞ்ஞானக் கோட்பாடாக உருக் கொண்டது.

மார்க்ஸ் தான் சர்வதேசியத்தைச் சமூகப் பொருளாதாரப் பின்னணியில் வைத்துப் பார்த்தார். அதன் பயன்தான் 'உலகத் தொழிலாளர்களே; ஒன்றுபடுங்கள்' என்ற கீதம்.

இந்தச் சர்வதேசிய கீதம் இன்று எட்டுத் திசைகளிலும் எதிரொலிக்கிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மூலம்தான் சர்வதேசிய இலட்சியத்தை எட்ட முடியும் என்று மார்க்ஸும் லெனினும் நம்பினார்கள்.

அந்த தேசத்தில் புரட்சி வெடித்தாலும் அதை உலகப் புரட்சியின் ஓர் அங்கமாகவே காணவேண்டும் என்னும் முற்போக்கான சிந்தனை இருந்ததால்தான் ருசியப் புரட்சியை உலகப் புரட்சியின் ஓர் அங்கமாகவே எண்ணினார் ஸ்டாலின்.

க்யூபா போன்ற சின்னஞ்சிறு நாடுகள் வியட்நாம், அங்கோலா போன்ற வீரத்திரு நாடுகளுக்குப் படையுதவி புரிந்ததெல்லாம் இந்த மேலான எண்ணத்தின் அடிப்படை யில்தான். இந்த எண்ணம் வேரூன்ற வேண்டுமானால் சோசலிஸ நாடுகள் தங்களுக்கிடையே உள்ள பூசலையும் பிணக்கையும் விட்டொழிக்க வேண்டும்.

சோசலிச சித்தாந்தத்தில் பிடிப்புள்ள எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் ஒரு முற்போக்குப் படையைத் திரட்ட வேண்டும்.

முப்பதுகளில் ஸ்பெயின் உள்நாட்டுப் போரில் பாசிஸ்டு பிராங்கோவை எதிர்த்து கிறிஸ்டபர் காடுவெல், மால்ரோ, நெரூடா போன்றோர் அமைத்த சர்வ தேசிய அணியைப் போல ஒரு அணியை எழுத்தாளர்கள் உருவாக்க வேண்டும்.

**த**மிழ்நாட்டில் சர்வதேச அணியை அமைக்கும் பணியில் இதோ தமிழ்நாடன் தயாராகிறார் - தன் 'அம்மா அம்மா' வுடன்.

பிறந்த நாட்டை மட்டுமல்லாமல் வையத்து நாடுகளை யெல்லாம் பெற்ற தாயாகப் பாவிக்கிறார்.

ஆப்பிரிக்கா.......... அமெரிக்கா.......... இந்தியா.......... சோவியத்........... இந்த இளைய மைந்தனுக்குத்தான் எத்தனை 'அம்மா'க்கள். இன்னும் சில அம்மாக்கள் இவரது கவிதை மழலையைக் கேட்கக் காத்திருக்கிறார்கள்.

**த**மிழ்நாடன் எந்த அம்மாவையும் சின்னம்மாவாக்க விரும்பவில்லை.

இவர் முற்போக்கான பிள்ளை என்றாலும் 'முதலாளித் துவ, அம்மாவைக் கண்டு முகம் சுளிக்கவில்லை. 'சோசலிஸ' அம்மாவைக் கண்டு பரவசமாகி நின்று விடவும் இல்லை.

ஒவ்வொரு அம்மாவையும் நேசிப்பதில் இராமன் ஆகிறார்.

விமர்சிக்கும்போது பரதன் ஆகிறார்.

'அம்மா' அல்லது தேசம் என்பது வெறும் மண் அல்ல; மக்கள்.

தமிழ்நாடன், தவறான தடத்தில் செல்லும் அல்லது தவறாகத் தடம்புரண்டு செல்லும் ஆளும் வர்க்கத்தையும் அரசையும் நோக்கி எதிர்ப்புக்குரல் கொடுக்கிறாரே யொழிய, எந்த மக்களையும் எடுத்தெறிந்து பேசவில்லை.

தமிழ்நாடன் பார்வையில் பழுதில்லை.

**அ**ம்மா அம்மாவில்' நம்மை ஆண்டவர்களைப் பற்றிய இரண்டு சித்திரங்கள்...

சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யக் கனவு கண்ட வெள்ளை ஏகாதிபத்தியத்துக்குத்தான் ஒரு காலத்தில் எத்தனை பெருமைகள்! அவையெல்லாம் இன்றைக்கு எங்கே போயின? என்ன ஆயின?

வெள்ளை ஏகாதிபத்தியத்தின் 'மகாகனத்'திற்கு மனித உருவம் தந்தால் அது வின்ஸ்டன் சர்ச்சில் மாதிரிதான் இருக்கும்.

இன்று அந்த 'மகாகனம்' மறக்கப்பட்டு விட்டது. ஒன்றுமில்லாமல் உதிர்ந்துவிட்டது.

'உன் பெருமை சர்ச்சில்
சுருட்டுச் சாம்பல் ஆனது.

என்கிறார் தமிழ்நாடன்.

பொருத்தமான சித்திரம்.

**எ**ன்னைப்போலவே தமிழ்நாடனும் அவசர நிலையை எதிர்க்கவில்லை.

இந்திய சமூகத்திற்கு இனிமேல்தான் கதி மோட்சம் என்று அவசர நிலை அறிவிக்கப்பட்டபோது அவசரப்பட்டு மகிழ்ச்சியடைந்தோம்.

எதிர்பார்த்தோம்.

ஏமாந்தோம்.

இலட்சக்கணக்கான இந்திய சகோதரர்களின் எதிர்பார்ப்பு களையும் ஏமாற்றங்களையும் வெளிப்படுத்தும் வகையில் தமிழ்நாடன் 'இந்திய அம்மா'வைப் பார்த்துப் பேசுகிறார்.

'நகம் வெட்டும் சாக்கில்
விரலையே வெட்டும்
செவிலியிடத்தில்
சிக்கிக் கொண்டாய் நீ'

உண்மையான சித்திரம்.

தமிழ்நாடன் இன்னும் பல அம்மாக்களை ஈன்றெடுக் கட்டும்.

தாலாட்டவோ பாலூட்டவோ நாம் தயார்.

❐

*மார்ச், 1978*

அகராதி

✡

# வட்டார் வழக்குச் சொல்லகராதி

✡

கி. ராஜநாராயணன்

தமிழில் 'அகராதி' என்று ஒருவனைச் சுட்டிக்காட்டிச் சொன்னால் 'அதிகப்பிரசங்கி' அல்லது மெத்தப் படித்தவன் என்று அர்த்தம்.

'அவனா அவன் பெரிய அகராதியில்லா' என்பது வட்டார வழக்கு. அந்த வட்டார வழக்கிற்கே ஓர் அருமையான அகராதியை உருவாக்கியுள்ளார் இடைசெவல் தந்த இலக்கியச் செல்வர்.

மிகப் பெரிய அகராதிகள் எல்லாம் தனி மனிதர்களால் உருவானவை அல்ல. பல்கலைக்கழகமோ அரசாங்கம் நியமித்த அறிஞர் குழுவோதான் அகராதிகளை உருவாக்கியுள்ளன. பிரெஞ்சு அகராதியை உருவாக்குவதில் ஈடுபட்டது, ஓர் அறிஞர் குழு. அக்குழு 40 அறிஞர்கள் கொண்டது. அந்தப் பணியை முடிக்க அதற்கு 59 ஆண்டுகள் (1635-1694) ஆனது; 51,000 சொற்கள் கொண்ட அகராதி உருவானது.

கைம்மாறு கருதாது, தம்மை வருத்திக் கொண்டு, இத்தகைய சாதனையை முதலில் நிகழ்த்திக் காட்டியவர் ஆங்கில மொழிக்கு அகராதி தந்த டாக்டர் சாமுவேல் ஜான்சன். இத்தனைக்கும் அவர் பல்கலைக்கழகத்துப் படிக்கட்டை மிதித்ததோடு சரி, பட்டதாரி ஆனவர் அல்லர். சேக்ஸ்பியருக்கு அறிமுகம், (Preface to Shakespeare) கவிஞர்களின் வாழ்க்கை (Lives of the Poets) முதலிய நூல்களை இயற்றியுள்ள போதிலும் ஆங்கில மொழிக்கு அவர் அளித்த அகராதி என்னும் அருங் கொடைக்காகவே அவர் ஆங்கிலேயர் நினைவில் நிறைந்து நிற்கின்றார்.

அவர் அளவில் அல்லது அவர் அன்றைக்கு வாழ்ந்து கொண்டிருந்த நிலையில் இருக்கக்கூடிய எவரும் அத்தகைய அருஞ்சாதனை புரிய முடியாது. ஒரு புத்தக வியாபாரியின் மைந்தரான அவர் எப்போதும் வறுமையில் வாடியவர். வறுமை மட்டுமா, பிணியும் அவரை வாட்டியது. பார்வையிலும் பழுது, நரம்புப்பிறழ்ச்சித் தொல்லைவேறு. இவை எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு பல்வேறு குழுக்கள் செய்த பணியைத், தாமே தனி ஒருவராக எட்டு ஆண்டு (1747-1755) காலத்தில் செய்து முடித்து ஆங்கில மொழிக்குப் பெருமை சேர்த்தார்.

பல்வேறு மொழிகளின் சொற்களைத் தன்னகத்தே கொண்ட அந்த மொழிக்குச் சொற்பிறப்பியல் (Etymology) கண்டு சொல்லி, சொற்பொருள் மாற்றம் (Semantics) நிகழ்ந்தவற்றுக்குச் சரியான பொருள் சுட்டி ஒவ்வொரு சொல்லுக்கும் விளக்கங்களும் மேற்கோள்களும் காட்டி அவ்வகராதியை அமைத்துக் கொடுத்தார்.

அதிலும் குறைகள் இல்லாமல் இல்லை. தம்முடைய சொந்த விருப்பு, வெறுப்புக்களை ஓரிரண்டு இடங்களில் அவர் காட்டாமல் இல்லை. அரசியல் என்பதற்கு 'அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்' என்பார். அவருக்கு ஸ்காட்லாந்தியரைப் பிடிப்பதில்லை. அதனால் 'ஓட்ஸ் என்பது இங்கிலாந்தில் குதிரையும், ஸ்காட்லாந்தில் மக்களும் உணவாகக் கொள்ளுவது' என்பார். கோவர் என்பது ஒரு பிரபுவின் பெயர். அச்சொல்லுக்கு ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத் தாவிச் செல்பவர் (Go-over அடிக்கடி கட்சி மாறுகிறவர்) என்று கேலி செய்திருக்கிறார்.

தமிழில் இதுவரை ஏறத்தாழ 200 அகராதிகள் வெளி வந்துள்ளன. அவற்றுள் ஜான்சனைப் போலத் தனிமனித முயற்சியில் வெளி வந்தனவும் அடங்கும்.

வீரமாமுனிவர், பரபிரிசிரியசு, ராட்லர், வின்சுலோ, யாழ்ப்பாணம் சந்திரசேகர பண்டிதர், யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளை, ந.சி.கந்தையா பிள்ளை, பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார் போன்றோரது அகராதிகளும் அடங்கும். விரிவான முதல் அகராதியை உருவாக்கியவர் யாழ்ப்பாணத்துச் சந்திரசேகரபண்டிதர்.

இது 58,500 சொற்களைக் கொண்டது. ஆனால் அகராதிகளுக்கெல்லாம் முன்னோடியாய் அமைந்தது சதுரகராதியே. பெயரகராதி, பொருள் அகராதி, தொகை யகராதி, தொடையகராதி ஆகிய நான்கும் அமைந்திருப் பதால் இப்பெயர் பெற்றது. இதனை இயற்றிய வீரமாமுனிவரே ''வட்டார வழக்குத் தமிழ் அகராதி' ஒன்றைத் தனியே வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்த வட்டார வழக்குச் சொல்லகராதியும் தனிமனித முயற்சியாகவே வெளிவருகிறது. அதாவது அரசாங்கம் நியமித்த எந்தக் குழுவோ பல்கலைக்கழகமோ இதைச் செய்யவில்லை. கி.ராஜநாராயணனும் அவரது நண்பர்கள் போத்தையா போன்றவர்களுமே இந்த அகராதியில் அடங்கியுள்ள சொற்களைத் திரட்டியவர்கள். அவற்றிற்கு அகராதி உருக் கொடுத்தவர் கி.ராஜநாராயணன்.

பெரும்புகழ் பெற்ற பின்னரும் கிராமத்திலேயே வாழ்ந்து கொண்டிருந்தவர் வி.ச.காண்டேகர்; அதுபோலவே தகழி சிவசங்கரன்பிள்ளை கேரளத்தில் கிராமத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்பவர். அவர்களைப்போல் கிராமத்தில் வாழும் ராஜநாராயணனுக்கு நகரத்தின் ஆரவாரங்களில் நாட்டம் இல்லை; 'கிராமியம்' என்பதில்தான் ஆர்வம் அதிகம். அவரது எழுத்தோவியங்கள் எல்லாம் இவ்வுண் மையைப் புலப்படுத்துகின்றன. வட்டார வழக்குச் சொல் லகராதியோ இதனை முற்ற முழுக்க மெய்ப்பிக்கிறது. இந்த அகராதியை ஒருமுறை படித்த பின்னர் நாமும் ஏன் ''சுத்தப் பட்டிக்காட்டானாக இருந்திருக்கக் கூடாது'' என்று ஓர் ஆதங்கம் உண்டாகிறது.

**எ**ழுதப் படிக்கத் தெரியாத கிராம மக்களுக்கும் விவகார அறிவு (நடைமுறை அறிவு) அதிகம் என்பது இவ்வகராதி

மூலம் தெரிகிறது. ''இடசந்து'' என்பதற்கு இரண்டு வீட்டுக்காரர்களும் ஆளுக்கு ஒன்றரை அடி போட்டுக் கட்டுவது என்று பொருள் தந்திருக்கிறார் கி.ரா. இப்படிச் செய்ய இருவரில் ஒருவர் மறுக்கும்பொழுது விவகாரம் நீதிமன்றம் போகிறது. ''ஈரங்கி (Hearing) என்பதற்கு ''ஆர்கியூமெண்ட் வாய்தா'' என்று அவ்வளவு சரியாகப் பொருள் சொல்லியிருப்பதை நீதிமன்றம் சம்பந்தப்பட்டவர்களே நிச்சயம் மெச்சுவார்கள்.

அந்நிய ஆட்சியின் காரணமாக ஆங்கிலம் இங்கே ஒட்டிக் கொண்டது. படித்தவர்களிடம் ஆங்கிலம் ஆங்கிலமாகப் புழங்கியது என்றால் கிராமவாசிகளிடம் அது தமிழாடை பூண்டது. தமிழ்ச் சொல்போலவே ஆனது. Opinion, ஒப்பினியம் என்றும் Blank பிளாங்கி என்றும் Phonograph Box பூனைக்காரப் பெட்டி என்றும் ஓசைப்படாமல் உருமாறியுள்ளன. இவை போன்றனவே பெண்டு (Bend) எடுத்திட்டான், மேஜர் (Major) ஆயிட்டாள் என்பனவும்.

வரலாற்றிற்கு உதவும் கல்வெட்டுக்களில் காணப்படும் சொற்களும் கிராமங்களிலேயே புழக்கத்தில் உள்ளன. 'எதிரா' என்பதற்கு இங்கு ''வரும் ஆண்டு'' எனும் பொருள் தரப்பட்டுள்ளது. சோழர் கல்வெட்டுக்களில் ''எதிராம் ஆண்டு'' என்ற சொற்றொடர் காணப்படுகிறது. யாழ் மக்களும் எதிராம் என்பதற்கு 'அடுத்து வரும்' என்னும் பொருளில் பயன்படுத்துகின்றனர். (இலங்கை வானொலியில் 'எதிர் வரும்' ஞாயிற்றுக்கிழமை இன்ன நிகழ்ச்சி நடைபெறும் என்று அறிவிக்கிறார்கள்.)

இந்த வட்டார வழக்குச் சொல்லகராதி நெல்லை-கரிசல் காட்டுப் பகுதியில் புழக்கத்தில் உள்ள சொற்களைக்

கொண்டது. பிற பகுதிகளிலும் இத்தகைய சொற்கள் வழக்கில் உள்ளன. நெல்லையில் ''அக்குத் தொக்கு இல்லை'' என்றால் முகவையில் ''பிக்குப்பிடுங்கல் இல்லை'' என்பார்கள். நெல்லையில் அட்டமணியம் என்றால் முகவையில் மொட்டையதிகாரம் என்பார்கள். உசுப்பு என்பது எழுப்பு என்னும் பொருளில் இரண்டு பகுதிகளிலும் புழக்கத்தில் உள்ளது. அது உயிர்ப்பு என்பதன் மரூஉவாகலாம். 'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு' என்ற குறட்கருத்தின் அடிப்படையில் உருவான சொல்லாயிருக்கலாம். ''மிராட்டிப் பய'' என்னும் வசைச் சொல்லுக்கு ஈடாக 'கொங்கணப்பய' என்று திட்டுவது குறிப்பிடப்படுகிறது. 'கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா' - என்ற வரியையும் முகவைப் பகுதியில் ''கொங்காப்பயல்'' என்று இன்றுவரை சொல்வதையும் ஒப்பிட்டுச் சுவைக்கலாம். 'காலம் இப்போது எவ்வளவோ மாறிவிட்டது, ஆனாலும் வசவுகள் அப்படியேதான் இருக்கின்றன' என்று ஆச்சரியப்படுகிறார் கி.ரா.

சிலசமயம் ஒரு பொருளைச் சொன்னால் மட்டும் முழுமை பெற்றதாகக் கருதாவிடத்து, அது இன்ன பொருள் அல்ல என்பதையும் இந்த அகராதி தெளிவுபடுத்துகிறது. அண்டங்காக்கையின் நிறத்தைக் கருப்பு என்று சொல்லி விட்டுவிடலாம. இன்னும் விளக்கிச் சொல்ல வேண்டு மானால் நனைந்த பனை போன்றது, வெள்ளை சிறிதும் கலவாக் கருப்பு அதன் நிறம் எனலாம் அதுபோல ''பத்தடி பத்தடியா'' என்பதற்கு ''அடுத்தடுத்து'' எனப் பொருள் சொல்வதோடு ''பத்தடி என்பது பத்து அடிகளைக் குறிப்பது அல்ல'' என்று பொருள் சொல்லும் Negative approach பாராட்டுக்குரியது. இந்த எதிர்மறை அணுகல் ஆழ்ந்த பொருள்காண உதவும்.

சில சமயங்களில் சொற்கள் எவ்வாறு சிதைந்து பொருள் கொள்ளப்படுகின்றன என்பதற்குப் பார்ப்பனர்கள் பயன் படுத்தும் நல்ல தமிழ்ச் சொற்களை சான்றாகக் காட்டலாம். 'இல்' என்பதை 'அகம்' என்று இலக்கியம் குறிப்பிடுகிறது. 'அகத்திற்குப் போகிறேன்' என்று சொல்வதை 'ஆத்துக்குப் போகிறேன்' என்று சொல்லிச் சிதைத்துவிடுகின்றனர். அதுபோல்தான் அம்மாஞ்சி என்பதும், அம்மாஞ்சி என்றால் ஒன்றும் தெரியாதவன் 'சுத்த அம்மாஞ்சி' என வழக்கில் உள்ளதை இந்த அகராதி சுட்டிக் காட்டுகிறது.

உண்மையில் அது அழகான, அர்த்தமுள்ள தமிழ்ச் சொல். அம்மாவின் உடன்பிறந்தார் அம்மான். ''அம்மான் சேய்'' மாமன் மகன் என்பதன் மரூஉ. (ரா ராகவையங்கார் தம் மாமன் மகன் மு.இராகவையங்காரை அம்மான் சேய் என்று குறிப்பிடுவார்)

'எவர்ணமான சிறை' என்பதற்கு யௌவனமான பேரழகி என்று பொருள் காணும்போது இன்பமாக இருக்கிறது. சிறை வைத்துப் பாதுகாக்க வேண்டிய அழகு என்பதற் காகச் சிறை என்று கிராமத்தார் குறிப்பிட்டிருக்கலாம். கர்ப்பிணியைக் குறிப்பிட 'ஈருசுரு' என்பதும் பொருள் பொதிந்த சொல் அல்லவா? சொலவம் என்று பழமொழியையும் நாட்டார் பாடல் என்று நாட்டுப் பாடலையும் குறிப்பிடுகிறார் கி.ரா. இது பிற பகுதிகளில் அறியப்படாததாக இருக்கலாம். அகராதியைத் தொடர்ந்து பயிலும்போது புரியும்.

நம் பாட்டியார், தாயார் காலத்து நகைகள் இன்று இல்லை. அவற்றின் பெயர்களை இந்த அகராதி மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. கிராமத்து அணிகலன்களையும் வங்கி (குத்துவாள்) தரங்கு (வேல்கம்பு) போன்ற ஆயுதங் களையும் கண்டுகொள்ள முடிகிறது.

கால்நடை பராமரிப்புத் துறையினருக்குக்கூட இந்த அளவு தெரியுமோ என்னவோ... கி.ராவும், போத்தையாவும் மாடுகளைப் பற்றி எவ்வளவு தெரிந்து வைத்திருக் கிறார்கள். மாடுகளில் இத்தனை நிறங்களா, இத்தனை நோய்களா, இன்னின்னவை ஆகாதவையா...... அறிய அறிய நாம் ஆச்சரியப்படுகிறோம்.

அகராதிகளில் விளக்கமான சொற்றொடர்களில் பொருள் தரப்படுவதில்லை. பொருளை விளக்கும் மேற்கோள்கள் (Illustrative idioms) கொடுக்கப் பெறுவதில்லை. இக்குறை இதில் இல்லை.

ஒவ்வொரு சொல்லுக்கும் தேவையானபோது விளக்கமோ ஒரு பழமொழியோ கதையோ தரப்படுகிறது. ''அத்தர் பானஸ்கோல்'' என்பதற்குத் தந்திருக்கும் கதைபோல் ''அத்திரிபாச்சா கொழுக்கட்டை'' என்று ஒரு கதை முகவைப் பகுதியில் உண்டு.

கொட்டை நூற்றல் என்பதற்கு 'நூல் நூற்றல்' என்ற பொருள் சொல்லி அதனோடு ''கப்பல் ஓடிக்கெட்ட குடியை கொட்டை நூத்துத்தேத்தப் போறாராக்கும்'' என்ற பழமொழி இணைத்துக் காட்டப்படுகிறது. கப்பல் விட்ட பண்டை நாட்டவர் வழிவந்தவர் நாம் என்ற வரலாற்று உண்மையைப் பறைசாற்றும் பழமொழி அல்லவா இது? நாடகக் கலைஞ்ன் கலை அரங்கில் மக்கள்தொகையையும் கூலிவேலை செய்பவன் சூரியன் விழும் வேளையையும் கணக்கிடுவதில் கருத்தாயிருப்பதை கிராம மக்கள் கேலி செய்து சொல்வதைப் படம்பிடித்துக் காட்டும் பழமொழி, ''கூத்தாடிக்குக் கீழே கண்; கூலிக்காரனுக்கு மேலே கண்'' என்பது. இத்தகைய பழமொழிகள் பல பிற்சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளன. பழமொழிகளைப் போலவே நல்ல பழங்கதைகளை கி.ரா. நடுநடுவே கூறுகிறார். ''வாயுள்ள

பிள்ளை பிழைக்கும்'' என்பதற்கு இவர் தந்திருக்கும் தெனாலிராமன் கதை சுவையானது.

இன்னும் பெண்களுக்குள் தனியாகப் பேசிக்கொள்ளும் சுவையான பேச்சுக்கள் எல்லாம் இவர் எழுத்தில் உருவம் பெற்றுள்ளன. ஆக, பொருட்சுவை தர வந்த அகராதியில் அகச்சுவையும் உண்டு.

''தனி'' என்பதைத் ''தனீ'' என்று நீட்டும்போது உச்சரிப்பின் மூலம் தனித்தன்மையான பொருள் காண்பவர் கி.ரா. அவருடைய இந்த எழுத்துருப்பெற்ற பேச்சுத் தமிழ் அகராதியும் 'தனீ' அகராதிதான்.

''பெரிய என்பதைப் ''பெரிய்ய'' என்று குறிப்பிட்டு அந்தச் சொல்லுக்குக் காட்சி ரூபம் தருபவர் கி.ரா. அவருடைய இந்த அகராதி 'பெரிய்ய' சாதனைதான்.

பல்கலைக்கழகப் பட்டம் பெறாத ஜான்சனுக்கு ஆக்ஸ் போர்டு பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்தது அவருடைய அகராதிக்காக; அரிய சாதனைக்காக....

தற்போது தமிழ்நாட்டில் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. கி.ரா.வுக்கு எந்தப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் அளிப்பதில் முந்திக் கொள்கிறது என்று பார்ப்போம்.

❒

டிசம்பர், 1982

வசன கவிதை

✡

# மகரந்தக் கோலங்கள்

✡

வசந்தரூபன்

*கள்ளோ காவியமோ?*

*-இளமையில் படித்த ஒரு நாவலின் தலைப்பு இது.*

*இப்போதும் அந்தத் தலைப்பை - அந்தக் கேள்வியை என் உதடு உச்சரிக்கிறது; மனதில் பதில் எதிரொலிக்கிறது.*

*காதல்......*

*கள்ளும்தான் - காவியமும்தான்*

*வெறியும்தான் - நெறியும்தான்*

போகமும்தான் - யோகமும்தான்

உடற்சேர்க்கை, உள்ளச்சேர்க்கை - இரண்டும்தான்

இரண்டும் சேர்ந்ததுதான் மகரந்தச் சேர்க்கை!

புலன்சார்ந்த - உடல் சார்ந்த காதலை வள்ளுவரும் புறக்கணித்ததில்லை.

'ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள'

என்கிறாரே. அது என்னவாம்?

ஆண்டாளும் பாரதியும் புலன் இன்பப் புதுமைகளை மன்மதக் கலையின் மகிமைகளை - உயிர்த்துடிப்புடன் வெளிப்படுத்தியுள்ளனர்.

அவர்கள் வரிசையில்-

வசந்தரூபனும் வந்து நிற்கிறார்......

அடடா... மோகக் கடலில் மூழ்கிக் களிக்கிறார்;

போகத்தில் ஒளிவீசும் முத்துக் குளிக்கிறார்!

''அவர்கள்
நூறு தடவை முத்தமிட்டனர்;
ஆயிரம் தடவை
ஆசையாய்த் தழுவி
அணைத்துக் கொண்டனர்
பின்னர் - சற்றே நிறுத்தினர்....

எதற்குத் தெரியுமா?
தொடங்க வேண்டும்
துடிப்புடன் மீண்டும்
நூறு தடவை
ஆயிரம் தடவை
அதற்காகத் தான் .....

*இது ஒரு கங்கைக் கரை கவிதை!*

*மனப்பாடம் செய்ததை ஒப்பிக்கும்போது இடையில் தடைப்பட்டால் ஆரம்பத்திலிருந்து மீண்டும் சொல்லும் பள்ளிச் சிறுவனைப்போல் உடற்பாடம் படிக்கும் காதலர்கள் இடையில் நிறுத்தி நிறுத்தி ஆரம்பத்திலிருந்து ஆரம்பிப்பார்கள். அப்போதுதான் இந்த உடல் சங்கீத அருவியாய் உருகி ஆனந்த ஆறாய்ப் பெருகிப் பரிபூரணக் கடலில் கலக்கும்.*

*இந்த ரகசியம் - நம் காவிரிக்கரைக் கலைஞருக்கு வசந்தரூபனுக்குத் தெரிந்திருக்கிறது.*

''உன்னை
எண்ணி எண்ணி
என் உடல்
இளைக்கவில்லை
இருகரம் வளைத்து
நீ என்னை
இறுக அணைக்கும்போது
உன் அணைப்புக்குள்
முழுவதும் அடங்க
வேண்டுமென்பதற்காகவே
அவ்விதம் இளைத்திருக்கிறேன்''

*என்று தன் அடங்காத ஆசையைப் பிரகடனப்படுத்துகிறார்.*

*இதேபோல் இன்னொன்று:*

''இந்த இரவு
விடியாமலேயே
நிரந்தர இரவாகி
விடக்கூடாதா?''

*என்று கேட்கிறாள் காதலி. அவளை மேலும் கீழும் பார்த்து விட்டுக் காதலன் குறும்புத் தனமாகக் கூறுகிறான்;*

''எனக்கும் அதே ஆசைதான்
ஆனால்
என் அன்புக் கண்ணே!
ஆயிரமாயிரம்
நெசவுக் கலைஞர்களை
வாடித் தவிக்க விட்டு
நாம்
வேடிக்கை பார்க்கும் நிலை
பாவமன்றோ!''

*அடேயப்பா! எவ்வளவு கருணை! நம் நெசவாளிகள் வசந்தரூபனுக்கு ஒரு பொன்னாடை போர்த்தலாம்!*

***சொ**ல்வதைச் சுவையாகச் சொன்னால், லாவகமாகச் சொன்னால் கவிதை அங்கே கண்ணடிக்கும்.*

*கல்லூரி நாட்களில் அளவாய் இல்லாவிட்டாலும் அழகாய் ஆறு பெண்களைப் பெற்ற பெருமகன் ஒருவர் வீதியில் வரும்போதும் போகும்போதும் என்னோடு படித்த மாணவர் சிலர் 'தங்கச்சிலை தயாரிப்பவர்....' என்று கிசுகிசுப்பார்கள்*

வசந்தரூபனின் 'ஸ்வர்ண கன்னி' என் அந்த நாள் ஞாபகத்தைக் கிளறுகிறாள்.

காதலியின் பெற்றோர் கவனமாய் இருக்க வேண்டுமாம். காரணம் - தங்கக்கட்டுப்பாடு இருக்கும்போது இருபத்து நாலு காரட்டில் ஒரு பெண்ணை உருவாக்கி விட்டார் களாம். சட்டப்படி குற்றமல்லவா? பெண்ணைப் பெற்றவர்களுக்குப் பெரிய ஆபத்தாம்! எந்த நேரமும் கைது செய்யப்படுவார்களாம்! 'So beauty is so fatal' என்று சேக்ஸ்பியர் வேறொரு சந்தர்ப்பத்தில் எழுதியது இங்கே பொருந்துகிறது. 'அழகு வரி', 'ரதியும் விதியும்' இரண்டும் அழகுக்கு அழகு சேர்க்கும் சொற்சித்திரங்கள்.

இடைக்காலப் புலவர்களுக்குச் சிலேடைகள் கரும் பென்றால் இந்தக் காலத்து வசந்தரூபனுக்கு சேட்டைகள் கற்கண்டு. கண்தானம் நல்லதுதானே! செத்த பிறகு மண்ணுக்குள் மக்கிப்போகும் கண்ணுக்கு மறுபடியும் வாழ்வு கிடைக்கிறதே! குருடன் ஒருவனுக்குப் பார்வை கிடைக்கிறதே!

இவரோ - அந்தத் தானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்! காரணம்? தன் காதலியைப் பார்த்துக் களித்த கண்களைத் தானம் கொடுத்தால் அவை யாருக்காவது பொருத்தப் படுமாம். பிறகு யாரையாவது பார்த்து விடுமாம்!

''என் கணகளின் நரம்பு
கறைபடுமன்றோ!''

என்று கவலைப்படுகிறார் இந்தக் கற்புக்கரசர்!

கண்தான இயக்கத்தாரை மட்டுமல்ல; கண் இமைக்காத தேவர்களையும் இவர் விடவில்லை. இவர் இலக்கணப் படி நல்ல கண்கள் என்றால் நொடிக்கு நூறு தரம் இமைக்க வேண்டும். ஏனாம்?

''என் கண்களுக்குள்
நீயல்லவா
குடியிருக்கிறாய்!
உனக்கு
வெண்சாமரம்
வீசவேண்டாமா?''

என்று காதலியைப் பார்த்துச் சொல்கிறார்; இத்தோடு நிறுத்துகிறாரா? இல்லை? தேவர்களை வம்புக்கு இழுக்கிறார்.

''நிச்சயம்
மிக நன்றாக இருக்கும்''

என்று பதிலைப் பந்துபோல் வீசுகிறார்! இவருக்கு இருக்கும் செல்லக் குறும்பில் பாதியாவது அந்தத் தேவிக்கும் இருக்கும் அல்லவா!

நீ, ''வீட்டுக்கு விளக்கு'' என்று விளித்து நெருங்கும்போது தேவி ''வீட்டுக்கு விலக்கு'' என்று கெட்டிக்காரத்தனமாக விலகி ஓடுகிறார்!

நல்ல நாடகம்!

நாடகமோ கதையோ கவிதையோ வார்த்தைகள் வைரங்களாக விழ வேண்டும்.

'சாணை தீட்டிய கண்கள்'

'சர்ப்பப் பார்வை'

*இப்படிச் சில சொல்லோவியங்களில் சொக்கி நிற்க வைக்கும் வசந்தரூபன்.*

*''நாட்டுக் கட்டை, சரியான சைஸ், ஒதுக்குவது...'' போன்ற சுவர்க் கிறுக்கல்களைக் காட்டி ஏனோ சங்கடப் படுத்துகிறார்!*

*'சரசம்' 'அலாதியான இன்பம் பயப்பது' என்று பாராட்டு கிறார். உண்மைதான். ஆனால் அது விரசம் ஆகக்கூடாது. விரசம் என்றாலும் அதில் 'ரசம்' இருக்கிறதே என்கிறார்.*

*நமக்கு சரசத்தில் உள்ள ரசமே போதும்!*

*ஒரு வாக்குமூலம்...*

*சாக்ரடீசுக்குப் பிறகு இளைஞர்களை அதிகம் கெடுத்தவர் களின் பட்டியலில் எனக்கும் இடம் உண்டு.*

*நான் வசந்தரூபனையும் நன்றாகக் கெடுத்திருக்கிறேன்! மன்னிப்பாராக!*

❑

***20.8.1981***

கவிதை நூல்

✡

# சித்திரை வெய்யில்

✡

மித்ரா

**வ**சனத்தில் கவிதை எழுதலாம். சாட்சி... நேற்று பாரதி, கண்ணதாசன், நான்!

வசன கவிதை மேல் மித்ராவுக்கு அடங்காத காதல்; அதனால்தான்

''ஒப்பில்லா உயர்கல்விக்கு
ஒவ்வாது இலக்கணம்''

என்று யாப்புக் கிழவியை ஓரம் போகச் சொல்கிறார்.

மித்ராவுக்குக் காதல் மேலும் அளவு கடந்த காதல்.

மார்கழியில் பனி...
சித்திரையில் வெயில்....

*காதல் உள்ளங்களுக்கோ எப்போதும் மார்கழி; எப்போதும் சித்திரை. இந்தத் தொகுப்பின் பல பக்கங்களில் மார்கழிப் பனி கொட்டுகிறது; சித்திரை வெயில் கொளுத்துகிறது. என்ன சொன்னாலும் அவ்வளவு எளிதாய்க் காதலை உலகத்திலிருந்து 'பிரஷ்டம்' செய்ய முடியவில்லை. லைலாவையும் மஜ்னுவையும் இலக்கியச் சோலையி லிருந்து விரட்டியடிக்க முடியவில்லை.*

''வண்ண நிலவு மட்டும்
ஜன்னலுக்குள் மெல்ல
எட்டிப் பார்க்கிறது
ஒருவேளை
நான் உயிரோடு இருக்கின்றேனா
இல்லை -இறந்துவிட்டேனா
என்று சந்தேகத்தோடு
பார்க்கிறது போலும்''

*இது ஒரு மஜ்னுவின் குரல்.*

முன்பெல்லாம் நான்
மறுபிறவியை விரும்புவதுண்டு
இப்போதெல்லாம் அதைக்
கனவிலும் நினைத்துப் பார்ப்பதில்லை
காரணம்
வரும் பிறவியிலும்
பிரிவு வருமல்லவா
அதனால் தான்.

*இது ஒரு லைலாவின் குரல். இதுவே இங்கே கேட்கும் மித்ராவின் குரல். தாபம், தாகம், ஏக்கம், ஏமாற்றம் - இவற்றை ஆண்குரலில் கேட்டுக்கேட்டு அலுத்துப்*

போய்விட்டது; ஒரு பெண் குரலில் கேட்கவேண்டும் என்று என்னுள் ஓர் அற்ப ஆசை. மித்ராவின் மின்னல் குரலில் வசப்படலாம் என்று நினைத்தால் இடையில் ஆணின் இடிக்குரல் வந்துது மோதுகிறதே! (தொலைபேசியில் சில நேரங்களில் சம்பந்தமில்லாத குரல் கேட்பது போல)

ஆதர்சம் கூடாது என்பதல்ல, வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் பின்பற்றி எழுதுவதுதான் ஆதர்சம் என்று தவறாகப் புரிந்துகொள்ளப்படக் கூடாது.

ஆரம்ப நாட்களில் பாரதிக்குக் கூட ஷெல்லி ஆதர்சம். எனினும் அவன் ஷெல்லியை அப்படியே பின்பற்றவில்லை. பின்பற்றியிருந்தால் 'எழுதுகோல் தெய்வம். என் எழுத்தும் தெய்வம்' என்று ஒரு மகாகவியாய் உயர்ந்திருக்க முடியாது.

ஒரு மாதிரி இன்னொரு மாதிரியை உருவாக்க வேண்டும்; ஒரே மாதிரிகளை உற்பத்தி செய்யக்கூடாது.

இப்போதைக்கு மித்ராவுக்கு நான் (கொஞ்சம்) ஆதர்சமாக இருக்கலாம். என் 'கனவுகளைத்' தொட்டு எழுதியிருக்கலாம்... அவர் பேனா...

தொட்டெழுதும் பேனாவாக இருக்கலாம்.

இனி-

உன்னதமான உணர்வுகளைஉயிர்த்துடிப்போடு எழுதும் ஊற்றுப் பேனா ஆகட்டும்.

❒

**22.6.1981**

நாவல்

✡

# தலைமுறைகள்

✡

நீல. பத்மநாபன்

*நீல. பத்மநாபன் பன்மையில் குறிப்பிட்டுள்ளதைப் போலவே, மூக்காண்டிச் செட்டியாரில் தொடங்கி, சுவை யாகக் கதை சொல்லும் அவர் மகள் உண்ணாமலை ஆச்சி, ஆச்சியின் மகன் நாகரு பிள்ளை, அவர் மகன் திரவியம் இப்படிப் பல தலைமுறைகளைத் தொட்டுக்கொண்டு செல்லும் ஒரு தொடர்கதைதான் 'தலைமுறைகள்'.*

*இந்தக் கதையிலேயே அதிகமாகப் பேசுகிற பாத்திரம் திரவி. அதற்கடுத்தது உண்ணாமலை ஆச்சி. மிகுதியும்*

பேசப்படுகிற பாத்திரம் நாகம்மை. ஏசப்படுகிற பாத்திரம் அவளை ஒதுக்கிவைத்த சிவானந்தப் பெருமாள்.

**க**தை இரணியல் மூக்காண்டிச் செட்டியார் பரம்பரையைப் பற்றியதுதான். என்றாலும் திரவி தனக்கு விவரம் தெரிந்த நாள் முதல்தான் கதையைச் சொல்லுகிறான். ஆசிரியர் கூற்றுப்படி 15 வயது முதல் 25 வயதுவரை திரவி தன் குடும்பத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைச் சொல்லிக் கொண்டு போகிறான். இதிலேயே எழுபது ஆண்டு அளவுக்கான தலைமுறைக் கதைகள் வந்துவிடுகின்றன.

திரவியின் அப்பா நாகரு பிள்ளை, தன் சக்திக்கு மீறிச் செலவு செய்து இரண்டாவது மகள் (திரவியின் அக்கா) நாகம்மைக்குத் திருமணம் முடிக்கிறார். மாப்பிள்ளை அதே ஊர் புத்தன் தெருவில் இருந்த சிவானந்தப் பெருமாள். ஏகப்பட்ட ரொக்கம் கொடுத்தும் சீர்சிறப்புச் செய்தும் ஆறாவது மாதத்தில் அவனும் அவன் தாய் பாப்பாத்தியும் நாகுவை வீட்டுக்கு அனுப்பி விடுகிறார்கள். நாகுவின் அப்பா ஊர் டிரஸ்டிகள் கூட்டத்தில் முறையிடுகிறார். அவர்கள் பஞ்சாயத்து செய்தார்களேயொழிய சிவானந்தப் பெருமாளைத் தட்டிக் கேட்கவில்லை. 'இவள் பெண்ணே அல்ல' என்று குற்றம் சாட்டித் தீர்ந்து விடுவதாயும் கூறிவிடுகிறான் சிவானந்தன்.

இதற்கிடையில் குற்றாலம் என்ற வாலிபன் திரவிக்கு நண்பனாகிறான். அவன் பலாப்பழம் போன்றவன். ஊராரின் பார்வைக்கு முரடனாகத் தோன்றினாலும் நல்ல உள்ளம் உடையவன். அவனது அஞ்சாநெஞ்சம் திரவியிடம் உயர்ந்த எண்ணத்தை உருவாக்குகிறது.

சிவானந்தப் பெருமாள் இரண்டாவது திருமணம் செய்து கொண்டான் என்று கேள்விப்பட்டதும் திரவியின் மனம் படாதபாடு படுகிறது. ஏன் தன்னுடைய அக்காவுக்கும் இரண்டாவது திருமணம் செய்து வைக்கக்கூடாது என்ற எண்ணம் திரவியின் உள்ளத்தில் துளிர்க்கிறது. மூட நம்பிக்கை அனைத்தையும் ஒட்டுமொத்தமாய்த் தன்னகத்தில் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் திரவிக்கு அந்த மாதிரி எண்ணம் தோன்ற அவனது கல்வியும் சமூக மாறுதலும் தூண்டுகோல்களாக அமைகின்றன.

ஆம்! திரவி எஸ்.எஸ்.எல்.சி. முடித்துவிட்டு ஆசிரியர் பயிற்சிக்குச் சேர்கிறான். அதில் தேறியதும் ஒரு தனியார் பள்ளியில் பணம் கொடுத்து வேலை பெறுகிறான். பின்னர் அரசினர் பள்ளியில் வேலை கிடைக்கிறது.

அங்கே மோசஸ் வாத்தியாரின் அரவணைப்புக் கிடைக்கிறது. அவர்தான் தன் மனைவி டாக்டர் ரோசம்மையிடம் திரவியின் அக்காவைக் கொண்டுவந்து காட்டச் சொல்லுகிறார். அதன்படி எப்படியோ நாகுவை டாக்டரிடம் கொண்டுவந்து சேர்க்கிறான். நாகம்மையிடம் எந்த உடற்குறையும் இல்லை; சிவானந்தன்தான் ஆண்மையற்றவன் என்பது தெளிவாகிறது. திரவி நேரடியாகவே சிவானந்தப் பெருமாளிடம் சென்று தன் அக்காவை ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்று வலியுறுத்கிறான். 'ஏற்காவிட்டால் என் அக்காவைக் குற்றாலத்திற்கு மறுமணம் செய்து வைக்கவும் தயங்கமாட்டேன்' என்றும் சொல்லிவிட்டு வந்து விடுகிறான்.

நாகு அக்காவுக்கும் குற்றாலத்திற்கும் திருமணம் நடத்தி விடுவது என்று வீட்டில் எல்லோரையும் சமாதானப்படுத்தி வைத்திருந்த திரவிக்கு ஒரு பேரிடி முடிவில் காத்திருக்

கிறது. வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடை வதைப்போல.

அன்று சொள்ளை மாடன் கோவிலில் கோடைச் சிறப்பு விழா நடக்கிறது. ஓட்டன் துள்ளல், கதகளி, நையாண்டி மேளம் எல்லாம் நடக்கின்றன. ஆனால் திரவி போக வில்லை. அப்போது நையாண்டி மேளம் பெரும் இரைச்ச லாகக் கொட்டப்படுகிறது. கொஞ்ச நாட்களாகச் சித்த சுவாதீனமில்லாமல் இருக்கும் சிவானந்தப் பெருமாள் 'ஓ' என்ற அலறலுடன் ஓடிப் பக்கத்தில் இருந்த பாழுங் கிணற்றில் விழுந்து விடுகிறான். அந்தப் பாழுங்கிணற்றில் அந்த இரவில் இறங்குவதற்கு எல்லோரும் அஞ்சிய நிலையில் குற்றாலத்தின் காலில் போய் விழுகிறாள், சிவானந்தத்தின் இரண்டாவது மனைவி வடிவு. இரக்கங் கொண்டு கிணற்றில் இறங்கிய குற்றாலம் திரும்பவில்லை. விடிகிறது. கிணற்றில் விழுந்தவர்களை வெளியே கொண்டுவரும் வேலை நடக்கிறது. சிவானந்தம் மட்டும் பிழைத்துக் கொள்கிறான். குற்றாலம் பிணமாக எடுக்கப் படுகிறான். செய்தி அறிந்த திரவி அங்கே ஓடி வருகிறான். 'போஸ்ட்மார்ட்டம் செய்த பிறகு பிரேதம் தரப்படும்' என்று காவல்துறை அதிகாரி தடுத்து நிறுத்துகிறார், திரவியை.

திரவி கொஞ்சம் கொஞ்சமாகக் கேள்விப்படுகிறான், சிவானந்தப் பெருமாள் பைத்தியமாக நடித்துத் தன் இரண்டாவது மனைவியின் உதவியுடன் (கிணற்றில் குதித்து அங்கே ஒளிந்திருந்து) குற்றாலத்தைப் பழிதீர்த்துக் கொண்டான் என்று.

கடைசியில் இரணியல் கீழைத் தெருவை விட்டுத் தன் தாய் தந்தையுடனும் நாகு அக்காவுடனும் திரவி வெளியேறு கிறான்.

தலைமுறைகளின் கதை இங்கே முடிகிறது. கதை என்னவோ சாதாரணமானதுதான். ஆனால் நாவல்....?

இரணியல் செட்டிமார்களுக்கு ஒரு வரலாறு உண்டு. ஆதியில் அவர்களும் காவிரிப்பூம்பட்டினத்தில் (நகரத்தார் போல) இருந்தவர்கள்.

தங்கள் குலப்பெண் ஒருத்திமேல் ஒரு துலுக்க ராஜா அழகுக்காக ஆசைப்பட்ட விபரீதத்துக்கு அஞ்சிக் 'கோபல்ல கிராமத்து' நாயக்கமார் தெலுங்கு நாட்டை விட்டுப் புறப்பட்டதாக கி.ராஜநாராயணன் 'கோபல்ல கிராமத்தில்' குறிப்பிடுவதைப்போல், திரவியின் மூதாதை யரான செட்டியார் ஒருவரின் பெண்கள் இருவரை - கடுகு போன்ற பவளத்தில் நூல்கோத்த அறிவுக்காக அவர்கள் இருவரைக் - கட்டிக்கொள்ளக் காவிரிப்பூம்பட்டினத்து ராஜா ஒருவன் ஆசைப்பட்டதாகவும், அதனால் விளைந்த அவலத்தை ஒட்டி அங்கிருந்து செட்டிமார்கள் புறப்பட்ட தாகவும், அப்படிப் புறப்பட்டு வந்த செட்டிமார்கள் வெவ்வேறு இடங்களில் குடியேறியதாகவும், இரணியல் செட்டியார்களின் பூர்வீக வரலாற்றை உண்ணாமலை ஆச்சி வாயிலாகக் குறிப்பிடுகிறார் நீல. பத்மநாபன். பின் இரணியல், பளவடை, பத்மநாபபுரம், பறக்கை, மிடாலம், குளச்சல், திருவாங்கூர் ஆகிய ஏழு ஊர்களில் அவர்கள் குடியேறினர் என்றும் ஒடுப்பறை அம்மன் தான் அவர்கள் குலதெய்வம் என்றும் குறிப்பிடுகிறார்.

இரணியல் செட்டியார்களுடன் நாடாரும் நாயரும்கூடக் கலந்துறவாடுவது, தலைமுறைகளில் காணக்கிடக்கிறது. இரணியல் செட்டிமார் தமிழரேயாயினும் கேரளத்தை

ஒட்டியிருப்பதால் அவர்கள் கோடித்துணி உடுத்தி ஓணம் பண்டிகையைக் கொண்டாடி மகிழும் ஒட்டுறவையும் காணமுடிகிறது.

இந்த நாவல் வழக்கொழிந்த பல சொற்களுக்குப் புத்துயிரளித்துள்ளது. 'சொட்டையிலேயுள்ள சீலம்தானே சுடலைவரை' (தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்) என்பது போன்ற பழமொழிகளையும் நினைவுபடுத்து கிறார். ''வார்த்தைகள் புதிதாய்ச் செய்தெடுக்க முயற்சிகள் நடக்கும் இக்காலத்தில் நம் பழந்தமிழ் மக்கள் சமூகத்தில் கொஞ்சப் பேர்களுக்கிடையிலாவது வாழையடி வாழை யாய் இப்போதும் வழக்கில் இருந்துவரும் சில சொற்களைச் சுவீகரித்துக் கொள்வதால் நம் மொழியின் தூய்மையோ புனிதமோ ஒன்றும் கற்பழிந்து போய் விடாது.' என்பது நீல. பத்மநாபன் எண்ணம். அந்த எண்ணம் இந்த நாவலில் ஈடேறியிருக்கிறது.

ஒரு சமூகத்தின் பழக்கவழக்கங்கள், ஆசார அனுஷ்டா னங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் போன்றவற்றைச் சிந்தாமல், சிதறாமல் சேகரித்துத் தருவதால் மனித இயலாரின் (Anthropologists) கவனத்துக்குரிய நூல்களில் 'தலைமுறைகள்' குறிப்பிடத்தக்க இடம்பெறும். ஒரு சிறுகதை வித்து, இங்கே ஒரு பெரிய ஆலமரமாய் விழுது விட்டுப் படர்ந்து நிற்கிறது. கம்பீரமாய் காலங்காலமாய் விளங்கும் வகையில் 'கலாபூர்வமாய்'ப் படைக்கப் பட்டிருக்கிறது. எனவே 'தலைமுறைகள்' தமிழ் நாவல் வரலாற்றில் முதன்மையான இடம்பெறும்.

இந்த நாவலில் நீல. பத்மநாபன் தன் முகத்தை நீட்டிக் காட்டி எந்த இடத்திலும் முழக்கம் செய்யவில்லை. எந்த பாத்திரத்தையும் 'சர்க்கஸ் மாஸ்டரைப் போல்' வேலை

வாங்கவில்லை. அவர்களைச் சுதந்திரமாகப் பேச வைத்திருக்கிறார்; உலவவிட்டிருக்கிறார்.

கதை சொல்லுகிற உண்ணாமலை ஆச்சியை அவள் போக்கில் விட்டுக் கதை சொல்ல வைத்திருக்கும் பாணி அலாதியானது. திரவிக்கு இரண்டுங்கெட்டான் பருவம் (Adoecent Age) என்று சொல்வார்களே அந்தப் பருவம். எல்லாப் பையன்களுக்கும் அந்த வயதில் 'ஏ' கதை கேட்கும் ஆர்வம் இருக்கும். அதைப்போல திரவிக்கும் கூளாங்காணிப்பாட்டா அம்முக்குட்டியிடம் காதலைக் கொண்ட கதையைக் கேட்க ஆர்வம்.

''எள்வெடுத்தவளுக்குத்தான் என்ன லச்சணம். தேவதாசி தோத்துப்போவா, அப்படி ஒரு மொக செளந்தரியம்... செக்கச் செவேண்ணு பளபளண்ணு ஒரு நெறம்... அம்மம்மா... தலைமுடிக்க நீளத்தைக் கேக்காண்டாம்... அண்ணைக்கு நிண்ண நிப்பை நெனச்சா எனக்கு இப்பம் கூட மேலெல்லாம் புல்லரிக்கு... சாமிக்கு முன்னே வந்து நிண்ணுட்டாண்ணா, சாமியைப் பார்த்துக் கும்பிடவா, இவளைப் பார்த்துக் கும்பிடவாவெண்ணு மனசுலே ஒரு பக்திப் பரவசமில்லா வந்துரு...'' என்று ஆச்சி அம்முக் குட்டியின் அழகை எவ்வளவு இயல்பாகவும் நேர்த்தி யாகவும், தீட்டிக் காட்டுகிறாள். ஆச்சி பெரிய மனுஷி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவள் வருணனையில் எள்ளளவும் பெரிய மனுஷித்தனம் இல்லை.

பெரும்பாலும் திரவியின் நினைவலைகளில் ஆடி அசைந்து கரைசேரும் ஓடமாய் இந்த நாவல் காட்சியளிக்கிறது. 'Flash Back' என்னும் உத்தி நவீன இலக்கியங்களில் பலரும் பயன்படுத்துவதுதான். நீல.பத்மநாபன் இதையும் கூடத் தனித்தன்மையோடு கையாளுவதில் வல்லவர்.

மற்றவர்கள் ஏதாவது ஒரு அத்தியாயத்தில் கடந்தகால நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் மொத்தமாகச் சொல்லி விட்டு நிகழ்காலத்திற்கு வருவார்கள். நீல.பத்மநாபனோ இவர்களிலிருந்து வித்தியாசப்படுகிறார். ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஓரடி முன்னோக்கிச் செல்லும் கதையை ஒன்பதடி பின்னோக்கிச் செல்லவும் வைக்கிறார். கரைக்கு வரும் அலைகள் நடுக்கடலுக்குத் திரும்புவதுபோல் ஒரு கலையழகோடு இந்த உத்தியைப் பயன்படுத்தியிருக் கிறார்.

இவையெல்லாம் சேர்ந்துதான் தலைமுறைகளைஒரு அசாதாரணமான நாவலாக ஆக்கியிருக்கின்றன. நனவோடை உத்தி, வட்டார வழக்கு நடை, வருணனை போன்றவற்றை மட்டும் வியந்து ஆசிரியரின் ஆழ்ந்த நோக்கங்களைக் காணத் தவறுவது ஒரு உன்னதமான கலைஞனின் அக தரிசனத்தைக் காணத் தவறுவது ஆகும். பேராசிரியர் நா.வானமாமலை சொல்வதுபோல் வடையை உண்ணா மலை துளையை எண்ணுவதாகும்.

மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற இந்தச் சமூகத்தை மாற்றி அமைக்கும் மகத்தானப் பணியில் ஒவ்வொரு படைப்புக் கலைஞனுக்கும் பங்கு உண்டு. நீல.பத்மநாபன் இந்தப் பணியை ஓசைப்படாமல் செய்து முடித்திருக்கிறார்.

உண்ணாமலை ஆச்சி போன்ற பழைய தலைமுறை 'செட்டிப் பயகுடி கெட்டுப்போச்சு' என்று அங்கலாய்த்துக் கொண்டாலும் திரவி போன்ற புதிய தலைமுறையைச் சார்ந்த இளைஞனால் ஒரு சமூகத்தை உயர்த்த முடியும் என்ற உத்தரவாதம் கிடைக்கிறது. 'குலப்பெருமை, குலத் தூய்மை, என்று பெரியோர்கள் பேசிக்கொண்டிருந்

தாலும், மனிதன் என்பவன் ஒரு சமூக விலங்காக இருக்கின்ற காரணத்தால் சமூகத்தின் அலைக்கழிப்புகளிலிருந்து தப்ப முடியாது என்று உணருகிறான் திரவி. நொந்து போயிருக்கும் தந்தையின் சுமைகளை - பொறுப்புக்களை அவர் கூறாமலே ஏற்கிறான்; தந்தையால் முடியாததைத் தான் செய்யத்துடிக்கிறான். தமக்கைக்கு மறுமணம் செய்து வைக்க முயலுகிறான். தன் குடும்பத்தாரையும் இணங்க வைக்கிறான்.

திரவியின் நோக்கத்துக்குக் குற்றாலமும் துணை நிற்கிறான். திரவியின் தமக்கையைத் திருமணம் செய்தால் இந்தச் சமூகம் தன்னைத் தள்ளிவைத்துவிடுமே என்று அவன் அஞ்சவில்லை. சிவநாதப் பெருமாளைத் தள்ளி வைக்காத இந்தச் சமூகம், தன்னைத் தள்ளி வைப்பதைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை.

உண்மையில் திரவியும் குற்றாலமும் மாறுதல் விரும்பும் புதிய சமூகத்தின் பிரதிநிதிகளாகவே படைக்கப் பட்டிருக்கிறார்கள். இந்தச் சமூகம் தானாய் மாறாது; திரவி போன்ற, குற்றாலத்தைப் போன்ற கர்ம வீரர்களால், தியாக வீரர்களால்தான் மாற்றம் பெறும் என்ற தொனி நாவலின் இறுதியில் அடக்கமாகக் கேட்கிறது.

ஷியாம் பெனகலின் திரைநாவலான 'அங்குர்' சமூக மாறுதலைக் குறிப்பாக உணர்த்துவதை நீல.பத்மநாப னின் தலைமுறைகளின் கடைசிக் காட்சியோடு ஒப்பிடத் தோன்றுகிறது. புதிய தலைமுறையின் இளங் குருத்தான 'அங்குர்' சிறுவனின் நியாயமான கோபம் திரவியிடத்திலும் குடிகொண்டிருக்கிறது. அதனால் அவன் கொண்ட கொள்கையில் வெற்றி பெறுவான் என்ற நம்பிக்கையில் நாவல் முடிகிறது.

இப்படிச் சொல்லும்போது திரவிக்கே தனது வெற்றியில் நம்பிக்கையில்லாமல்தானே கீழைத் தெருவை விட்டு வெளியேறுகிறான் என்று கேட்கக்கூடும். உண்மையில் அவன் வெளியேற்றம் நிரந்தரமானதல்ல. தன் தேசம் சுதந்திரம் அடையவேண்டும் என்பதற்காக அந்நிய தேசத்தில் அஞ்ஞாதவாசம் செய்து - ஆயத்தம் செய்து திரும்பும் ஒரு புரட்சி இயக்கத் தலைவனைப்போல் அவன் எந்த நேரத்திலும் திரும்பலாம். தன் சமூகத்தில் புதிய ஞானத்தையும், சீலத்தையும் உருவாக்கலாம்.

இந்த நம்பிக்கையில், நெஞ்சம் நிமிர்ந்து நிற்க வைக்கும் தலைமுறைகள் ஒரு அசாதாரணமான நாவல்தான். பிரமிப்பை ஏற்படுத்துவதால் பேராசிரியர் ஜேசுதாசனுக்கு அது ஒரு அசலான நாவல். 'பிரமிப்பை' ஏற்படுத்துவதால் எனக்கோ அது இந்த நூற்றாண்டின் இதிகாசம்.

❐

*1968*

சிறுகதைகள்

✡

# அடுத்த வீடு

✡

இளம்பாரதி

*"இந்த ஹைதராபாத்தில் மட்டுமில்லை - பாரத நாட்டிலுள்ள எல்லா நகரங்களிலும் பட்டணங்களிலும் இவ்வாறு வயது மீறிய திருமணமாகாதவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருக்கிறது... ஒரு காலத்தில் பால்ய விதவைகள் இருந்ததைப் போல் இந்நாட்களில் வயது மீறிய, திருமணமாகாக் கன்னிகள் சமூகத்தின் இதயத்தைப் பாதிக்கும் பிரச்சனையாக அமைந்துவிட்டார்கள்."*

*அண்மையில் இந்திய ஒருமைப்பாட்டை உணர்த்தும் நூல் என்பதற்காகப் பரிசு பெற்றிருக்கும் "அடுத்த வீடு"*

என்னும் சிறுகதைத் தொகுப்பின் முதற் கதையிலே இடம்பெறும் இவ்வரிகள், இமயம் முதல் குமரி வரை உள்ள ஒரு தீராத பிரச்னையை நம் கண் முன்னர் விசுவரூபமாக்கிக் காட்டுகின்றன. 'குரோட்டன் செடிகள்' என்னும் இம்முதற் கதையின் நாயகி ஜோதி எம்.ஏ. பி.எச்.டி; பருவத்தில் பயிர் செய்யும் வாய்ப்பிழந்தவள். அவள் தங்கை விஜயாவோ துணிச்சல்காரி. தனக்குப் பிடித்தவனோடு பதிவுத் திருமணம் செய்துகொண்டு வாழப் போய்விடுகிறாள். ஜோதியால் அப்படிப் போக முடியுமா? மாதா மாதம் அவள் வாங்கி வரும் சம்பளத்தை நம்பியிருக்கும் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரான அவள் தந்தையும் தாயும் மற்றுமுள்ள சகோதர சகோதரிகளும் அவளைப் போக விடுவார்களா? அவள் கொடுக்கிற தெய்வமல்லவா? அதனால்தான் ஒவ்வொருவரும் போட்டி போட்டு அவளைக் கொண்டாடுகிறார்கள்; அவளுக்குப் பணிவிடை செய்கிறார்கள். பாசங்காட்ட வேண்டிய தாய்கூட எவ்வளவு மரியாதை காட்டுகிறாள்!

''தற்போதைக்கு எங்கள் குடும்பத்தை நான்தான் பாதுகாக்கிறேன். அதனால்தான் வீட்டில் எல்லோரும் என்னை தேவதையாகக் கவனித்துக் கொள்கிறார்கள்'' என்கிறாள் ஜோதி. உண்மைதான். யாரும் அவளைப் பெண்ணாகக் கருதவில்லை; உணர்ச்சியற்ற கல்லாகக் கருதுகிறார்கள் என்பதை ஆசிரியர் சொல்லாமல் சொல்கிறார்.

''பூ மலர்ந்த செடிகளுக்கிடையில் அந்தக் குரோட்டன் செடிகள் ஏன் வெறித்துக் கிடக்கின்றன என்று எனக்குப் புரிந்தது. செடிக்கு எப்படிப் பூக்கள், காய்கள் அழகைத் தருகின்றனவோ அப்படித்தான் பெண்களுக்குத் திருமணம், தாய்மை ஆகியவை அழகையும் நிறைவையும் தருகின்றன... அந்த இன்ப அனுபவங்களினின்றும்

ஒதுக்கப்பட்ட நாங்களெல்லாம் குரோட்டன் செடிகளுக்கு ஒப்பானவர்களே.''

என்று தன் வாழ்வில் வராத வசந்தத்தை எண்ணிப் பெருமூச்சு விடுகிறாள் பல்கலைக்கழக ரீடர் ஜோதி. வள்ளுவரும் ஜோதியைப் போன்ற 'முதிர் கன்னி' களுக்காக இரங்கித்தாரோ என்னவோ,

''அதற்றார்க் கொன்றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றான் தமியள்குத் தற்று''

என்று அன்றே அவர்களை உவமையாக்கிக் காட்டியிருக் கிறார்!

பரிமளா சோமேஸ்வரின் 'குரோட்டன் செடிகள்' சம்பளம் வாங்கும் 'சராசரி'களின் - நடுத்தர வர்க்கத்தினரின் அவல வாழ்வை மிகையின்றிக் காட்டுகிறது. நடுத்தர வர்க்கத்தி னரைக் குட்டி பூர்ஷ்வாக்கள் என்று குறிப்பிடுவதுண்டு. இவர்கள் எவ்வளவுதான் கீழே கீழேப் போய்க் கொண்டி ருந்தாலும் முதலாளித்துவக் கனவுகளில் மூழ்கி மிதந்து மேலே பறக்கச் சிறகு தேடித் திரிபவர்கள்; ஆசைகளை அடைய முடியாது அந்த ஆசைகளிலேயே ஆயுளை முடிப்பவர்கள். இவர்களை மையமாக வைத்து எழுதப் பட்ட பல கதைகளை இத்தொகுப்பில் பார்க்க முடிகிறது. எனினும் 'குரோட்டன் செடி'களைப்போல் நடுத்தர வர்க்கத்தின் ஆற்றாமையைச் சித்தரிக்கும் இன்னொரு அற்புதமான கதையை இந்தத் தொகுப்பில் மட்டுமல்ல, வேறு எந்தத் தொகுப்பிலும் பார்க்க முடியாது என்று தோன்றுகிறது.

எந்த மறுவாழ்வும் இல்லாத இரண்டு இரயில் பிச்சைக்காரர் களைப் பற்றிய கதைதான் 'சுழிப்பு'. அவர்கள் இருவரும் அவனும் அவளும் தாம். பருவம் ஊனமாகாத அவளுக்குக்

கால் மட்டும் ஊனம். அந்த ஊனக்காலை வைத்துக் கொண்டு ஒவ்வொரு பெட்டியாகத் தாவி ஏறுகிறாள். தத்தித் தத்தி வரும் அவளை அவன் பார்வையில் காட்டுகிறார் ஆசிரியர்:

> ''சேற்றுப் புறத்திலிருந்து வந்து கொழுத்த
> தவளையைப் போலிருந்தாள் அவள்!''

எவ்வளவு பொருத்தமான கற்பனை. ஆசை அந்தஸ்தையா பார்க்கிறது? அவன் சில நிமிடம் சபலம் கொண்டான். பாவம்... கடைசியில் அவளுக்குக் கிட்டியது களிப்பு அல்ல; வெறும் 'சுழிப்பு'.

'துறவும்' 'என்ன உறவும்' நமக்கு ஒரே கருத்தையே உணர்த்துகின்றன. பிசிராந்தையும் சோழனும் போலச் சந்தித்தேயிராத இரண்டு இதயங்களும் எப்போதோ ஓரிரு முறை மட்டுமே சந்தித்த இரண்டு உயிர்களும் சந்திக்கிற அல்லது சம்பந்தப்படுகிற இறுதிக் காட்சிகள் நம் கண்களில் நீரை வரவழைக்கும் வண்ணம் அமைந்துள்ளன.

கல்லுக்குள் ஈரமும் கருமியின் நெஞ்சத்தில் இரக்கமும் இருக்கக்கூடும் என்ற கருத்தமைந்த 'கருமியின் நெஞ்சம்' எதார்த்தமாக இல்லை. சுருக்கமாகச் சொன்னால் பானுமதி ராமகிருஷ்ணாவின் இந்தக் கதை ஒரு நட்சத்திரக் கதை.

'பூச்சரம்' - ஒரு வழக்கமான காதற் கதைதான். எனினும் அவ்வளவு எளிதாக முகஞ் சுளித்து அதனை ஒதுக்க முடியவில்லை. சீதாவுக்காகக் கை நிறைய, மனம் நிறைய பூப் பறித்துக் கொடுத்த சங்கரன், அவளுக்குப் பூமாலை சூட்ட முடியாமல் மஜ்னுவாகிறான். அந்தத் தெப்பக் குளக்கரையில், அந்த மகிழ மரத்தடியில் இன்னும் மாலை தொடுத்துக் கொண்டிருக்கிறான் - சீதா வருவாள் என்ற நம்பிக்கையில், ஆசையில்!

"என் சீதா, என் தெப்பக்குளம் என் மரம்
இதெல்லாம் போனால் வராது"

என்று அவன் கூச்சலிடும்போது நம் மனம் மௌனமாய் அழுகிறது.

வயது மீறிய பருவத்தில் - பேரனைப் பார்த்த பிறகுங்கூடக் கருவுற்ற தன் தாயை நினைத்துக் கூசும் ஒரு மகனின் மனக் கலக்கம் ஏதோ பெரிய தவறு நடந்துவிட்டதைப்போல நாணி ஒடுங்கும் ஒரு தாயின் தவிப்பு - இவற்றை வைத்து எழுதப்பட்டதே 'அன்னை அல்லவா?' என்னதான் உயிர் ஒன்றிய தம்பதிகளாயிருந்தாலும் அவர்களது தாம்பத்திய வாழ்க்கைக்கு - புலன் உணர்வில் கரையும் போக வாழ்க்கைக்கு ஒரு எல்லை உண்டு என்று பாவிப்பதும், அதை மீறுவோர் மேல் அர்த்தமில்லாமல் ஒரு அசூயை கொள்வதும் இந்தியக் குடும்பங்களுக்கேயுரிய இயல்புகள். இவ்வியல்புகள் இக்கதையில் நுட்பமாய் வெளிப்பட்டுள்ளன. முப்பாள ரங்கநாயகம்மாவின் இக்கதைப் போக்கும் முடிவும் 'தாய்மை ஒரு குற்றமல்ல' என்று உணர்த்தும் ஜெயகாந்தனின் 'கிழக்கும் மேற்கும்' கதையை நினைவுபடுத்துகின்றன.

ஆடவரின் கண்ணிலும் கருத்திலும் பட்டு இந்நாட்டுப் பெண் இனம் எப்படி எல்லாம் கரிந்துபோக நேர்கிறது என்பதை 'இடைவேளை', 'இருட்டு', 'வாழ்ந்தது போதும்' போன்ற கதைகள் காட்டுகின்றன.

கணவன் தன்னை ஒதுக்கி இன்னொருத்தியைக் கைப் பிடித்து மத்தாப்புக் கொளுத்தும் போது தானும் மற்றொருவனைத் தேடிக் கொண்டால் என்ன என்று சிந்தித்துப் பார்க்கவும் முடியாமல் அந்தகாரத்தில் அழுந்தும் ஆயிரக் கணக்கான பேதைகளின் பிரதிநிதியாக சீதாவைச் சந்திக்கிறோம் - 'இருட்டில்.'

பெண்ணைப் பூ, மலர் என்று சொல்லிவிட்டால் போதுமா? அந்தப் பூப்போல வேகமாக வாடி வதங்கினால்தானே பெண்ணுக்குப் பெருமை? ஒரு பெண் பூ பூப்படைந்த இரண்டே நாட்களுக்குள்ளேயே தன் அக்காள் கணவனின் கையால் கசக்கி எறியப்பட்டுக் கருகும் கதைதான் 'வாழ்ந்தது போதும்'.

பெரும்பாலும் பெண்களால் எழுதப்பட்ட இக்கதைகளில் வரக்கூடிய பெண்கள், சமூகத்தை எதிர்க்கத் தைரியமில்லா தவர்களாகத் தோன்றினாலும் இக்கதைகளைப் படிப்பவர் களின் நெஞ்சத்தில் ஓர் ஆவேசத்தையும் எதிர்க்க வேண்டு மென்ற ஓர் உக்கிரத்தையும் உண்டாக்கிவிடுகின்றனர்.

இதே தொகுதியில் 'மனச்சுளுக்கு' என்னும் கதையில் ஒரு கடைக்காரன் மறைவில் வைத்திருந்த சில மஞ்சள் புத்தகங்களை எடுத்து ''லேட்டஸ்ட் அமெரிக்கன் புக்ஸ் ஸார்'' என்று காட்டுகிறான். எங்கோ இருந்து ஆண்-பெண் உறவைக் கேவலப்படுத்தி டாலராக்கும் அமெரிக்க மஞ்சள் புத்தகங்களில் மனம் பறிகொடுக்கும் பச்சைத் தமிழ் இளைஞர்கள், நமக்கு மிகச் சமீபத்திலிருந்து நல்ல நல்ல இலக்கியங்களைத் தரும் கேரளத்தையும் ஆந்திரத்தையும் கொஞ்சம் கவனித்தால் என்ன?

முன்பொரு முறை தென்மொழி புத்தக டிரஸ்ட் ஆதரவில் வெளிவந்த தென்மொழிச் சிறுகதைத் தொகுதியில் சில தெலுங்குக் கதைகளும் இருந்தன. அவற்றைக் காட்டிலும் 'அடுத்த வீடு' தொகுதியில் உள்ள கதைகள் தரத்திலும் தமிழாக்கத்திலும் சிறந்து விளங்குகின்றன. நூலின் முதல் மூன்று நான்கு பக்கங்களைக் கடந்துவிட்டதும் மொழி பெயர்ப்பு என்பதே தெரியாத அளவுக்கு அவ்வளவு இயற்கையாக மொழிநடை அமைந்துள்ளது.

பிறமொழிப் படைப்பாளிகளில் சரத் சந்திரரும் தாகூரும் காண்டேகரும் அறிமுகம் ஆன அளவுக்கு அண்டை மொழி களான தெலுங்கு, கன்னட, மலையாளப் படைப்பாளிகள் நமக்கு அறிமுகம் ஆகவில்லை. அவர்களைச் சரிவர அறிமுகப்படுத்தும் முயற்சி இப்போதுதான் தொடங்கி யுள்ளது. தெலுங்கு மொழியின் சிறந்த படைப்புகளை அறிமுகப்படுத்திய இளம்பாரதியின் பணி பாராட்டுக் குரியது. 'அடுத்த வீடு' என்று அவர் இந்நூலுக்குப் பெயரிட் டிருப்பதும் அதற்கேற்ப 'அடுத்த வீட்டு விவகாரங்களைச் சுவைபடச் சொல்லும்' தன் மனைவிக்கு இந்நூலைக் காணிக்கையாக்கியிருப்பதும் மும்மடங்கு பாராட்டுக் குரியது.

எனக்கு தெலுங்கோ மலையாளமோ தெரியாது. ஆனால் இரண்டும் தெரிந்த இளம்பாரதியை நன்றாகத் தெரியும். நண்பர் இளம்பாரதியிடம் கேட்கின்றேன்: ''மலையாளக் கதைகளை எப்போது தரப்போகிறீர்கள்?''

□

*பிப்ரவரி, 1974*

கவிதை

✡

# காலநதியிலே கனவுப் படகு

✡

இ. முத்துராமலிங்கம்

பழைய இலக்கண நூல்கள் வகுத்துள்ள தடத்திலிருந்து இன்றைய தமிழ்க்கவிதை வேகமாக விலகிச் செல்ல ஆரம்பித்துவிட்டது. பல மொழி இலக்கியப் பாதிப்பும் ஆங்கில இலக்கியப் பயிற்சியும் இதற்கு அடிப்படைக் காரணங்கள் எனலாம். காலப்போக்கில் பழமை புறக்கணிக்கப்படுவதும், புதுமை அவ்விடத்தைக் கைப்பற்றிக் கொள்வதும், அப்புதுமையே பழமையாவதும் அலைமீது அலையைப் போல் அடுத்தடுத்து வருவதும் எல்லாவற்றிற்கும்

மேலான காரணமாகச் சொல்லலாம். தமிழிலக்கிய இலக்கணங்களைக் கருத்தொன்றிப் பயின்றவர்கள் இம் மாற்றங்களை அறியாதிருக்க மாட்டார்கள். ஆசிரியத்தில் தொடங்கிய தமிழ்க்கவிதை வெண்பா, கலி, வஞ்சி என்னும் பா வகைகளோடு மட்டும் நின்றுவிட வில்லையே. துறை, தாழிசை, விருத்தம் என்னும் பாவின வகைகளாக அது விரியவில்லையா? இவற்றில் எல்லாம் பாடிப் பாடிச்சலிப்புற்ற பிறகு அண்ணாமலை ரெட்டியார், திரிகூட ராசப்பக் கவிராயர், பாரதி, பாரதிதாசன் போன்ற வர்கள் தங்கள் கவித்துவத்துக்கும் கைவந்த ஆற்றலுக்கும் ஏற்பப் புதிய கவிதை வடிவங்களைப் படைத்துத் தமிழை வளப்படுத்தவில்லையா? இவையெல்லாம் தமிழிலக்கி யத்தில் இடம்பிடித்துக் கொள்ளவில்லையா?

இவற்றைப் போலவே கவிதைக் கடலின் புதிய அலைகளாகப் பிறந்து ஏனையவற்றைப் பின்னுக்குத் தள்ளி முன்னோடி வருகின்றன இரண்டு அலைகள். ஒன்று வசன கவிதை (Prose poem). இன்னொன்று கட்டற்ற கவிதை (Free verse).

இவ்விருவகைப் பிரிவுக்குள்ளும் அடங்கும் கவிதைகளை உள்ளடக்கமாகக் கொண்டு தமிழில் புதுக்கவிதைத் தொகுதிகள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. அவ் வரிசையில் புதிதாக இடம்பெறும் நூல் இது.

தொல்காப்பியரும், அமிதசாகரரும் சொன்ன விதிப்படி எழுதுவதெல்லாம் எப்படிக் கவிதையாகி விடாதோ அதே மாதிரி மரபை மீறி எழுதுவதும் கவிதையாகிவிடாது. மரபை மீறினாலும் மீறாவிட்டாலும் கவிதைக்குரிய இலக்கணங்களை மீறாதிருக்க வேண்டும், அவ்வளவே. உயிர்த் துடிப்பும் உள்ளார்ந்த உணர்ச்சியுமுள்ள ஒரு பிறவிக் கவிஞன் மரபு மீறி வசனமாக எழுதினாலும் அல்லது மரபுக் குட்பட்டு அறுசீர் விருத்தம் எழுதினாலும் அதைப் படிக்க முடிகிறதே! என்ன காரணம்?

சின்னான் வீட்டு மண் சட்டியில் இருந்தாலும், வினை திறமும் வேலைப்பாடும் பொருந்திய சீமான் வீட்டு கூஜாவில் இருந்தாலும் தண்ணீர் தண்ணீரே. அதுபோல் மரபுக்குள் இருந்தாலும் மரபு மீறி நின்றாலும் கவிதை கவிதையே. இன்றைய புதுக்கவிதைகளோடு தம்மைப் பிணைத்துக் கொண்டவர்கள் என்பதற்காகப் பழைய நல்ல மரபுக்கவிதைகள் மீது விசுவாமித்திரப் பார்வையும் வேண்டியதில்லை. பழைய கவிதைகளிலேயே தேய்ந்து போன பண்டிதர்கள் என்பதற்காக மரபு மீறிப் பிறக்கும் உண்மைக் கவிதைகளிடத்து நக்கீரப் பார்வையும் தேவை யில்லை. இவ்விரு கட்சியிலும் சாராத நடுநிலையாளர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

அப்படிப்பட்ட வாசகர்களில் ஒருவனாக இருந்து தோழர் முத்துராமலிங்கத்தின் கவிதைகளைப் படித்து முடித்த எனக்கு ஏமாற்றமில்லை. தனிமனித வழிபாட்டுக்கும், அற்பசொற்ப விவகாரங்களுக்கும், தன் கவிதைத் தொகுதியின் பாதிக்கு மேற்பட்ட பக்கங்களை வீணடித்து விடாமல் இன்றைய சமுதாய, பொருளாதார, அரசியல் நிலைகளைப் பாடும் கவிஞராய் இவர் காட்சியளிக்கிறார்.

''பழமைப் பெருமை தன்னைப்
பாட்டாகப் பாடாமல்
நிலைமைதனை நிர்ணயிக்கும்
நிகழ்காலச் சுவடுகள் நாம்!''

என்னும் வரிகள் என் கருத்தை உறுதிப்படுத்தும்.

சில பொருட்களின் புற அழகே நம்மைப் புல்லரிக்கச் செய்வதுபோல் கவிதைச் சுவையை நுகர்வதற்கு முன் தலைப்புகளே நம் கவனத்தைச் சில வினாடிகள் இழுத்து நிறுத்துகின்றன. ''நாம்... நாம்... வியட்நாம்!'', ''மனிதனை நேசிப்போம் நாம்!'', ''வானம் பார்த்த வரப்புகள்'' ஆகியவற்றை உதாரணமாய்ச் சொல்லலாம்.

அன்றாட அரசியல் நோக்கும் உலகளாவிய பார்வையு மிருந்ததால் பாரதியால் ரஷ்யப்புரட்சியை வரவேற்றுப் பாட முடிந்தது. பாரதிதாசனால் காப்பிடலிசம், கம்யூனி சம், சோசலிசம், நாசிசம், பாசிசம் ஆகியவற்றுக்கு ஆசிரியப் பாவில் விளக்கம் தரமுடிந்தது. இன்றைய இளங்கவிஞர் களோ அவர்கள் காலத்தைவிட நாளுக்கு நாள் அறிவியல் பூர்வமாக முன்னேறிக் கொண்டிருக்கும் உலகத்தில் வாழ்வதால் விசாலப் பார்வையால் உலகை விழுங்க முடிகிறது.

இவர்கள் பார்வையிலிருந்து எந்தப் பொருளும் தப்ப முடிவதில்லை. துவாபர யுகத்துக் கண்ணனும், 'தோரகா' திரைப்படமும் கவிதையில் இடம்பெறக் காரணம் இது தான். எந்தப் புராணக் கருத்துக்களும் கவிதைகளும் சமுதாயக் கேடுகளாகக் கருதப்பட்டு வந்தனவோ அந்தப் புராணத் துணுக்கு ஒன்று எவ்வளவு அழகு பொருந்திய கவிதையாகிறது பாருங்கள். ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டுவரப் பகீரதன் முயன்றான். இது புராணக் குறிப்பு இதைக் கவிஞர் சோசலிசத்தோடு இணைத்துச் சொல்லும் வகையே தனி.

> சோசலிசம்.......
> ''பாதாளத்திலிருப்போர் பருகுவதற்காய்
> ஆகாச கங்கையை அழைத்துவர நடக்கும்
> பல்லாண்டு காலப் பகீரதப் பிரயத்தனம்!''

அத்தோடு விட்டாரா? புராண காலத்திலிருந்து நவீன காலத்திற்கு வருகிறார்.

''படிக்காதவன் கையிலும் பத்திரிக்கை இருப்பதுபோல் பிடிக்காதவன் நாக்கும் பேசுதய்யா சோசலிசம்'' என்கிறார்.

இன்னொரு கவிதையில் ஆடையின்றித் தவிக்கும் பிச்சைக் காரி ஒருத்தியின் சோகத்தைச் சித்திரிக்கிறார். அவள்

அவலத்தைப் போக்காமல் 'மடி நிறைய காசுடையோர் தூர நின்று ரசிக்கிறார்களாம். ஏன் ரசிக்க மாட்டார்கள்? "அரை நிர்வாணம் சொர்க்கமென்போர் முழு நிர்வாணம் காண்கையிலே முகத்தையா மூடிடுவார்" என்று கவிஞர் கருணையற்ற பிறவிகள் மீது நெருப்புக்கணை தொடுக்கிறார். இக்கவிதைக்கு அவர் கொடுத்துள்ள தலைப்பு 'பாரி முனை நிற்கையிலே!' எத்தனை அருமையான ஏளனம்!-

இறுதியாக ஒன்று. யாப்பிலக்கண மரபை உடைப்பதையும், கம்யூனிசத்தைப் பற்றிப் பாடுவதையும், சர்வதேசிய மனப்பான்மை உடையவராய்த் தம்மைக் காட்டிக்கொள்வதையும் ஒரு 'பாவனை'யாக்கிக் கொண்ட இன்றைய இளம்-புதுக் கவிஞர்களுக்கிடையே, இவர் உண்மையான மனிதாபிமானமும், உடைமை பொதுவாக்கும் உயர்ந்த நோக்கமும், எங்கெல்லாம் நிலப் பிரபுத்துவ, ஏகாதிபத்திய, ஏகபோக உரிமைகள் தலை தூக்குகின்றனவோ அங்கெல்லாம் கவிதைக்குரல் எழுப்பி அவற்றின் தலைமீது அடிக்கும் தைரியமும் உடையவராய் இருப்பார் என்று நம்புகிறேன். அதற்கு இந்நூலில் போதிய அறிகுறிகள் தென்படுகின்றன.

கவிஞர் காமராசனைத் துரோணராகக் கொண்டு எழுதுகோல் ஏந்திய புதுக்கவிதை ஏகலைவர் பலர், அவரது வெற்றியைத் தவறாகப் புரிந்துகொண்டோ என்னவோ வடசொற்களை வாரி வழங்குவதில் நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போடுகிறார்கள்.

இதில் முத்துராமலிங்கமும் முன்னுக்கு நிற்க வேண்டுமா?

❒

*1972*

நெடுங் கவிதை

✡

# மௌன மயக்கங்கள்

✡

சிற்பி

*அன்று*

*சட்டமன்றத்தில் தேவதாசித் தடைச்சட்டம் வந்தபோது ஓநாய்கள் அழுதன. ஆடுகள் நனையப் போகின்றனவே என்று!*

*ஆண் சாதியின் ஆசை அளவுக்கு அதிகமாகும்போது அதற்கொரு வடிகால் வேண்டாமா? அந்த அளவுக்கு அதிகமான ஆசையை எதிர்கொள்ளவென்று ஒரு பகுதிப் பெண்கள் இல்லையென்றால் சமூகம் என்ன ஆவது? அது குடும்பப் பெண்கள் மீதல்லவா பாயும்? மொத்தச் சமூகம்*

பாழாவதற்குப் பதில் ஒரு பகுதி பாழகலாமே. அதனால் பாதகம் ஒன்றும் இல்லையே!' - இப்படிப் புலம்பின சில.

'உலகத்தின் பழமையான தொழிலே (Oldest Profession of the world) அது தானே' என்று பிலாக்கணம் பாடின இன்னும் சில.

பழம்பெருமை உடைய தமிழகத்தில் இந்தப் 'பழந் தொழில்' மட்டும் இல்லாமல் இருந்திருக்க முடியுமா என்ன? இருந்தது. உடல் விலை வணிகப் பெண்கள் எங்கணும் நீக்கமறப் பரவி இருந்தனர்.... அப்படிப் பரவி இருந்ததால்தானோ என்னவோ 'பரத்தையர்' ஆயினர்.

நிலப் பிரபுத்துவத்தின் முகத்தில் படர்ந்த பரத்தைமைத் தொழுநோய் இந்தப் 'பாருக்குள்ளே நல்ல நாட்டில்' மட்டுமல்ல, பூமண்டலத்தின் எல்லாப் பகுதிகளிலுமே தொற்றிக் கொண்டிருக்கிறது.

பெரும்பகுதிப் பெண்களின் கற்பை 'இன்சூர்' செய்வதற் காக ஒரு சிறுபகுதிப் பெண்கள் தங்கள் உடலை விற்றுப் 'பிரிமியம்' செலுத்தும் கொடுமை தொடர்ந்து கொண்டிருக் கிறது.

காலங்காலமாய் ஒட்டியிருக்கும் இந்தக் களங்கத்தைத் துடைக்க - கறையைப் போக்க அவ்வப்போது சிலர் அவதரிக்கிறார்கள்.

மேரி மக்தலேனாவை மன்னித்து அருள் பாலிக்க ஒரு ஏசு வந்தார்.

'மதவெறியரின் வெறிச் செயல்களுக்குப் பலியான மங்கையரை ஏற்றுக் கொள்ளுங்கள் என்னருமை இளைஞர் களே!' என்று துணிந்து சொல்ல ஒரு மகாத்மா வந்தார். இங்கே ஒரு மகாத்மாவை -

'அழுக்கின் ஒரு துளி தூசும்
படியாத
ஓர் ஆத்மா'வைக்

கரை சேர்க்கும் ஒரு மகாத்மாவைச் சாமானிய மனிதர் களிடையே அவதரிக்க வைக்கிறார் என் மரியாதைக்குரிய கவிஞர் சிற்பி.

சிற்பியின் 'நெஞ்சின் சுமை', இறக்கி வைக்கப்பட்டுள்ள இந்த 'மௌன மயக்கங்களின்' 'அவன்' 'முதல் தேதிப் பரபரப்பில் பை கனத்த கனவான்'

அவள் 'ஜீவனையே சிலிர்க்க வைக்கிற ஆச்சரியம்' 'பருவம் சிங்காரித்த பதுமையாய்' இருந்த அவளைத் 'தெருவில் விற்கும் பலகாரக் கூடையை ஈ மொய்ப்பதுபோல்' கண்கள் மொய்க்கின்றன.

காலம் அவளை இரவுச் சந்தைக்கு இழுத்து வருகிறது. அங்கே அவளைப் பெண் பார்க்க வருகிறான் அவன். கண்டதும் அவனுள் 'எலக்ட்ரிக் கிதாரின் இன்ப அதிர்ச்சிகள். இளமைத் திமிரில் வாடகை பேசி ஒரு 'புது பார்ட்டி'யாக வருகிற அவனும் கற்புக்குக் கடை திறந்து காத்திருக்கும் அவளும் முதலில் சந்திக்கும் இடப் மோகத்தின் அடிவாரம்....

'மோக... மோகம்... மோகம்'

இருவரும் சென்றடைவதோ -சேர்ந்து தொடுவதோ தெய்விகக் காதலின் சிகரம்.

மோகம் தானே காதல் மாளிகையைத் திறக்க உதவும் திறவுகோல்!

மோகத்திலிருந்து
நம்மைக்
காதலுக்கு அழைத்தது
எந்த நாள்?
எந்தப் புனிதப் பொழுது?

*என்று அவன் கேட்கும்போது நாம் உணர்ச்சி வசப்படு கிறோம்.*

*முதலில் அவர்கள் சேர்க்கை*

'நெகிழ்ந்த சேறும்
முரட்டு விதையும்
ஒன்றில் ஒன்று
உறவு கண்டது போல்'

*அருவருப்பாகத் தோன்றுகிறது. பிறகு அதில் ஆயிரங் காலத்துப் பயிர் - தேவமணிப் பயிர் செழித்து வளர்வது தெரிகிறது.*

இருவரும் சிரிக்கிறார்கள்.
'சிரிப்பும் சிரிப்பும்
பெருக்கெடுக்கும்போது
தரையில் நழுவி விழுந்தது வானம்'

*என்கிறார் சிற்பி.*

*ஓ... வானம் கடந்த அண்டவெளியில் மேனிச் சுகம் கடந்த ஞானவெளியில் இருவரும் சிறகடித்துப் பறக்கிறார்கள்.*

*நாம் பரவசப்படுகிறோம்.*

அனடோல் பிரான்ஸின் நோபல் பரிசு பெற்ற நாவல் 'தாசியும் தபசியும்'. பாவச் சகதியில் புரண்டு கொண்டிருந்த தாசி தாயிஸைக் கரை சேர்க்க முயன்று வீழ்ந்துவிட்ட துறவி (பாப்னூடியஸ்) ஒருவரின் கதை அது. தாயிஸைத் 'திருத்தப் போகிறேன்' என்று புறப்படும் பாப்னூடியஸைப் பார்த்து இன்னொரு துறவி புத்தி சொல்கிறார்... 'தரைக்குப் போகும் மீனின் கதிதான் ஆசிரமத்தை விட்டுப் போகும் உனக்கு நேரும்' என்று தடுக்கிறார்... முடியவில்லை. விரைவில் தாயிஸ், பாப்னூடியஸை ஆட்கொண்டு விடுகிறாள்.

> **''தாயிஸ்! நான் உன் கூந்தலை அலங்கரிக்கும் மலராக இருக்கக்கூடாதா? உன்னுடைய அழகிய உடலை மூடியிருக்கும் உடையாக இருக்கக்கூடாதா? சிங்காரக் கால்களில் அணிந்திருக்கும் செருப்பாக வாவது இருக்கக்கூடாதா? என்னை உன் காலடியில் போட்டுக்கொள். எனது உடலை உடையாகப் போர்த்திக்கொள்... வா கண்ணே! என் வீட்டுக்கு வா!''**

என்று அந்த தேவதேவியிடம் விப்ரநாராயணராக வீழ்கிறார். தாசியைக் கைதூக்கிவிடப் போய் புதை சேற்றில் அங்குலம் அங்குலமாக மூழ்குகிறார். பாவம் தபசி!

சிற்பியின் 'அவன்' அந்தத் தபசியைப்போல் ஆரவாரமாகப் புறப்படவில்லை; அடி சறுக்கி விழவும் இல்லை.

'அவள்' மீது அவனுக்கு இரக்கத்தைக் காட்டிலும் 'சூரியனைப்போல் சுத்தமான' காதல் இருக்கிறது. 'ஒழுக்க வாதங்கள், அடுத்த மனிதரின் அலட்சிய ஏளனங்கள்' பற்றியெல்லாம் அவனுக்குக் கவலையில்லை. உண்மையில் அவள் அவனுக்குத் தேவை. அவன் வெளிப்படையாகப் பேசுகிறான்.

'அவளைக் காப்பாற்றுவது
என்ற லட்சியமெல்லாம்
எனக்கில்லை.
என்னையே நான்
காப்பாற்றிக் கொள்ள
அவள் வேண்டும்'

*எவ்வளவு திடமாக-தீர்மானமாகத் தன் உள்ளத்தைத் திறந்து காட்டுகிறான்.*

*'எரிகின்ற விளக்கைப் பழம் என்றும் எண்ணி விட்டில் விளக்கில் விழுமே, அது மாதிரி...' என்று யாரும் அவனிடம் பீடிகை போட்டுப் பேச முடியாது.*

'அந்த அங்க லாவண்யமே
ஒரு தீக்கொழுந்து
அதில்
சிறகுகள் கரிய
சிற்றுடல் எரிய
அதன் மயமாகும்
ஈசல் நான் -

*பேசப் பிறகு என்ன இருக்கிறது?'*

*என்று நிமிர்ந்து நிற்கிறான் - ஒரு கூரிய வாள் போல். நமக்கும் பேசப் பிறகு என்ன இருக்கிறது?*

*ஆனாலும் அவன்-*

*ஈசலாகித் தீசலாகப் பொசுங்கிப் போய்விடாமல் புடம் போட்ட பொன்னாய் - உறுதி மிக்க உருக்காய் மாறுகிறான்.*

'எமன் வீட்டு வாசலையும்
உனக்காகத் தட்டுவேன்'

என்று கூறும் அவன் அவளுக்காகத் தன் வீட்டுக் கதவைத் திறக்கிறான். அவனும் அவளும் அலையும் அலையுமாய்.. சொர்க்கம் அவர்களைச் சுற்றி வருகிறது.

நீசச் சமூகம் விடுமா?

அவள் அவனுக்காக வீரமரணம் அடைகிறாள்.

அவன் - அவள் மரித்த பிறகும் வாழ்கிறான்.

அவளுக்காக - அவளைப் போன்ற ஆயிரம் பாவப்பட்ட பெண்களுக்காக - அவர்களுக்கு விடிவுகாண... மூடச் சமூகத்தின் முடைநாற்றம் போக்கி ஒரு முடிவு காண...

மயக்கங்களில் எரிந்து கரிந்து புகைந்து போகாமல் விமோசனம் தேடும் இயக்கங்களில் சங்கமித்து நிற்கிறான்- ஒரு நெருப்புச் சுடல்போல!

மௌன மயக்கங்களின் கதை பழைய கதைதான். பழக்கப் பட்ட - பலரும் தொட்ட கதைதான்.

எனினும் இந்தக் கதையில் நின்றுகொண்டு கவிதைக் கரம் நீட்டி யாரும் தொடாத மலைமுகடுகளைத் தொட்டிருக் கிறார் சிற்பி.

சிற்பியின் 'அவள்' சிலப்பதிகார மாதவிதான். சிலப்பதி காரத்தில் மாதவியின் விரகதாபம் விவரிக்கப்பட்ட அளவு சமுதாய நிர்ப்பந்தங்களுக்கு ஆளான அவள் வேதனைகள், அடிமனத் துயரங்கள், ஆழமான வடுக்கள் வெளிக்காட்டப் படவில்லை.

'என்ன கவி இந்த
இளங்கோ உரைத்த கவி'

*என்று மாதவிக்காகக் கண்ணதாசன் செல்லமாகக் கோபித்துக் கொண்டதுகூட சரியாகவே படுகிறது.*

*கண்ணதாசன் இப்போதிருந்தால் மாதவியின் மனக் குமுறல் சிற்பியின் 'அவள்' மூலம் வெளிப்பட்டிருப்பதைப் பார்த்து ஆறுதல் அடைந்திருப்பார்.*

*மாதவியின் தாய் சித்ராபதி எப்படி அந்த அந்திக் கடை திறக்கத் துணிந்தாள்?*

'அம்மா நகைகளை விற்றாள்
அப்புறம் காய்கறி விற்றாள்,
தலையில் சுமந்து விறகு விற்றாள்
பிறகு
கற்பை விற்றாள்
எங்களுக்குக்
கால் வயிறு நிரம்பியது'

*என்று சிற்பியின் வார்த்தைகளால் சுடும்போது சித்ராபதியுங்கூட முதலில் கஜானா நிரம்ப அல்ல - கால் வயிறு நிரம்பவே கடை திறந்திருப்பாள் என்று தெரிகிறது. முதல் நாள் போருக்கு நாயகனை அனுப்பி, போனவன் வராமல் புகழ்க் காவிய நாயகன் ஆனதறிந்து மறுநாள் நெற்றியில் திலகமிட்டு வெற்றியுடன் திரும்பி வா என்று மகனை அனுப்பிய வீரத்தாய் போல முன்னமே சோரம்போன தாய் இரவுச் சந்தைக்கு மகளை அனுப்புகிறாள்.*

*இது சிலப்பதிகாரம் முதல் சிற்பியின் காலம்வரை மாதவிகள் வளர்ந்த கதை...*

*இந்த மாதவிகள் தங்கள் பூர்வாசிரமப் பெயரைக் கூடச் சாமான்யமாகச் சொல்ல மாட்டார்கள் - சாமியார்களைப் போல!*

மதுரையில் ஒரு பெயராம்! காஞ்சியில் ஒரு பெயராம்! காசியில் ஒரு பெயராம்!

தெய்வநிலைக்கு உயர்த்திக் காட்டுவதைப்போல் அவர்களைக் கேவலப்படுத்திய சமூகத்தின் முகத்திரையைக் கிழித்துக் காட்டுகிறார் சிற்பி.

> 'இந்த வியாபார சமூகத்தில்
> நீ விற்பனைப் பொருளானதில்
> ஆச்சரியமில்லை'

என்று சமூகத்தின் தடித்த தோலில் சாட்டையை வீசுகிறார் சிற்பி.

இப்போதெல்லாம் 'நாடகத்தில் காவியத்தில் காதல் என்றால் நன்றாம்' என்று சொல்வதுகூட நாகரிகக் குறைவு என்று நினைக்கிறார்கள் சில மெத்தப் படித்த மேதாவிகள்.

காதலா... அது ஆகப் பழைய விஷயம்... அலுத்துப் போன விவகாரம் என்று முகஞ்சுளிக்கிறார்கள் சில விவேக சூடாமணிகள்.

காதல் ஆகப் பழையதுதான். எனினும் அன்றன்று புதுமையாய் மணங்கமழ்வது - ஒரு மலரைப் போல!

காதல் மிகமிகப் பழையதுதான். ஆனாலும் என்றென்றும் உயிர் இயக்கும் ஆற்றல் உடையது - காற்றைப் போல!

சிற்பிக்கு இந்த உண்மை தெரியும்...

எவ்வளவு ஆனந்தமாய் அந்த ஆதிகாலத்து ஒரிஜினல் நெய்மிட்டாயைச் சுவைக்கிறார்... சுவைக்க கொடுக்கிறார்...

ஈருடல் - ஈருயிர் இணையும்போது ஈருடல் - ஓருயிர் என்றாகிறது...

அதாவது ஈருயிர் இரண்டறக் கலந்து ஒரே உயிராகும் பிரயத்தனம்தான் காதல் என்ற அர்த்தமாகிறது.

எப்படிச் சொன்னாலும் - ஜீவாத்மா பரமாத்மாவோடு கலக்கத் துடிதுடிக்கிறது என்று சொன்னாலும் கூட - ஈருயிர் தான் ஒருயிராகிறது என்று உணர்த்தப்படுகிறது.

சிற்பி இங்கே வித்தியாசப்படுகிறார்.

காதலர் இருவருக்கும் இருப்பது ஒரே உயிர்தானாம். உயிரின் ஒரு பகுதி அவன்... மற்றொரு உன்னதமான பகுதி (better half) அவள்... ஒரு பகுதி மற்றொரு பகுதியைத் தேடி அடையத் துடிப்பதுதான் பரிசுத்தமான காதல் என்கிறார்.

> 'தன் மற்றொரு பகுதியைத்
> தேடித் திகைக்கும்
> உயிரின் தவிப்பு...'

காதல் ஆகப் பழையதுதான்.... ஆனால் சிற்பியின் உளி பட்டு அது எத்தனை மாயச் சிற்பமாய் ஒளிவீசுகிறது.

கிரேக்கக் கவிஞன் ஹெஸாய்டு (Hesoid) சொன்னான்! 'முதலில் பாழ்வெளி (Chaos) படைக்கப்பட்டது...... அடுத்து பூலோகம் படைக்கப்பட்டது.... அதற்குப் பிறகு காதல் படைக்கப்பட்டது' என்று!

பூலோகத்தில் சொர்க்கத்தைப் பார்க்க வேண்டும் என்று பலரும் ஆசைப்படுகிறார்கள்.

அவர்கள் எல்லாம் வேகமாக, அதிகமாக, ஆழமாகக் காதலிக்க வேண்டும்!

*காதல் தான் சொர்க்கத்தை பூமிக்கும் கொண்டுவரும் மந்திரம்.*

*சிற்பிக்கு இந்த ரகசியம் தெரியும்.*

*எவ்வளவு சுகமாய்ச் சொல்லுகிறார்...*

''மனித சுவாசங்களில்
இத்தனை சுகந்தமா?
வியர்வையில் இத்தனை நறுமணமா?
ஓ
சொர்க்கம்
பூமியில்தான்! பூமியில்தான்!''

***கா**தலிக்கவும் உழைக்கவும் முடிந்தால் தான் ஒருவன் நல்வாழ்க்கை நடத்த முடியும் என்கிறார் மகான் டால்ஸ்டாய்.*

''காதலிப்பதற்காக உழைப்பு
உழைப்புக்காகக் காதல்''

*என்ற அவரது மணிவாசகம் என்னைக் காந்தமாய்க் கவர்ந்திருக்க வேண்டும். அதன் பாதிப்பாலோ என்னவோ*

''நீ எனக்குக் காதலை தந்தாய்
அது உழைப்பாளியின் வியர்வையைப் போல்
உயர்வானது''

*என்று 'கனவுகளில்' எழுதியிருக்கிறேன்.*

*''இது தர்ம சங்கடமான சிக்கல். இதை அவர் காதலியும் ஏற்றுக் கொள்ளமாட்டாள்; உழைப்பாளியும் ஏற்றுக்*

*கொள்ளமாட்டான்'' என்று வெங்கட்சாமிநாதன் கடுமை யாக விமர்சித்திருந்தார்.*

''ஏழை என்பதற்கு நீ
இனிமேல் பெருமைப்படு
ஏனெனில்
உலகத்தின்
எல்லாச் சுகங்களும்
இனி ஏழைகளுக்கே
சமர்ப்பணமாகப் போகின்றன''

*என்ற சிற்பியின் வரிகளையோ,*

''திரும்பத் திரும்ப நான்
பார்க்கவும் கேட்கவும்
அறவே விரும்பாத
(அவையும்) இரண்டு:

ஒன்று
என் வளநாட்டின்
தீரா வறுமை
இன்னொன்று
உன் தரிசனம் பெறாத
வாழ்வின் வெறுமை''

*என்ற மொழிகளையோ படித்தால் நிச்சயமாகச் சாமிநாதனுக்குத் தர்மசங்கடமாகத் தான் இருக்கும். காதலர்களுக்கு உதவுவதற்காக சிற்பி ஒரு 'தோழரை' வேறு வரவழைத்திருப்பதைப் பார்த்தால் சாமிநாதனுக்கு அதர்ம சங்கடமாகக் கூடத் தோன்றும்!*

*என்ன செய்வது?*

சங்க காலத்திலிருந்தே சாமிநாதனை சங்கடப்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கும்போது நாங்கள் என்ன செய்வது?

பட்டினப்பாலைக் காதலில் கரிகாலன் நுழையும்போது சிற்பியின் பட்டணப்பாலைக் காதலில் ஒரு காம்ரேட் புகக்கூடாதா?

உணர்வு தடுமாறும் என் கடைசி நாட்களிலும்கூட அந்த உயிரோவியம் செல்மாவையும் அந்த லெபனான் தேசத்துத் தேவகவி கிப்ரானையும் என்னால் மறக்க முடியாது.

கிப்ரானின் முறிந்த சிறகுகளைப்போல் என் தாய்மொழியில் ஒரு வசன காவியத்தை - அமரகாவியத்தைப் படைக்க வேண்டும் என்று பல நாட்கள் பரபரத்திருக்கிறேன்... ஒருநாள் ஆசையாய்ப் படைத்தும் பார்த்தேன்.

இதோ... சிற்பி ஊனுருக உயிருருக 'மௌன மயக்கங்களை'ப் படைத்துவிட்டார்...

சிற்பி ஜெயித்துவிட்டார்...

நான்....

இன்னொரு 'ரவுண்டு' ஆடவேண்டும்!

❒

*22.6.1982*

கவிதை நூல்

✡

# சொல்லத்தான் நினைக்கிறேன்

✡

கா.காளிராசா

*'சொல்லத்தான் நினைக்கிறேன்'-*
*என்ற வெல்லத்தால் இனிக்க*
*எழுதிய இந்தத் தொகுதியில்*
*முதலிரு கவிதைகளைப்*
*படித்து முடித்ததும்*
*பரவசப்பட்டேன்;*
*இளங்கவிஞர் கா.காவின்*
*புறமும் அகமும் கண்டேன்;*
*புளகாங்கிதம் கொண்டேன்.*

'ஆரியன் அல்லேன்
என்னும் போதில்
எத்தனை மகிழ்ச்சி
எத்தனை மகிழ்ச்சி'
என்கிறார் புரட்சிக் கவிஞர்,
திருவிடத்தில் தமிழகத்தில்
உருவெடுத்ததற்காக
உள்ளங் குளிர்கிறார்.

கா.கா
புதுக்கவிஞர் என்றாலும்
புரட்சிக்கவிஞர் வழிக் கவிஞர்;
தமிழ் வாழ்க என்று பேசும் கிளிக்கவிஞர்!
அதனால் தான்
'தமிழனாகப் பிறந்ததற்காகப்'
பெருமைப்படுகிறார்!
அது மட்டுமல்ல,
வடநாட்டில்
வங்கத்திலோ மும்பையிலோ
உத்திரப்பிரதேசத்திலோ
மத்திய பிரதேசத்திலோ
இல்லை
இலங்கையிலோ இங்கிலாந்திலோ
அமெரிக்காவிலோ ஆஸ்திரேலியாவிலோ
'ஏதோ ஓர் இடத்தில் தமிழனாய்ப் பிறக்காமல்
தமிழகத்தில் தமிழனாய்ப்
பிறந்ததற்காகப் பெருமைப்படுகிறேன்'
என்கிறார்.
இந்தப் பற்று, தாய்மண் மற்று
எந்தத் தமிழனுக்கும் இருக்க வேண்டும்;
புதுக்கவிஞர் சிலர்
தரைமட்டம் ஆக்கிப் பார்க்கும் தமிழை

வரைமட்டம் உயர்த்திப்பார்க்கும்
கவிஞர் கா.கா
புறநானூற்றைத் தேடிப்
புறப்பட்ட புதுக்கவிஞர்.

அடுத்த கவிதை,
கலித்தொகையில்
சுவைத்துக் களித்த
சுந்தரக் கவிதை
'உன் பெற்றோர் பெயரை
உலக சாதனைப் புத்தகத்தில்
பதிக்க வேண்டும்
உன்னைப் படைத்ததற்காக'
என்கிறார்.
'நீயும் தவறிலை நின்னைப்
புறங்கடைப் போதரவிட்ட
நுமரும் தவறிலார்......
இறையே தவறுடையான்'
என்று பெற்றோரின்
பெருமை பேசும்
சங்கப் பாட்டின்
சாயலில் அமைந்த
தங்கப்பாட்டு இது.

இன்னும் சிற்சில
கவிதைகளில்
தீட்டிக்காட்டும்
விசித்திரங்கள்
சிந்தை கவரும் சித்திரங்கள்,

செந்தமிழ் மங்கையர்
இடுப்பில் தூக்கும் நிறை குடங்கள்;
ஸ்ரீதரின் மறக்க முடியாத
திரைப்படங்கள்.

வெறும் காதலோடு
நின்று விடாமல்
வினை முடிக்கும்
நவயுத இளைஞனின்
நம்புரத் துடிப்பையும்
காட்டுகிறார்
அழகின் சிரிப்பை
பழகு தமிழில்
படைத்துக் காட்டுகிறார்
சாதிச் சங்கங்கள்
சாதிக் கட்சிகள்
இருக்கும் வரை
இங்கே ஏற்றம்
இருக்காது என்ற
உண்மையை உடைத்துக் காட்டுகிறார்
'எனக்கும் உரிமை இருக்கிறது
சாலையில் படுத்துக் கொள்வதற்கு'
என்று
மனித உரிமைகள் மலிவாய்ப் போனது
பற்றி ஓங்கி
நெற்றியில் அடித்துக் காட்டுகிறார்
இருமினால் இறந்து போகும்
உடல்நிலை கொண்ட அம்மாவையும்
ஒட்டிய வயிற்றுடன் உலவும் அப்பாவையும்
தரித்திரத்தாலே சரித்திரம் வளர்க்கும்

தங்கை அக்கா நிலைமைகளையும்
எண்ணி எண்ணி இதயம் துடிக்கிறார்;
கண்ணீர் வடிக்கிறார்.

இன்னும் இன்னும்
எத்தனையோ புனைவுகள்
அவற்றையெல்லாம்
சொல்லத்தான் நினைக்கிறேன்
முடியவில்லை. கை
முயன்றாலும் எழுத முடியாத நிலை

வாசகர்களே....
நீங்கள் மெல்லத்தான் எடுத்துப்
படியுங்கள்
கா.காவின் கவிதை ஒவ்வொன்றும்
கரும்பு.... தை மாதத் தடிக்கரும்பு...
அடிக்கரும்பு
கடியுங்கள், சாற்றைக் குடியுங்கள்.

**கா**.கா. வாழ்க!
அவர் கவிதை சிங்க
நோக்காய் வாழ்க!
சிந்தனையாய் உயர்ந்தோங்கிய
தேக்காய் வாழ்க!
தமிழ் மூச்சு வரும்
மூக்காய் வாழ்க!

❒

***5.2.2002***

சிறுகதைகள்

✡

# பாலையில் ஒரு சுனை

✡

இன்குலாப்

மிகவும் தாமதம்தான் என்றாலும், தமிழ்ச் சிறுகதை இப்போது ஒரு புதிய திசை வழிக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

பட்டுக்கோட்டை சொன்னதுபோல அது ''தானாக மாறி'' வந்துவிடவில்லை, 'குளத்தங்கரை அரசமரத்தி'ல் ஆரம்பித்து சூரியதீபனின் 'மூன்றாவது முகம்' சிறுகதைத் தொகுதிவரை, பலரும் பலவகையில் சோதனைகள் செய்து பார்த்துத்தான் இந்தப் புதிய திசை வழிக்கு வந்து சேர்ந்திருக் கிறது.

'புதியதிசை வழி' என்று நான் சொல்வது வேறொன்று மில்லை; மக்களுக்காக இலக்கியம்; மக்களால் இலக்கியம்; மக்களைக் கொண்டு இலக்கியம் என்பது தான். 'சிறுகதை' என்னும் வடிவத்தில் கவிஞர் இன்குலாப் அந்தப் பணியைப் 'பாலையில் ஒரு சுனை' என்னும் இத்தொகுப்பின் மூலம் மிகவும் சிறப்பாகச் செய்திருக் கிறார் என்பது வரலாற்றுப்பூர்வமாகக் கண்டுகொள்ள வேண்டிய முக்கியமான செய்தியாகும்.

முழுவதும் முழுவதும் அரசியலாய்ச் சில; முழுவதும் முழுவதும் மனிதாபிமானச் சித்தரிப்புக்களாய்ச்சில; இரண்டும் கலந்து சில - இப்படிப் பன்னிரண்டு சிறுகதை களும், ஒரு குறுநாவலுமாக இத்தொகுப்பு அமைந் துள்ளது. அனைத்துக் கதைகளும் நடை, உடை பாவனை களில் மக்கள் இலக்கியமாகவே அமைந்துள்ள தன்மை கவனிப்பதற்கு உரியது. கண்களைத் திறந்து, கருத்தோடு இசைந்து இந்த மண்ணைப் பார்க்க விரும்பும் எந்த ஒரு வாசகனுக்கும் இந்தக் கதைகள், பாத்திரங்கள், வருணனைப் பின்னணிகள் ஆகிய அனைத்தும் அந்நிய மானவை அல்ல. 'மக்களைக் கொண்டு மக்களுக்கான இலக்கியம்' என்ற கொள்கை இந்தக் கதைகளின் மூலம் சாத்தியமாகியிருக்கிறது.

இன்குலாப் சின்னஞ்சிறு வயதில் கிராமத்துச் சூழ்நிலை யில் சந்திக்க நேர்ந்த சமூக அடக்குமுறையிலிருந்து, இன்று இடதுசாரி சிந்தனையாளராக வளர்ந்து மாநிலத்தின் தலைநகரில் வாழ்ந்து அரசின் அடக்குமுறைகளைத் தினந்தோறும் சந்தித்துக் கொண்டிருக்கும் அனுபவங்கள் வரை அனைத்தும் இந்தக் கதைகளில் பதிவு செய்யப் பட்டுள்ளன; இந்தப் பதிவாக்கமே 'மக்களுக்கான இலக்கியம்' என்பதைப் பூரணத்துவப்படுத்தியிருக்கிறது; இது இந்த தொகுதியின் மிக உன்னதமான அம்சம்.

மார்க்சியசித்தாந்தங்கள் கோஷங்களாக வீதிகளில் மட்டுமே உலவி வந்தால் போதாது அவை வீடுகளுக் குள்ளும் சென்று வசிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு; அப்படியானால் அந்தச் சித்தாந்தங்கள் இலக்கிய வடிவத்தில் வழங்கப்பட்டாக வேண்டும்; கவிதையாக, கதையாக, ஏன் சின்னச்சின்னத் துணுக்குகளாகக்கூட.

தீவிர இடதுசாரி எழுத்தாளர்களின் இலக்கியங்களில் 'கோஷங்கள்' மட்டுமே மிஞ்சியிருக்கும் என்று ஒரு குற்றச்சாட்டு ஒரு பட்டிமன்றத் தீர்ப்புரையைப்போல இங்கே திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு வந்துள்ளது. அப்படிப்பட்ட குற்றச்சாட்டை மிகநயமாக மறுதலிக்கும் மிக மென்மையாக முறுவலிக்கும்- அற்புதமான எழுத் தோவியங்களும் இத்தொகுப்பில் உள்ளன. ''பாலையில் ஒரு சுனை'', ''செடிக்கும் கொஞ்சம் பூக்கள்'', ''உம்மாவோட மொகம்'', ''தனிமையில் ஒரு தோழமை'' போன்ற கதைகளை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**அ**ந்தக் காலத்திலே புகைவண்டி இல்லை; காசிக்கு வண்டி கட்டிப் போவார்கள். திரும்பிவரும். இரண்டே இரண்...டு மாடு'' என்று கலைவாணர் 'கிந்தன்' நாடகத்தில் நகைச்சுவையாகச் சொல்வார்கள். அந்தக் காலத்தில் புகைவண்டியும் இல்லை, பேருந்தும் இல்லை, நடந்தோ மாட்டு வண்டியிலோ செல்லும் அவதி! இன்று எல்லாம் இருந்தும் பழனிக்கும் சபரி மலைக்கும் நடை! அப்படி நடக்கும் நபர்கள் ஒரு நாளைக்கு நியாயமான கோரிக் கைக்காக எதிர்க்கட்சிகள் வேலை நிறுத்தம் அறிவித்துப் பேருந்து வரவில்லை என்றால் ஒரு மைல் தொலைவில் உள்ள அலுவலகம் செல்வதற்குக்கூட ''இவனுகளுக்கு

இதுவே வேலையாப் போச்சு, சார்! இதெல்லாம் சரிப் படணும்னா ராணுவ ஆட்சி வரணும், சார்'' என்பார்கள்.

ஒரு மைல் நடப்பதற்கே முணுமுணுப்பவர்கள் ஐயப்பன் பேரால், பழனியாண்டவன் பேரால் மைல் கணக்கில் நடப்பார்கள். கேட்டால் அது நேர்த்திக் கடனாம்! ஆனால் ''பாலையில் ஒரு சுனை'' சிறுகதையில் வரும் கமருக்கும் அவள் பிள்ளைகளுக்கும் மணல் காட்டில், வெயில் வேளையில், பேருந்து வராத அந்தத் தருணத்தில் நடப்ப தற்கு எந்த நேர்த்திக் கடனும் காரணமல்ல; கமருக்கு ஏற்பட்ட இளையவயதின் மலர்ச்சிதான், பழைய நினைவு களில் பாய்ந்து வந்த புத்துணர்ச்சிதான் காரணம்.

நகரத்தில் நல்ல சூழ்நிலையில்கூட ஒருவர்க்கொருவர் உதவ முன்வரமாட்டார்கள். ''இந்த வேணாவெயில்லே[‡] ஏன் நடந்து போறீங்க. அடி பாதகத்தி மக்களா'' என்று அழைத்து, தான் அணிந்திருந்த செருப்புகளை அந்தக் கிராமத்துப் பெரியம்மா கழற்றிக் கொடுக்கும்போது பாலையிலே ஒரு சுனை என்ன - ஒரு சோலை (Oasis)யே வந்துவிட்டதாகத்தானே கமருக்குத் தோன்றும்.

பிரெஞ்சுப் புரட்சியின் போது புரட்சிக்கு எதிரானவர்களை ''கில்லட்டினில்'' வைத்துக் கொன்ற காட்சிகளை அடிக்கடி பார்த்துப் பாரிஸ் மக்கள் உணர்ச்சியற்றுப் போனதை, தாமஸ் கார்லைல் (Thomas Carlyle) பிரெஞ்சுப் புரட்சி பற்றிய தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். கில்லட்டி னில் மனிதர்கள் கொல்லப்படுகிறபோது, பாரிஸ் நகரப்

---

[‡]வேகாத வெயிலிலே வெம்பரந்த கானலிலே' என்பது இராமநாத புரத்தில் ஒரு மரபுத் தொடர்.

பெண்கள் அதைப் பார்த்துக் கொண்டே ''எம்பிராய்ட்'' பின்னிக் கொண்டிருந்தனராம். சமூக அவலங்களைப் பார்த்துப் பார்த்து, மரத்துப் போய் பிறருக்கு உதவ முன் வராத நகரத்து மாந்தரைப் போலவே, வர வர கிராமத்து மக்களும் ஆகி, உதவ முன்வராதது மட்டுமல்ல அகப் பட்டதைச் சுருட்டும் அளவுக்கு சுயநலமிகளாகவும் மாறி விட்ட சூழ்நிலையைச் சொல்கிறது ''விபத்து'' சிறுகதை.

அங்கும் இங்குமாய் நடக்கும் சாலை விபத்துக்கள், மற்றும் வேறுபிற விபத்துக்கள் பற்றியும் பேசி அலுத்துப்போகும் நபர்கள் அல்லது எழுதி எழுதி மாய்ந்து போகும் பத்திரிகைகள், 'விபத்துக் கேஸ்'களுக்கு மட்டுமே ஆஜராகி நஷ்டஈடு வாங்கிக் கொடுத்துக் காலங்கழிக்கும் இடைத்தரகர்கள் - இப்படி இயங்கிக் கொண்டிருக்கும் இந்த சமுதாயத்தில் இன்குலாப், தேசத்திற்கே விளைந்து கொண்டிருக்கும் சேதம் மிகுந்த 'விபத்து' பற்றி இக் கதையில் விவாதிக்கிறார். சவூதிப் பணமும் துபாய்ப் பணமும் நமது நாட்டுக் கிராமங்களுக்குள்ளே நுழைய நேர்ந்ததும், அந்தப் பொருளாதார 'வளர்ச்சி'யின் காரணமாகக் கிராமத்து மனிதர்கள் தங்களது மனித மாண்புகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு வெறும் ஜடங்களாக ஆகிப்போய்விட்டிருப்பதும் இந்த தேசத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கிற ஒரு மௌனமான 'விபத்து' அல்லவா'' என்று கேட்கிறார்! கதைக்கு 'விபத்து' என்றே பெயரிட்டிருந்தாலும் இது சமூகத்தில் ஆண் பெண், சாதி, இனம் என்றெல்லாம் பாராமல் அனைவரையும் பற்றிப் பரவிக் கொண்டிருக்கும் 'நோய்' என்றும் சுட்டிக் காட்டுகிறார்.

'சின்ன வானத்தில்' - என்ற கதையையும் ஏறத்தாழ இந்த 'விபத்து' வரிசையில் வைத்தே விவாதிக்கலாம். 'திரைப் படம்' ஏற்படுத்திய விபத்து பற்றியும் அவ்விபத்து எவ்வாறு

இளந்தலைமுறையினரின் முடியைப் பிடித்து அல்ல மூளையைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கிறது என்பது பற்றியும் மிகுந்த வேதனையோடு சித்திரித் துள்ளார்.

''செடிக்கும் கொஞ்சம் பூக்கள்'' சிறுகதையில், ராவியத்து மல்லிகைப் பூச் செடியில் சில பூக்களைப் பறிக்காமல் விட்டுவிடுகிறாள். ஏன் என்று கேட்கும் மைமூனிடம் காலையிலே ''அந்தப் பூவு செடியிலேயே மலர்ந்திருக்கும். மைமூன் குட்டி! செடிக்கும் கொஞ்சம் பூ வேணாமா''? என்று சிரித்துக்கொண்டே பதில் சொல்கிறாள் ராவியத்து.

நகரத்தில் வைக்கோல் திணித்த கன்றுக்குட்டியை வைத்துப் பசுவிடத்தில் சொட்டுக்கூட விட்டுவைக்காமல் ஒட்டக் கறக்கும் பால்காரன் இல்லையே இவள்! அவன் ஆடவன்! பால் வியாபாரி!! இவளோ, இந்த ராவியத்தோ தாயுள்ளம், கொண்டவள் அல்லவா? அதனால்தான் செடிக்கும் கொஞ்சம் பூக்களை விட்டு வைக்கிறாள்!

'மம்முராம்சா' என்கிற முகமது இபுராகிம் சாகிபு, நாடாளு மன்றத் தேர்தலுக்கு நின்று பெற்ற அனுபவங்களைச் சொல்லும் கதை ''நமது ஜனநாயகத் தேர்தல்'' மீது வெளிச்சம் பாய்ச்சும் அங்கதச் சுவை மிகுந்த கதை! தேர்தல் என்பது பணத்திமிங்கலங்களின் பொழுதுபோக்கு என்று உணர்த்துகிற கதை.

''கொரில்லாக்கள் உருவாக்கப்படுகிறார்கள்'' என்ற கருத்தை, கடற்கரையில் சுண்டல் விற்கும் பையன்களின் வாழ்க்கைப் பின்னணியோடு உரசிப் பார்த்துச் சொல்லுகிறது ''கொரில்லாக்கள்' என்ற கதை.

ஆழமான கருத்துக்களை சிறிது மென்மையான பின்னணி யில் சொல்லும் முயற்சிகள் இவை.

'மக்களுக்கான இலக்கியம்' என்னும் கொள்கையுடைய இன்குலாப் இத்தொகுப்புக் கதைகளின் வழியே சில முக்கியமான கருத்துக்களை விவாதிக்கிறார். 'பொருளா தாரம் மாற்றம் அடையும்போது மாறுகின்ற மனித உறவுகள்; ஒரு கம்யூனிஸ்ட்டின் பணி எங்கிருந்து தொடங்கப்பட வேண்டும்; அரசு என்பதான அடக்கு முறைக் கருவியின் செயல்பாடுகள்; மனித இதயங்களை உடைத்தெறிந்து சின்னாபின்னப் படுத்துவதில் 'மதம்' ஆற்றிவரும் மகத்தான பங்கு - ஆகியவை இத்தொகுதிக் கதைகள் வழியே பேசப்படுகின்றன. 'Non Fiction' என்று சொல்லப்படுகின்ற 'புனை கதை அல்லாத இலக்கிய வகைக்குள் விவாதிக்கப்பட வேண்டிய மிகவும் முக்கிய மான விஷயங்கள் இங்கு 'Fiction' என்ற சிறுகதை வடிவத் திற்குள் விவாதிக்கப்படுகின்றன என்பது இப்போது எழுதுகிறவர்களும், இனி எழுதப்போகிறவர்களும் கவனிக்க வேண்டிய வியக்கத்தக்க அம்சம் ஆகும்.

இடையில் கவிஞர் இன்குலாப் கதைகளில் சுட்டிக் காட்டும் ஒருசில குறிப்புகள் நினைப்பதற்கும் விவாதிப்பதற்கும் உரியன.

இந்திய இடதுசாரி இயக்கம் இன்றுவரை அளித்துள்ள பங்களிப்பு சாதாரணமானது அல்ல; இருப்பினும் ஓர் ஒப்பீட்டு நோக்கில் பார்க்கும்போது ஓரடி முன்னேறி, மூவடி சறுக்கிய் கதையாக இருப்பதையும் மறுப்பதற் கில்லை. அதற்கான காரணம் இடதுசாரி இயக்கச் சிந்தனை யாளர் சிலர் 'புரட்சி' என்பது ஏதோ ஆகாயத்தில், அல்லது மேடைகளில், தெருவில், சாலையில் மட்டுமே இருக்கிறது என்று நினைத்து, தாங்கள் இருக்கும் வீட்டையும், வீட்டில் உள்ளவர்களையும் மறந்து திரிந்தலைவதுதான் என்று சுட்டிக்காட்டுகிறார் இன்குலாப். இயக்கத்தில் பணி யாற்றும் தோழன் ஒருவன், தன் இல்லத்தில் செய்ய

வேண்டிய பணிகளைச் செம்மையாக ஆற்றுவதன் மூலமும் புரட்சி என்னும் ராஜபாட்டைக்கான மகத்தான ஆரம்பத்தை ஆரம்பிக்கலாம் என்று அழுத்தமாகக் குறிப்பிடுகின்றார். இக்கருத்தை 'புதிய மனிதன்' ''மறுபடி வருவார்கள்...'' என்ற கதைகள் உணர்த்துகின்றன.

'மறுபடி வருவார்கள்' என்னும் கதையில் வரும் தோழர் தன்னாசி மறக்கமுடியாத பாத்திரம். குற்றுயிரும் குலை யுயிருமாகச் சிறையிலிருந்து விடுதலையாகி வரும் தோழர் தன்னாசி, தோழர் சேகரன் வீட்டில் தங்கியிருக்கும்போது நடந்துகொள்ளும் பாங்கு, தோழமை உணர்ச்சி, சீர்மை அனைத்தும் நெஞ்சைத் தொட்டுவிடும் சித்திரிப்புக்கள். சின்னச் சின்னச் செங்கல்களின் அடுக்குத் தான் கோபுரம்; சின்னச் சின்ன வேலை முறைகளும் ஒழுங்கமைவுகளும் தான் பெரியதோர் மாறுதலுக்கு வித்துக்கள்; தோழமை உணர்ச்சிக்கு உரிமை கொண்ட கம்யூனிஸ்ட்கள்தான் இவற்றைச் செய்ய வேண்டும், இவர்கள் இல்லையெனில் வேறு யார் செய்ய முடியும்? என்று சொல்லாமல் சொல்கின்ற நேர்த்தியைக் கதையைப் படிக்கும் யாரும் பாராட்ட முடியும்.

எனினும் ''புதிய மனிதன்'' கதையில் புலப்படும் இன்னொரு குறிப்பை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்கெனவே இங்கு பணிபுரியும் இடதுசாரி அணிகளிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டிக் கொண்டு ஒரு ''புதிய மனிதன்'' வருகிறான்; வந்து தனது அரசியல் நடவடிக்கையை முடித்துக் காட்டுகிறான் என்று பேசுகிறது அக்கதை. சட்டமன்ற, பாராளுமன்றங்களின் ஜனநாயக அணுகுமுறையை ஏற்றுக்கொண்டு, தேர்தலில் பங்கு பெற்று அதன்மூலம் மக்களை அணுகுதல் என்ற நிலை பாட்டில் இரண்டு பொதுவுடைமைக் கட்சிகள் இங்கே

இயங்குகின்றன. இந்தக் கட்சிகளை ''அப்புராணிக் கட்சி'' என்று ஒரு பாத்திரம் பேசுவதாகச் சித்தரிக்கப்படுகிறது. ''தன் அமைப்பைச் சாராதவர்களை எல்லாம் எதிரிகளாகப் பார்ப்பது புரட்சிகர ஐக்கியத்தை உருவாக்காது'' என்று வேறொரு கட்டுரையில் கருத்துத் தெரிவிக்கிற (வாழ்வி லிருந்து எனது இலக்கியம் - ப.11) இன்குலாப், அதாவது ஒரு புரட்சிகர ஐக்கியத்திற்காக அனைவரையும் ஈர்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிற இன்குலாப் இப்படி ஒரு குறிப்பைத் தனது பாத்திரத்தின் பேச்சில் அனுமதித் திருப்பது சரியாகப் படவில்லை.

அந்த ''அப்புராணிகள்'' தானே இன்றைக்கும் இடதுசாரி இயக்கத்தினர் அனைவருக்கும் உத்வேகம் தருகிற புகழ்பெற்ற ''தெலுங்கானப்புரட்சி''யைச் செய்தவர்கள்... அந்த 'அப்புராணிகள்'தானே தோல்விகளுக்குப் பிறகும் துவண்டு விழாமல் சோதனைகளுக்குப் பிறகும் சோர்ந்து போகாமல் மக்கள் இயக்கங்களை, மகத்தான போராட்டங் களைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பவர்கள்.

இன்குலாபுக்கு இது தெரியாதா என்ன?

சமுதாய மாறுதலை விரும்புகிற சிந்தனையாளன் ''அரசு'' என்பதை அம்பலப்படுத்தித்தான் ஆகவேண்டும். 'அரசு' என்பது முதலாளித்துவத்தின் அடக்குமுறைக்கான ஒரு கருவி என்பது உண்மை. இந்தியாவில் ஜனநாயகம் என்ற பெயரில் 'அரசு' என்னும் 'அடக்குமுறைக் கருவி' எவ்வாறு மக்களுக்கு எதிராக இயங்குகிறது; அதன் வன்முறைச் செயலாட்டங்கள் 'காவல்துறை' மூலம் எவ்வாறு கட்டவிழ்த்து விடப்படுகின்றன என்பதைச் சித்திரிக்கிற கதைதான் 'கடத்தல்' என்னும் கதை.

கைது செய்வதற்கான உத்தரவு எதுவும் இன்றி, இயக்கத்தினரைக் 'கடத்தி'க் கொண்டு போவதற்குக் காவல்துறை செய்யும் அத்துமீறிய பிரயத்தனம், சின்னச்சாமியை அவ்வாறு ''கடத்திப் போய்விட்டு''க் கடைசியில், ''சின்னச்சாமியைப் பார்க்கவே இல்லை'' என்று சத்தியம் செய்யும் சாகசம் கதையில் ஓர் அசாதாரண மான இறுக்கத்துடன் பதிவாகியிருக்கிறது![‡] எடுத்துக் கொண்ட கருவுக்கு ஏற்பக் குறைந்த எண்ணிக்கையிலான பாத்திரங்கள், கதைப் பின்னல், காட்சிச் சித்திரிப்புக்கள் அனைத்தும் ஒரு புள்ளியில் இயங்கி உருவத்திலும் சிறப்புற அமைகிறது'கதை. நள்ளிரவில் கதவை இடிக்கும் சப்தம் கேட்டுச் சின்னச்சாமியின் தாயார் கதவைத் திறக்கிறாள்; வாசலில் நிற்கிறார்கள் போலீஸ்காரர்கள். ''அவள் கதவைத் திறந்தபோது - காக்கி உடையில் அரசாங்கம்'' என்று எழுதுகிறார் இன்குலாப். போலீஸை வெறும் போலீஸாக மட்டுமே இப்போதும் பாமரத்தனமாக நினைப்போரை நெஞ்சில் குத்தும் எழுத்து! இறுதிவரை நெஞ்சுரத்தோடு போலீசுக்காரர்களோடு போராடும் சின்னச்சாமியின் பாத்திரப்படைப்பு உணர்ச்சிமிக்கது! தன்னைக் கடத்திப் போக அத்துமீறி முயற்சி செய்யும் காவல்துறையினருடன் சின்னச்சாமி நடத்தும் உரையாடல் அற்புதமானவை.

---

‡ இன்குலாப் மட்டுமல்ல, சமூகப் பிரக்ஞையுள்ள இனம் படைப் பாளிகள் தங்கள் எழுத்தில் காவல் துறையின் வன்கொடுமையை அம்பலப்படுத்தத் தவறமாட்டார்கள் என்பதற்கு உதாரணமாக அண்மையில் வெளிவந்த ஜெயமோகனின் ரப்பர் நாவலில் எபன் என்னும் போர்க்குணம் மிக்க இளைஞனுக்கு நேர்ந்த அவல முடிவைக் குறிப்பிடலாம். ''போலீஸ் வண்டியில் தூக்கிவீசப்பட்ட எபன் பிறகு வீடு திரும்பவில்லை. தாங்கள் அவனைக் கைது செய்யவேயில்லை ‷ன்று போலீஸ் கூறிவிட்டது.''

மதம்' என்பது ஏறத்தாழ ஒரு குறுநாவல் போன்று அமைந்துள்ள கதை. இந்த மண்ணில் வாழும் மனிதர் களை, அவர்களது உணர்வுகளைச் சிறிதும் ஈவு இரக்க மின்றி இந்த 'மதம்' ஏன் இப்படி வெட்டி வெட்டிச் சாய்க் கிறது? என்று இடித்துரைக்கும் கதை. மதமான பேய் பிடித்த மனிதர்கள் சிலர் மானுடத்தை ஏன் இப்படிக் குரூரப் படுத்துகிறார்கள் என்று சாடுகிற கதை. மதமே பிரிவு; பின் அதற்குள்ளும் ஒரு பிரிவு ஏன் என்று கேட்கிற கதை.

'மதம்' என்னும் அடர்ந்து படர்ந்து நிற்கும் இந்த நச்சு மரத்தை சுலபமாய்ப் பிய்த்து எறிந்துவிட முடியுமா?, கனமான கோடரியால் பிளக்க முயன்றால் முடியும் என்று உணர்த்துகிறார் இன்குலாப்.

மதப் பிரச்சனையை வைத்து எழுதுவது கத்திமேல் நடப்பது போன்றது. இதில் கதாசிரியரின் வெற்றி இளப வாசகரிடையே மனிதநேயத்தை மதம்-சாதி ஒழிந்த சமுதாய நல்லிணக்கத்தைப் பற்றிச் சிந்திக்கத் திசை வழியைக் காட்டுவதில் தான் உள்ளது. அதை இன்குலாப் திறம்படவே செய்திருக்கிறார். அதுவும் மிகவும் சமன் செய்து சீர்தூக்கிய நோக்குடன் (Balanced View) ''மதம்'' கதையைக் கொண்டு செல்வதில் வெற்றி பெற்றிருக்கிறார். கதையிலே வருவது போன்ற கலவரங்கள் நிகழும்போது கண்ணுக்குத் தெரிவது ''மதம்'' ஒன்று தான். ஆனால் கண்ணுக்குத் தெரியாத ''சாதி'' எனும் கிருமியை மைகிராஸ்கோப் மூலம் நமக்குக் காட்டுகிறார்.

முன்பெல்லாம் பெரியவர்கள்தான் பழமைவாதிகளாக, சாதிப் பாகுபாடு - மத வேறுபாடு பார்ப்பவர்களாகத் திகழ்ந்தார்கள். இப்பொழுது இளைஞர்களிலும் சிலர் அப்படி ஆக்கப்படுகிறார்கள். இதற்கென்றே சில தலைவர்கள் வந்துவிடுகிறார்கள். அந்தத் தலைவர்கள்

தாங்கள் எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் பிழைப்பு நடத்த வேண்டும். அதற்கு இயக்கம் தொடங்க வேண்டும். எனவே இளைஞர்களை சேர்க்க வேண்டும்! இளம் வயதில், ரத்தம் எளிதில் சூடாகிற வயதில் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய பேச்சுகள் எளிதில் கவர்ந்திழுக்கும் என்று தெரிந்து அதற்கான செய்திகளைப் பரப்புவார்கள். அதில் தலையாயது, அடுத்த மதத்துக்காரன் தன் மதத்துப் பெண்ணைப் பலாத்காரம் செய்துவிட்டான் என்பது; அது நரம்புகள் ஒன்று சேர்கிற இடத்தில் தட்டுவது போல உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழச் செய்யக்கூடியது.

அத்தகைய ஒரு சம்பவம் தான் வேலாயியை, யாரோ ராம்படத்திற்கும் உடல் சுகத்துக்கும் ஆசைப்பட்டுக் கொலை செய்ய, அதை இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவன் செய்தான் என்று இந்து இளைஞர்களைத் திரட்ட கோபால் முனைந்தது. பி.ஏ. பட்டம் பெற்ற படித்த இளைஞர்கள் எப்படி வழிநடத்தப்படுகிறார்கள் என்பதற்கு உதாரணம். ஒரு முஸ்லீம்தான் வேலாயியை கற்பழித்துக் கொலை செய்ததாக அப்படி ஒரு சந்தேகத்தை மட்டனேந்தல் கிராமத்திலே நாங்களும் பரப்பிவிட்டிருக்கோம்'' என்று கோபால் சொல்கிறபோது அந்த இயக்கத்தின் தலைவர் பொய்ப்பிரச்சாரம் செய்யலாமா? என்று தடுக்கவில்லை. மாறாக ''இந்த டெம்போவை வளர்க்கணும்'' என்று எரிகிற தீயில் எண்ணெய் வார்க்கிறார்.

இந்தப்பக்கம் உள்ளூரில் கோபால், வெளியூரில் இருந்து முரளிதரன் என்றால் அந்தப் பக்கம் உள்ளூரில் சீனிக்கட்டி, வெளியூரிலிருந்து நாகூர் பாபா என்று தலைவர்கள் துவேசத்தீயைத் தூண்டிவிடும் பணியைச் செய்கிறார்கள். இவர்கள் வளர்க்கிற தீயில் எரியத் தொடங்குகிற குடும்பங்கள் எத்தனை? குடும்பங்களுக்குள்ளே ஒற்றுமை

குலைக்கப்படுகிறது தம்பி, அக்காளை அடிக்கிறான். ஒரு முஸ்லீம் இன்னொரு முஸ்லீம் அடிபடுகிற போதும் காக்க முன்வராமல் வேடிக்கை பார்க்கிறான்.

இரு வேறுபட்ட வெறியர்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பில் சிக்கியவர்கள் வைத்தியர் அமானுல்லா குடும்பமும் பரமு - பச்சைக்கிளி குடும்பமும்.

> **''ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணும் உண்மையா இருந்தா அப்பொறம் ஏன் கல்யாணம்னு அக்காவும் சொல்லுது. மச்சானும் சொல்றாங்க.''**

என்று சொல்கிற பச்சைக்கிளியின் தம்பி பரமு - யூசுப்பை மச்சானாக அங்கீகரித்த பரமு - 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்ற தொல்காப்பியம் தோன்றுதற்கு முந்திய தமிழர் சமூக வாழ்க்கை நெறியை, அதைப் படிக்காமலே ஏற்றுக் கொண்டவனாகத் திகழ்ந்தான். ஆனால் படித்த, அதுவுப் பி.ஏ., படித்த கோபால் அல்லவா அதற்கு மாறாக மதவெறி உணர்ச்சிகளைத் தூண்டி போதை ஏற்றிவிடுகிறான். மதவெறி போதை ஏற்றப்பட்டான் ஒன்றுமறியாத பரமு என்பதை இன்குலாப் முன்கூட்டியே பச்சைக் கிளி மூலம் காட்டுகிறார்.

> **''ஒருவேளை அப்பா மார்ரி குடிக்கத் தொடங்கி விட்டானா?''**

குடிக்காவிட்டால் என்ன; மதவெறியும் ஒரு போதைதான். அதனாலன்றோ மார்க்ஸ் அதனை அபினி என்றார்.

மதவெறியைத் தூண்டுகிற தலைவர்கள் பாரதியைக் கூட விட்டு வைக்கமாட்டார்கள். சைத்தான் வேதம் ஓதுகிறது என்பதைப் போல இவர்கள் பள்ளித் தலமனைத்தும்

கோயில் செய்குவோம்'' என்ற பாடலைக்கூடத் திரித்துக் கூறத் தயங்கமாட்டார்கள் என்பதையும் இன்குலாப் நேர்த்தியாகச் சித்திரிக்கிறார். இந்து முஸ்லீம் ஒற்றுமைக் காக இதுவரை எத்தனை கதைகள் வந்துவிட்டன. இது புதியதல்லதான். ஆனால் இந்தப் பிரச்சனையை கண்ணுக்குத் தெரியாத அதன் ஆணிவேரைக் கண்டு எழுதியுள்ளவர் இன்குலாப் மட்டுமே அப்படிப்பட்ட அந்த வேர்கள் எவை? எந்த மதவெறித் தாக்குதலும் யாரை நோக்கிப் பாய்கின்றன? கீழ்மைப்படுத்தப்பட்ட சாதியாரை யும் ஏழ்மைப்படுத்தப்பட்ட மக்களையும் நோக்கித்தான். எந்த மதத்திற்கு மாறினாலும் சமுதாயத்தில் அவன் மதிப்புநிலை அவன் சாதியைப் பொறுத்தும் அவனின் பொருளாதார நிலையைப் பொறுத்தும்தான்.

மட்டனேந்தல் கிராமத்தவர்க்கு ஒருபுறம் பாகைக்குளம் முஸ்லீம்கள் துபாய்ப் பணத்தில் கொழிக்க, தாங்கள் இன்னும் எடுபிடிகளாக வாழவேண்டியுள்ளதே என்ற ஆற்றாமை... அது பொறாமையாக உருவெடுக்கத் தூண்டி விடுகிற இயக்கங்கள் வேறு.

> **''அவர்களுடைய உறவில் இருப்பவனுக்கும் இல்லாதவனுக்கும் இடையே தோன்றும் பகைமை உணர்வும் வளர்ந்து வந்தது.''**

அந்தப் பகையை கோபாலும் அவனுடைய இயக்கத் தலைவர் முரளிதரனும் நன்றாகப் பயன்படுத்திக் கொள் கிறார்கள்.

ஆனால் இல்லாதவன், இந்துவில் மட்டுமல்ல, இஸ்லாத் திலும் இருப்பதை மறந்துவிடுகிறார்கள். அந்த இல்லா தவன்தான் மதக்கலவரப் பொறி பறந்ததுமே தாக்கப்படு கிறான்.

1948ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் நாள் காந்தியடிகள் சுடப்படுகிறார். இராமநாதபுரம் நகரில் அரண்மனை வாசலில் இருந்து ஒரு கூட்டம் புறப்படுகிறது. எங்கு? நகரின் கிழக்கே முஸ்லீம்கள் அதிகம் வசிக்கும் வெளிப் பட்டணத்தில் உள்ள சின்னக்கடைத் தெருவிற்குத் தான். முதலில் அவர்கள் கண்ணில் பட்டது, ஒரு இஸ்லாமியரின் கொல்லுப் பட்டறை. தென்னம்கூரை வேய்ந்த அந்த ஏழைத் தொழிலாளியின் கொல்லுப் பட்டறைக்குத் தீ வைக்கப்பட்டது. ஆனால் மாளிகைகளில் இருந்தவர் களுக்குப் பாதிப்பு இல்லை. இவையெல்லாம் வரலாற்று ஏடுகள் அல்ல; நம் காலத்தில் முன்னால் கண்ட நிகழ்ச்சிகள். சகதியில் புரண்டு எழுந்த எருமை மாடு அரிப்பைப் போக்கிக் கொள்ளக் கல்லில் உரசிக் கொள்வது போல' பறப்பயலுக'' 'துலுக்கப் பயலுக' என்று பயலுகள் சேர்த்துத் திட்டுவதில் திட்டுகிறவனுக்குத் தினவைத் தீர்த்துக் கொண்ட சுகம் கிட்டலாம். ஆனால் அது பிரச்சனையைத் தீர்த்துவிடுமா? தீர்த்துவிடாது என்று தெரிந்துதான் செய்கிறான், வெறியை வளர்ப்பதற்காக.

ஆனால் அப்படிப்பட்டவர்களிடையிலும் வித்தியாசமான வர்களைப் படைத்து உலவ விட்டிருக்கிறார் இன்குலாப்; செல்லத்தேவரும் வைத்தியர் அமானுல்லாவும் எடுத்துக் காட்டுகள். ஆள் வலிமையும் தோள் வலிமையும் உடைய செல்லத் தேவரிடம் ஆர்ப்பரித்து வந்த இளைஞர் கூட்டம் கொஞ்சம் அடக்கியே வாசிக்க நேர்கிறது.

வைத்தியர் அமானுல்லா நாகூர் பாபாவால் எவ்வளவு கொம்பு சீவி விடப்பட்டும் கொந்தளித்து எழாத கொள்கையாளர்.

ஆதியில் சோலையூரை விட்டு இங்கு ஏன் வந்தார் அமானுல்லா? அவர் முன்னோர்கள் நாசுவன் (முடி

திருத்துவோர்) வகுப்பிலிருந்து மதம் மாறியவர்கள். இந்த மார்க்கத்திற்கு வந்த பின்னரும் அதைச் சொல்லி ஜமாத்தில் சண்டைக்கு வந்தான் சேவுரான் என்ற தங்கப்பல் பணக்காரன். ''நாயகம், நாசுவன் வேறே மரைக்கா வேறே என்றா உனக்கு மார்க்கத்தைச் சொல்லித் தந்தார்'' என்று கேட்கக் கூடியவர்கள் குறைவாகத்தானே இருக்கிறார்கள்.

''இஸ்லாத்தின் சமத்துவம் ஒன்று தான் உலக ஏற்றத் தாழ்வுகளுக்கு ஒரே தீர்வு என்று அவரும் நம்பினார்'' அப்படி நம்பிய வைத்தியர் அமானுல்லாவையே முஸ்லீம் என்று பாராமல் நாசுவன் என்றல்லவா பார்த்தார்கள்.

மதத்தை வைத்து முன்னணி அமைப்பவர்கள் மதக் கோட்பாடுகளை முன்னணியில் நிறுத்துவதில்லை என்பதை இன்குலாப் கதைப் போக்கில் குறிப்பிட்டுச் செல்கிறார்: கைலி கட்டியிருக்கும் இந்து இளைஞர்களைப் பார்த்து ''உங்கள் அடையாளத்தை இழந்துவிட்டீர்கள்'' என்று முன்னணித் தலைவர் முரளிதரன் சொல்லும்போது அந்த மதத்திலே கைலி கட்டுவதை விட 'பாண்ட்' போடுபவர்கள் அதிகம் என்ற ஞாபகம் வந்தால் ''ஓ? நீங்கள் வேதத்தில் இறங்கிவிட்டீர்களே'' என்று கேட்பாரோ எனக் கேட்கத் தோன்றும். பரமு போன்றோர் புத்தியோடு இருக்கும்போது ''யூசுப் இந்து மதத்திற்கு வந்தால் எந்தச் சாதிலே சேர்த்துக்கிறது?'' என்று கேட்டதற்கு கோபாலால் நிறைவான பதில் தர முடியவில்லை.

தேவை என்று வருகிறபோது இந்து - முஸ்லீம் என்று பாகுபாடு வர முடியாது. எந்த முசுலீமை துலுக்கப் பயல் என வைதார்களோ, அந்த முஸ்லீம் மதத்தைச் சார்ந்த வைத்தியர் அமானுல்லாவிடம் பரமுவின் அக்காள் பச்சைக் கிளியை கொண்டு செல்ல நேர்ந்தபோது, நெற்றியடி போல, அவள் கேட்கிறாள்;

> ''யாரு வீட்ல போயி நிக்க வேண்டியிருக்கு, பாத்தீங்களா?''

என்று இப்படி வேறுபாடு பார்க்காத வைத்தியரின் குடும்பம் இந்தப் புயலால் சிக்கித் சீரழிகிறது.

இறுதிக் கலவரத்துக்கு ஒரு பொறியைக் கிளப்பிவிட்டான், பகர்தீன். அவன் ஊதிவிட்ட தீப்பொறி ஜெயிலானி ராக்கம்மாள் பேருந்துச் சண்டை. இருதரப்பும் மோதலில் இறங்கிப் பலர் சாதலில் முடிகிறது.

மனிதர்களை மட்டுமா, வெட்டி எறிந்தனர்? ஒன்றுபட்ட இரண்டு உள்ளங்களையுமல்லவா வெட்டி எறிகின்றனர். யூசுப்பும் பச்சைக்கிளியும் இந்து முஸ்லீம் ஒற்றுமை வேருக்கு நீராகத் தங்கள் குருதியைப் பாய்ச்சுகின்றனர்.

> **நெடுங்கால வறட்சியில் பிளந்து போய்க் கிடந்த உவர் மண் சிவந்து நனைந்தது.**

இதற்காகவா அன்று -

> ''செம்புலப் பெயர் நீர் போல
> அன்புடை நெஞ்சம்
> தாம் கலந்தனவே''

என்று பாடினார்? செம்புலப் பெயர் நீர் அல்ல; செந்நீரே சிந்தினர் - ஒற்றுமைப் பயிர் வளர.

இன்னும் எத்தனை யூசுப்களையும் பச்சைக்கிளிகளையும் பாழும் சாதி மத வெறி பலி வாங்கப் போகிறதோ?

இந்தத் தொகுப்பின் கடைசிக் கதையான 'மதம்' மதக் கலவரத்தின் உண்மையான கோர முகத்தைக் காட்டும் வித்தியாசமான கதை.

கரிசல் வட்டார எழுத்தாளர்கள் எண்ணிக்கையில் அதிகம். தரவைக்காடும் மணல்வெளியும் பனை விடலியும் உடை மரமும் மட்டுமே எங்கு நோக்கினும் மைல்கணக்காகப் பரந்து கிடக்கும் மண்டபம் கீழக்கரை தங்கச்சிமடம் போன்ற ஊர்களின் மண்மணக்கும் இராமநாதபுர வட்டார எழுத்தாளர்கள் அபூர்வம். கந்தர்வனின் சாசனத்தைத் தொடர்ந்து வெளிவரும் இன்குலாபின் இந்தப் பாலையில் ஒரு சுனையில் இராமநாதபுர மண்ணின் மணம், கடற்கரையின் ஈரப்பசை, கீழக்கரை மக்களின் அரபுத் தமிழ் எல்லாம் இயல்பாய் வெளிப்படுகின்றன.

'லக்கு (இடம்) சம்சயம் (சந்தேகம்) கடையார் (மீனவர்) தொடுப்பு (கள்ளத் தொடர்பு) பெண்கடல் (அலை குறைந்த கடல்) ஆண்கடல் (ஆர்ப்பரிக்கும் கடல்) புளுக்கை (கீழ்பட்டவர்) கடையப் பெட்டி ( கூடை) என்றெல்லாம் பாத்திரங்கள் வார்த்தைகளை விதிக்கும்போது, மூதேவி, பாதகத்தி, கழிச்சலிலே போவா' என்று வசைப் பாடும்போது சரியான இராமநாதபுரத்துக்காரர் என்று இன்குலாபை அடையாளம் கண்டு கொள்கிறோம். (நானும் இராமநாதபுரத்துக்காரன்ததான்... ஆனால் சரியான அல்ல...)

''கொக்குக நெறங்கூட மாறிப் போயிடுச்சு. நல்ல மழைக் காலத்துலே ஒடைமரத்துலேருந்து றெக்கையை விரிச்சா சலவைக்குப் போட்டு எடுத்த சால்வையை விரிச்சமாதிரி அப்படி வெள்ளையால இருக்கும். இப்போ றெக்கைக்கு மேலே மட்டுமில்லே அடியிலேயும்கூட சாம்பல் நெறமா மங்கிப் போயிடுச்சு, இன்னும் கொஞ்ச நாளு மழை தண்ணி இல்லேன்னா இந்தக் கொக்கெல்லாம் நெறம் மங்கிக் கருப்பாய் போனாலும் போயிடும்'' என்று ஆக்ரா எண்ணெய் சுத்திகரிப்பாலைப் புகையால் நிறம் மங்கி வரும்

தாஜ்மஹாலைப்போல, மழை வளமில்லாது நிறம் மங்கிப் போன கொக்குகளை இன்குலாப் கண்முன் நிறுத்தும் போது, இராமநாதபுர வட்டாரத்தில் சத்தான ஆகாரமின்றி நிறம் மங்கிப்போன மகளை, ''புள்ள கறுக்குளிச்சுப் போச்சு'' என்று மருகும் தாயுள்ளம் வெளிப்படுகிறது.

1961... நான் சிவகங்கைக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்த வருடம். ஒருநாள் என் நண்பர் ஆங்கிலப் பேராசிரியர் பிரேமச்சந்திரனின் ஆங்கில வகுப்பை உரிமையோடு எடுத்துக்கொண்டு, பைரனின் Isles of Greece என்னும் அற்புதமான ஆங்கிலக் கவிதையைத் தமிழில் - புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு புரியும்படி நடத்திவிட்டு 'உங்களில் யாரேனும் இந்தக் கவிதையை வைத்துத் தமிழில் ஒரு கவிதை படைத்துக் காட்டுங்களேன்' என்று வேண்டினேன். மறுநாள் முன் வரிசையில் அமர்ந்து கவனமாகப் பாடங்கேட்ட அந்த மாணவர், உயிர்த் துடிப்புள்ள கவிதை ஒன்றை என்னிடம் நீட்டினார். படித்து வியந்து பாராட்டினேன். அந்த மாணவர் இன்குலாப் தான்.

கிரேக்க மக்களின் எழுச்சிக்குப் பாடிய பைரன் கவிதையைத் தமிழில் படைத்துத் தந்த அந்த நாளில் இருந்து இன்றுவரை - 'ஒடுக்குமுறைக்கான கருத்து அரசு உட்பட எங்கிருந்து வந்தாலும் அதை நான் எதிர்க்கிறேன்' என்று சுபமங்களா நேர்காணலில் குறிப்பிடும் இந்த நிமிடம் வரை - இனகுலாப் படைப்புக்கள் எதிர்ப்பு இலக்கியமாகவே (Protest Literature) அமைந்து தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய ஒளி பாய்ச்சிக் கொண்டிருக் கிறது.

சமூக மாற்றத்துக்காகப் பேனாப் பிடித்தவரின் எழுத்துக்கள் எதிர்ப்பு இலக்கியமாய்த்தானே இருக்க முடியும்?

''இலக்கியத்தின் வேலை என்ன?'' என்று கார்க்கியைக் கேட்டபோது, ''வேறென்ன போராட்டம்தான்; அதுதான் இலக்கியத்தின் முதல் வேலை'' என்று சுட்டிக் காட்டினார்.

இன்குலாப் கார்க்கியின் சீடர்...

புதிய திசை வழியைத் தேடி வரும் இன்றைய படைப் பாளிகள் பலருக்கும் இன்குலாப் ஆசான்... எனக்கும்தான்.

❒

***5.7.1992***

கவிதை நூல்

✡

# *பாரதி கைதி எண் 253*

✡

சிற்பி

*தஞ்சையில் இருக்கிறேன்*
*என் இளைய மகன் கதிர்*
*அகரம் இல்லத்தில்;*
*வாத நோயால் வதைபட்டுப்*
*படுத்துக்கிடக்கிறேன்....*
*தொலைபேசியில் கதிர்*
*பேசிக் கொண்டிருக்கிறான்....*
*'அப்பா வந்திருக்கிறார்' என்கிறான்.*
*தொலைபேசியை*
*என் கையில் கொடுக்கிறான்.*

'சிற்பி பேசுகிறேன்'
என்ற குரல் கேட்கிறேன்
'எப்படி இருக்கிறீர்கள்' என்கிறார்
'ஏதோ இருக்கிறேன்' என்கிறேன்....

'மகாகவி பாரதி
கடலூர்ச் சிறையில்
இருந்த இருபத்தைந்து நாட்களில்
அவர்
எண்ண ஓட்டம்
என்னவாய் இருந்திருக்கும்
என்பதை எண்ணி
எழுதியிருக்கிறேன்
ஒரு நெடுங்கவிதை....
அது இன்று வரும்
அகரத்துக்கு'
படித்துப் பாருங்கள்
முடிந்தால்
ஒரு சில பக்கங்கள்
எழுதுங்கள்
உங்கள் கருத்தை
என்கிறார்.... நான்
ஒப்புக் கொள்கிறேன்.

கொஞ்ச நேரத்தில்
கூரியரில்
வருகிறது அந்த நெடுங்கவிதை

உறையைப் பிரித்து
உள்ளேயிருந்த
கவிதையின்

தலைப்பைப் பார்த்ததும்
மலைப்படைகிறேன்....

**'பாரதி - கைதி எண் 253'!**

உடனே
என் கவிதைகளை நிறுத்திவிட்டு
சிற்பியின் கவிதையை
கணினியில்
வடிக்கச் சொல்கிறேன்
அச்சடிக்கச் சொல்கிறேன்
அடித்து முடிந்ததும்
பிழைதிருத்தும் நோக்கில்
படித்துப் பார்க்கிறேன்
மெய் சிலிர்க்கிறேன்
விழிகளின் விளிம்பில்
கண்ணீர் வந்து
நிற்கக் காண்கிறேன்....

இது
சிற்பி எழுதிய கவிதையா?
இல்லை இல்லை......
மகாகவி பாரதி
கூடுவிட்டுக்கூடு பாய்ந்து
சிற்பி உடலில் புகுந்து
உயிரில் கலந்து
இயற்றிய கவிதை இது
என்று நினைக்கிறேன்

பாரதி வார்த்தையைக்
கடனாய் வாங்கி
'ஆச்சரியம்' இது

என்று நாவால்
இசைக்கிறேன்

வீர வியட்நாம்
தீரத் தலைவன்
ஹோசிமின் எழுதிய
'சிறைக் குறிப்புகள்'
படித்திருக்கிறேன்
அதற்கு இணையாய்
எழுதப்பட்டிருக்கும்
நூல் இது என்று
மதிக்கிறேன்

சிற்பி
வானம்பாடி இயக்கத்தில்
வந்ததொரு ஞானம்பாடி

அவர்
கவிஞர் மட்டும் அல்லர்;
கவிக்கோ அப்துல் ரகுமான் போல்
அறிஞரும் கூட....
பழந்தமிழ் நூல்முதல்
பாப்லோ நெரூடா
படைத்த நூல் வரை
படித்தவர்....
பாரதி பற்றி
வெளி வந்துள்ள
நூல்களையெல்லாம்
படித்தவர்
கரைத்துக் குடித்தவர்

பாங்குறப் பயின்ற ஆங்கில மொழியில்
பாரதியை வள்ளத்தோளுடன்

ஒப்பீடு செய்து,
முனைவர் பட்டம் பெற்றவர்
மலையாள மொழியில்
கலையாழம் கண்டவர்
விருதுகள் பல கொண்டவர்
'பாரதி என் குரு'
என்று
பறைசாற்றிய
மற்றும் ஒரு பாரதிதான்

அவரால் தான்
அந்த மகாகவியின்
மனத்தை ஊடுருவிப்
பார்க்க முடியும்
இந்த உண்மை
இந்த நூலைப் படிக்கும்
எந்த வாசகனுக்கும்
எளிதில் புரியும்

அநேகமாய்
கவிஞர் தேனரசன்
கையெழுத்துப் பிரதியை
படிக்கவில்லை என்றால்
நான் தான் முதல்வாசகன்

**ம**துச்சேரியாய் இருந்த ஊரைப்
புத்தம்
புதுச்சேரியாய்
மாற்றிய மகாகவி
அங்கிருந்து ஆற்றாது
விடை பெறுவது....

கடலூர் எல்லையில்
கைது செய்யப்படுவது....

'ஆழ்வார் பிரபந்தம் இருந்தால்
ஏழுஜென்மம் கூட
இந்தச் சிறையில் இருப்பேன்'
என்று சொல்வது

'சாகும் வயதில் போகும் காசிக்கு
வாழும் வயதில் புறப்பட்டேன் நான்'
'இசுலாமியர் கடையில்
எனக்குப் பிடிக்கும் தேநீர்'

'எட்டப்பன் உறவு
எட்டியானது'
இப்படி இயம்புவது
'மதுரை சேதுபதி பள்ளியில்
தமிழாசிரியன் ஆனது'
வேகமாக விலகிப் போனது....

'நன்றி கெட்ட நாடு இது
என் தோழன் சிறை மீண்ட போது
ஏனென்று கேட்கவில்லை
ஏறெடுத்துப் பார்க்கவில்லை'
என்று நெஞ்சில்
ஒன்றிய சிதம்பரனார்க்காய்
மெழுகாய் உருகியது....

'மித்திரனும் நானும்
இரட்டைப் பிறவிகள்'
பத்திரிகை பிறந்த ஆண்டில்தான்
பிறந்தேன் நான் எனப்
பெருமைப்படுவது

'வில் இருக்கிறது
வீக்கிட நாண் இருக்கிறது
குறிபார்க்க அம்பு இருக்கிறது
எடுக்கவும் தொடுக்கவும்
வழிதான் இல்லை....
தான் எழுதிவைத்த
நூல்களை
அச்சிட்டு வெளியிட
ஆள்தான் இல்லை
என்று
கூறி நெஞ்சம் குமுறுவது....

'திலகருக்கு மறுப்பல்ல காந்தி
தியாகத்தின் தொடர்ச்சி
சந்தனத்தின் மேல் வைத்த
குங்குமம்' என்று
தீவிரவாதியாய்த்
திகழ்ந்து பின்
காந்தி தாசனாய் உயர்ந்தது

'புதிய காலத்தின் குரலாக
உதய காலை ரேகையாய்'
இன்னொரு ஆத்திசூடி
இயற்றித் தந்தது....

தன்னைப் போலவே பாடும்
தாசனின் முதல் பாடலைக்
கேட்டுக் கிறுகிறுத்து
'எழுக நீ புலவன்'
என்று புகழ்ந்தது....

'என்னுடைய மகள்
தாழ்த்தப்பட்ட இளைஞருடன்

கடல் கடந்த நாட்டுக்கு
ஓடிப்போய் அங்கிருந்து
அப்பா நான் சவுக்கியம்
என்று எழுதும் கடிதம்
எத்தனை பேரின்பம்'
என்று நெருங்கிய
தோழர்களிடம்
துணிச்சலாய் உரைத்தது

'இழிந்த சாதியில்
பிறந்த ஒருவன்
எல்லா வேதமும்
ஞானமும் பெற்றாலும்
சிருங்கேரி மடத்தின்
தலைவராக முடியுமா?''
இந்த வினாவை
பெரியாருக்கு முன்பே
'இந்து'வில் எழுப்பியது

தன் அன்புச் சீடன்
கனகலிங்கத்துக்கு
பூணூல் அணிவித்து
புதிய பிராமணரை
உதிக்கச் செய்தது....

மகாத்மா காந்தியும்
விவேகானந்தரும்
மதிப்புக்குரியவர்கள்
என்றாலும் அவர்கள்
விதவைத் திருமணம்
வேண்டாம் என்று

கூறுவதிலிருந்து
வேறுபட்டு நின்றது.

காலில் விழுந்து
கௌரவம் பெறலாம்
என்று சொன்ன
அரவிந்தரிடம்
ஆசி பெறுவதற்கு
நின்று கொண்டிருக்காமல்
சென்று விட்டது

'யாப்புக்கள் மட்டும் கற்று
யந்திரப் படைப்புகள் செய்வதைவிட
தீப்புகுந்தாற்போல் வசனத்தில்
தீட்டிய கவிதை நன்று' என்று
வசன கவிதை புதுக்கவிதை
வளரச் செய்ய
வழிகாட்டியது

'தேச விடுதலைக்கு மட்டுமோ
தேவி அவதாரம்
மாதர் விடுதலைக்கும்
அவளே மாதா'
என்று பாஞ்சாலியை
சுதந்திர தேவியாய்
இதந்தரும் விதத்தில்
எண்ணிப் பார்த்தது....

'மாமேதை லெனினிடம்
தனியன்பு எனக்கு
ருஷ்யப் புரட்சியை
யுகப்புரட்சி என்றேன்

அந்தக் கவிதையால்
தமிழுக்கும் ஒரு 'புரட்சி' என்னும்
சொல்லாட்சியைத்
தந்தேன்' என்று
பெருமிதத்துடன் பேசியது

'கனக்கும் செல்வம்
நூறு வயது
இவையும் தர நீ
கடவாயே'
என்று
மணக்குள விநாயகரிடம்
இணக்கமாய்க் கேட்டது

சிறையிலிருந்து
விடுதலை பெற்று
வெளியே வந்து
சுதந்திரக் காற்றை
சுவாசித்து நின்று
'உயிர் நன்று
சாதல் இனிது'
என்று
'காட்சி' கவிதையில்
எழுதிய
கடைசி வரியை நினைத்துப் பார்த்தது....

இப்படி எத்தனை நினைவுகள்
எத்தனை எத்தனை நிகழ்வுகள்

நான் தொட்டுக் கொடுத்தது
கொஞ்சம்.
விட்டு விட்டது நூறையும் விஞ்சும்.

சிற்பி செதுக்கிய
அற்புதச் சிலையாம்
இச்செஞ்சொற் கவிதையை
பாரதி அன்பர்கள்
படித்துப் பார்க்கட்டும்
பரவச மடையட்டும்

என் அனுபவம்....
படித்து முடித்ததும்
நோயில் கிடக்கும் நான்
நூறு வயது வாழும்
பேறு பெற்றதாய் மகிழ்கிறேன்
நெஞ்சம் நெகிழ்கிறேன்

'வரிந்து கட்டிக் கொண்டு
வருகிறேன் சாவே!
தெரிந்து கொண்டென்முன்
நிற்காதே நீயே'' என்று
நிமிர்ந்து கவிதை படைக்கிறேன்

'கைதி எண் 253'
சிற்பியின்
புகழ் மகுடத்தில்
ஒரு புதிய மாணிக்கம்
செயற்கையாய் எழுந்த
செய்யுள் அல்ல
இயற்கையாய் மலர்ந்த
இலக்கியம்.

பாவேந்தர் இன்றிருந்தால்
இந்த நூலைப் படித்துவிட்டு

முன்பொரு முறை....
பாராட்டியது போல
'நாலூறிப் போனேன் நான்'
என்று சிற்பியைக்
கட்டித் தழுவுவார்
தட்டிக் கொடுப்பார்....
அந்த பாக்கியம்
எனக்கு
எப்படியோ கிடைத்திருக்கிறது

முன்பொரு முறை
என் கனவுகளுக்குப்பின்
கருவாகி உருவான
'மௌன மயக்கங்களை'
வாசித்துவிட்டு
என்னை
சிற்பி ஜெயித்து விட்டார்
என்று எழுதினேன்

இன்று எழுதத் தோன்றுகிறது...
சிற்பி ஜெயித்துக் கொண்டே
இருக்கிறார். எப்போதும் இருப்பார்

சிற்பி வாழ்க!
இனிது வாழ்க! நெடிது வாழ்க!

மகாகவி புகழ் வாழ்க!
வண்ணத் தமிழ் வாழ்க!

❐
***25.12.2001***